கட்டழகி

# ருக்மணி தேவியின்

சரும பாதுகாப்பு

லக்ஸ்

டாய்லட்

சோப்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 MAR 1949
MADRAS

''என் அழகுபடுத்தும் முறை வெகுசுலபம்'' என்கிறார் சௌந்தரியவதி ருக்மணி தேவி. ''நான் தவறுமல் லக்ஸ் டாய்லட் சோப்பினுல் கழுவுகிறேன், அவ்வளவுதான். அதன் சுறுசுறுப்பான நுரை எனது மேனியை பட்டைப்போல் வழவழப்பாகவும் மிருதுவாகவும் செய்கின்றது. உங்களுடைய மேனியை மலர்ச்சியுடனும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ள நீங்கள் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகியுங்கள்.''

# லக்ஸ் டாய்லட் சோப்

*சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!*

LTS. 190-50 TM

## உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உணமையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகர்முமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

**மைசூர் சில்க்**

மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

## உங்கள் குழந்தைக்கு புத்துயிர் அளியுங்கள்

ஜம்மியின்-லிவர்க்யூர் ஒன்று தான் சிகிச்சைக்கு உள்படாது என்று கைவிடப்பட்ட குழந்தைகளின் பலவிதமான கட்டி வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது. டாக்டர்களின் முழு நம்பிக்கைக்குப்பாத்திரமாக வுள்ளது.

**ஜம்மியின் லிவர்க்யூர்**

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு அற்புதமருந்து.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்

மைலாபூர், மதராஸ் (போன் நெ. 8139).

தெப்பகுளம் திருச்சினப்பள்ளி. பெரிய தெரு கும்பகோணம். பெங்களூர்,

பம்பாய் 4. (போன் நெ. 41593) மற்றும்: லக்னோ, கல்கத்தா.

J. 237 Tamil

ஆஸ்த்மாவை

குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா; ச்வாஸ்ஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

**புரோஹித ஸ்வாஸஹாரி**

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR



## அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

**NO LICENCE NEEDED**

உங்கள் வாழ்க்கை, ஆஸ்திகள், மரியாதைமுதலியவற்றை திடீரென எதிர்க்கும் முரடர்களிடமிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

வீட்டிலும், வன்போஜனம் அல்லது பிரயாணத்திலும், உறுதியும் இலேசானதுமான இந்த ரிவால்வர் எப்பொழுதும் உங்கள் உற்ற துணைவன் என்பதை நிரூபிக்கும். தானாகவே சுற்றிவரும் 6 ரவைகள் வைக்கக்கூடிய அறையுடன் கூடியது. அமெரிக்காவில் செய்யப்படும் உண்மைப் பிஸ்டலைப்போலவே தோற்றமளிக்கிறது. இதன் எடை 15 அவுன்ஸ்கள். நீளம் 9 அங்குலம். அதிபயங்கரமான சப்தத்துடன் நீளமாகக் கோடுபோல் ஒளி கக்கிக்கொண்டு வெடிக்கிறது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் அனுப்புங்கள். செலவில்லாத இம் மெய்க்காப்பாளன் இல்லாதிருக்காதீர்கள்.

விலை ரவைகளுடன்

நெ-111 ரூ. 5/- நெ-333 ரூ. 7/8

நெ-222 ரூ. 6/8 நெ-444 ரூ. 8/8

B-555 ஸ்பெஷல் வெள்ளி முலாம்
விலை ரூ. 10—0—0

அலாதியாக 4 டஜன் ரவைகள்
விலை ரூ. 4—8—0

பிஸ்டல்பெட்டி பெல்டுடன்
விலை ரூ. 5—0—0

உபயோகிக்கும் எண்ணெ புட்டி 1-க்கு
விலை ரூ. 1—0—0

**HINDUSTAN TRADERS**

P. Box No. 286—KANPUR (U. P)

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
௮௮௮௯
சென்னை-600 008

யாவரும் விருப்புடன் தேர்ந்
தடுத்து வாங்கும் சிறந்த சமயல்
ாதனம் பதார்த்தங்களின் சுவையை
ம் மணத்தையும் பன்மடங்கு பரி
ளிக்கச் செய்கிறது. சுத்தமான
ாவர எண்ணெயில் சாஸ்த்ரீய
முறையில் தயாரிக்கப்பட்டு வீட்டுத்
தேவைக்காக காற்று புகாத லீவர்
மூடியுடன் 2, 5 பவுண்ட் டின்களில்
எல்லா முக்ய வியாபாரிகளிடமிருந்
தும் கிடைக்கும்.

JL
m211,N36
N49.15.11

# காமதேனு

## வனஸ்பதி

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன்
லிமிடெட், மேட்டூர் அணை, சேலம்

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்
சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்
திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜெண்டுகள்
அலைட் இண்டஸ்ட்ரியல்
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
120, அரண்மனைக்காரத் தெரு
மதராஸ்

சர்வதாரி
மலர் 15

# சக்தி

மாசி
இதழ் 11

மெய்ப் பொருள் காண்பது அறிவு

O

## சர்வோதயம்

தேசத்தின் பிதா மகாத்மா காந்தியின் வருஷாப்திக தினத்தைக் கொண்டாடினேம். இந்திய அரசியல் வானில் பிரகாசித்துக்கொண்டிருந்த சூரியனின் அஸ்தமனத்தால், இந் நாடு எப்படிப்பட்ட அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது என்பதைக் கண்ணாரக் கண்டோம். ஆனால் பூத சடலத்துடன் மறையக் கூடியவாறு மகாத்மா தம் சாதனைகளை நிர்மாணிக்கவில்லை. அவருடைய சாதனைகள் அமரத்துவம் பெற்றவை. அந்தச் சாதனைகளின் வடிவில், வளர்ச்சியில், மகாத்மா இன்றும் என்றும் நம்மிடையே அமரராக இலங்கப் போகிறார். அதனால் அவருடைய சிரார்த்த தினத்தை சர்வோதய நாளாக நாம் கொண்டாடியது பொருத்தமான காரியமே.

சர்வமும் உதயமாகும், சகல நற்கருமங்களும் தொடங்கும், புனித தினத்தையே நாம் கொண்டாடியதாகக் கருதவேண்டும். மகாத்மாவை நினைவு கூறும்போது, பொதுநலமும், பொதுநலப் பணியுமே நமக்கு ஞாபகத்துக்கு வர வேண்டும். இதைத்தான் அவரும் எதிர் பார்த்தார் ஒவ்வொருவரும் பிறரைப் பார்த்து, "காந்தியடிகளைக் கோயில் கட்டிக் கும்பிடுவதினாலும், அவருடைய நினைவு நாளைக் கொண்டாடுவதினாலும் அவருக்கு உண்மையான காணிக்கையைச் செலுத்திவிட முடியாது; அவருடைய கொள்கைகளைக் கடைப் பிடிப்பதே அவருக்குச் செலுத்தும் உண்மையான காணிக்கை" என்று உபதேசம் செய்வது அதிகமாகிவிட்டது. ஆனால் உபதேசம் செய்பவர்கள் மகாத்மாவின் கொள்கைகளைத்தாங்களிடம் கடைப்பிடித்து, அவற்றை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்று திட்ட வட்டமாக மக்களுக்கு எடுத்துக் கூறுவதே முக்கியமான காரியம் என்பதை உணர வேண்டும். அப்படி உணர்ந்து எல்லோரும் செயலில் இறங்கும் போதுதான் சர்வ நலங்களும் உதயமாகும் நாளை நாம் கொண்டாடியதாகக் கொள்ளமுடியும் என்று கூற விரும்புகிறோம்.

# காலச்சுழல்

**"எஸ். எஸ். சிதம்பரம்":**

சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன், அடிமைப்பட்டிருந்த இந்தியாவில், ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை தொடங்கிய அரும் பெரும் முயற்சி இன்றைய சுதந்திர இந்தியாவில் பூரணத்துவம் எய்தியிருக்கிறது. 1906-ம் வருஷத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியைப் பலரின் ஒத்துழைப்புடன் தொடங்கினார். ஸ்ரீ வ. உ. சி. அந்நிய ஏகாதிபத்தின் தாக்குதலினால் கம்பெனி குலேவுற்றது. இன்று இந்திய அரசாங்கத்தின் தலைமைப் பீடத்தில் வீற்றிருக்கும் ராஜாஜியே டில்லியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்து, மிகுந்த கோலாகலமான வைபவத்துக்கிடையே ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை தொடங்கிய பணிக்குப் புத்துயிர் கொடுத்திருக்கிறார். எப்படியும் காலம் மாறுதல் பெற்று தமிழ் நாட்டின் வீரப்புதல்வனின் முயற்சிக்கு வெற்றி சேர்க்கவேண்டிய நிலைமை வந்துவிட்டது.

நாற்பது வருஷங்களுக்குமுன் இந்திய அரசியல் அரங்கத்தில் மகாத்மா காந்தி பிரவேசிக்கவில்லை. மக்களிடையே சுதந்திர ஆர்வம் பிறந்திருக்கவில்லை. இந்தியாவின் பாழ்பட்ட நிலைக்குக் காரணம் பிரிட்டிஷ் அரசாங்கம்தான் என்ற உண்மையைக்கூடத் தெரிந்து கொள்ளவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏகாதிபத்தியத்தை விரட்டவும், சுதந்திர இந்தியாவை சரியான அஸ்திவார பலத்தோடு ஸ்தாபிக்கவும் வேண்டும் என்று ஒரு மனிதனுக்கு ஆர்வம் பிறப்பதே அபூர்வம். ஆனால், இந்தியாவில் உள்ள மகா பெரிய தலைவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக, முன்னோடியாகப் பல அடிப்படையான காரியங்களைச் செய்தார் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை. 'வெள்ளையனே வெளியே போ' என்ற சுதந்திர கோஷத்தை முதல் முதலில் இந்தியாவிலேயே பகிரங்கமாக முழங்கியவர் ஸ்ரீ வ. உ. சி. தான் என்றால் மிகையாகாது. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் பிறப்பிடமாகிய திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு சமயம் மக்களின் கிளர்ச்சிக்குப் பயந்து வெள்ளையர்கள் இருப்பிடத்தை விட்டு ஓடியதும், ஒடி ஒளிந்ததும் உண்டு. அதற்கு அடுத்தபடியாக, பொருளாதார ரீதியில் இந்தியாவை ஒடுக்கி, இந்தியாவில் வறுமை நிலவச் செய்து, இந்நாட்டுச் செல்வத்தை எல்லாம் அந்நிய அரசாங்கம் சுரண்டிக்கொண்டு போவதற்கு அந்நிய ஆட்சியுடன் அந்நிய வர்த்தகமும் முக்கியமான காரணமாகும் என அறிந்தார் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை. அதனால் அந்நிய ஆட்சியைத் தகர்ப்பதற்கு சுதந்திர ஆவேசத்தை மக்களுக்கு ஊட்டிவரும் சமயத்தில், இந்தியா பொருளாதார பலம் பெற்று, பிற நாட்டினரின் சுரண்டலுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும் என்ற அவசியத்தையும் உணர்ந்தார். அதன் விளைவே சுதேசிக் கப்பல் கம்பெனி. இந்தியாவுக்கென்று சொந்தக் கப்பல் கம்பெனி இருந்தால், இந்தியாவின் வர்த்தக

மும், பொருளாதாரமும் பரிபூரண மாக அந்நியன் கையில் அகப்பட்டுத் தவிக்காது அல்லவா?

மிகவும் சிரமப்பட்டு இரண்டு கப்பல்களைப் பலரின் ஒத்தாசையுடன் வாங்கி, கப்பல் ஓட்டினார் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை. இதைக் கண்டு கதி கலங்கியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் மீது அரசியல் குற்றங்களைச் சுமத்தி அவரைச் சிறையிலிட்டது. அவர் சிறை புகுந்தார்; கப்பல் கம்பெனியும் அழிந்துவிட்டது. அவர் சிறை சென்ற பிறகும், மக்களிடம் போதிய விழிப்பும், சுதந்திர உணர்ச்சியும் நிலவியிருந்திருக்கும் என்றால், கப்பல் கம்பெனி தொடர்ந்து நடைபெற்றிருக்கும்; அத்துடன் இந்தியாவை விட்டு வெள்ளையனை ஓட்டும் மகத்தான போராட்டத்திற்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைதான் தலைமை வகித்திருப்பார்.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைப் பற்றி நினைக்கும்போது இரண்டு விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன: அதாவது அவர் அந்நிய வர்த்தகத்தையும், அந்நியரின் பொருளாதார ஆதிக்கத்தையும் ஒழித்துவிட விரும்பியது ஒன்று; மற்றொன்று அந்நியருடைய ஆட்சி எந்த ரூபத்திலும் இந்தியாவில் நிலைத்திருக்கக் கூடாது என்று அவர் பாடுபட்டது. இந்த இரண்டு முற்போக்கான ஆர்வங்களை முதலில் பிறப்பித்துவிட்டவர் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைதான்.

இன்று இந்தியா அரசியல் சுதந்திரம் எய்திவிட்டது. இந்த அளவில் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் லட்சியம் பூர்த்தியாகி விடாது. அந்நியர்கள் அரசியல் ரீதியில் இல்லாவிட்டாலும் வியாபார ரீதியில் இந்தியாவைச் சுரண்ட எத்தனித்தால் அந்த முயற்சிகளையும் முறியடித்துவிட வேண்டும். பிறருடைய தலைமையை எந்த வகையிலும் ஏற்காமல் இந்தியா பரிபூரண சுதந்திர நாடாக என்றென்றைக்கும் இலங்க வேண்டும். மக்களிடையே பொருளாதாரக் கஷ்டம் தீர்ந்து, சுபிக்ஷம் பெருக வேண்டும். இந்த உன்னதமான லட்சியங்களுக்காக மக்கள் பாடுபட வேண்டிய அவசியத்தை ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் ஞாபகார்த்தமாக, அலைகடலில் சுற்றிவரும் "எஸ். எஸ். சிதம்பரம்" என்ற கப்பல் நினைவூட்டிக்கொண்டே இருக்குமாக!

**நல்ல மசோதா:**

இப்பொழுது விவாதத்திலிருந்துவரும் இந்துமத தர்ம சொத்து பரிபாலன மசோதாவைக் கொண்டுவந்ததற்காக சென்னை அரசாங்கத்தை மிகவும் பாராட்ட வேண்டும். பக்தியையும், சமய ஞானத்தையும் பரப்புவதற்கென்று இருப்பதாகச் சொல்லிக்கொண்டு கோவில்களிலும், மடங்களிலும் உள்ள நிர்வாகஸ்தர்கள் செய்துள்ள மோசடிகள் கணக்கில் அடங்காது. இந்த விபரங்களை சென்னைப் பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பகிரங்கமாகத் தெரியப்படுத்தியிருக்கிறார். கலாச்சாரம் மதம் முதலியவற்றைப் பரப்புகிற ஸ்தாபனங்கள், பொருளாதார பலம் பெற்று, மில்களைப் போலவும், ஜமீன்களைப் போலவும் மாறிவிட்டால், அவற்றின் நிர்வாகஸ்தர்கள் சுயநலப்

பேர்வழிகளாக மாறுவது இயல்பு. இந்தச் சுயநலப் பேர்வழிகளின் பகல் கொள்ளையையும், அக்கிரமங் களையும் இதுவரை விட்டுவைத் ததே தவறு. இப்போது இந்த அக்கிரமங்களை ஒழிப்பதற்காக மசோதா கொண்டு வருவதை மக்கள் ஆசிகூறி வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த மசோதாவை நிறைவேற்றி கோவில்களையோ மடங்களையோ யாரும் இடிக்கப் போவதில்லை. அவற்றின் நிர்வாகத்தில் அரசாங் கத்தின் உஷாரான கண்காணிப்பு மட்டும் இருந்துவரும். நிர்வாகம் யோக்கியமாக நடந்துவரும். இந்த நல்ல காரியத்தைச் சிலர் எதிர்க்கக் கிளம்பியிருக்கிறார்கள். 'மதத் துக்கு ஆபத்து வந்துவிட்டது' என மிரட்டுகிறார்கள். சட்ட ரீதி யான பல சிக்கல்களைக் கொண்டு வந்து புகுத்துகிறார்கள். இவர்க ளுடைய கூச்சலைக்கண்டு மிரள வேண்டியதே இல்லை. எந்தக் காலத்திலும் நல்ல காரியம் செய் யும்போது இப்படிப்பட்டவர்கள் இடைஞ்சல் செய்யாமல் இருந்தது கிடையாது. அப்போதெல்லாம் இவர்களுடைய கூச்சலுக்குச் செவி சாய்க்காமல்தான் நல்ல காரி யங்களைச் செய்திருக்கிறார்கள். இப் போதும், இந்த எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், நம் சென்னை சட்ட சபையும், மந்திரி சபையும் இந்த மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றி பொதுஜனப் பாராட் டைப் பெறவேண்டும் என்று கூறு கிறோம்.

**சாப்பாடு இனாம்!:**

இவ்வருஷம் ஜூன்மாதம் முதல் சோவியத் ருஷ்யாவில் ஓர் அதி சயம் நடக்கப் போகிறது. அதா வது, அந்நாட்டு மக்கள் பணச் செலவு செய்யாமல் இனமாகச் சாப்பிடப் போகிறார்கள். யார் வேண்டுமானாலும் எந்த கோவாப ரேடிவ் ஸ்டோரிலும் நுழைந்து எவ்வளவு ரொட்டி வேண்டுமானா லும் இனமாக வாங்கிக் கொள்ள லாமாம். மனித சரித்திரத்திலேயே இது ஒரு அற்புதம் என்று தான் சொல்ல வேண்டும்.

சோவியத் நாட்டு அரசாங் கத்தைப் பற்றி எத்தனையோ அபிப் பிராய பேதங்கள் இருக்கலாம். இருந்தபோதிலும், மேற்கூறியது போன்ற அரிய காரியத்தை சாதித்ததற்கு சோவியத் அரசாங் கத்தின் விரோதிகளும் அதைப் பாராட்டியே ஆகவேண்டும். இந் தத் தகவலைத் தெரிவித்து "ஸ்வ தந்திரா" பத்திரிகையில் அழகாக எழுதியுள்ள ஸ்ரீ கே. ஏ. அப்பாஸ், ஜார்மன்னனை சிம்மாசனத்தி லிருந்து தள்ளியதைவிட, கூட்டுப் பண்ணைகளை உண்டாக்கி சோவியத் முறையை அமலுக்குக் கொண்டு வந்ததைவிட, பெரிய காரியத்தை சோவியத் மக்கள் செய்துவிட்டார் கள் என்று பாராட்டுகிறார்.

**அனுதாபம்:**

கடந்த சில தினங்களுக்குள் ளாக பிரபல பத்திரிகையாளர்க ளான ஸ்ரீ ஜி. ஏ. நடேசன், ஸ்ரீ எஸ். ஏ. பிரெல்வி, ஸ்ரீ ஜே. ராம லிங்கம் ("ரூலி"), ஆகியோரும் தமிழ் நாட்டின் காங்கிரஸ் பிரமுக ராகிய ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியாரும், தவுல் வித்வத் மேதையான ஸ்ரீ நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் கால மாகிவிட்டார்கள். அன்னார் குடும் பங்களுக்கு நம்ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*'பகிர்ந்து உண்டால் பசியாறும்' என்பது பழமொழி மட்டுமல்ல; அதுதான் சரியான பொருளாதார ஒழுக்கம். அது பற்றிய சில சிறந்த கருத்துக்களைக் காந்திஜி கூறுகிறார்.*

# பொருளாதார ஒழுக்கம்

**மகாத்மா காந்தி**

பொருளாதாரத்துக்கும் ஒழுக்கத்துக்கும் நான் ரொம்பவும் கச்சிதமான தீர்க்கமான வரையறை கிழிக்கவில்லை. தேசத்தின் அல்லது தனி மனிதனின் நல உரிமையைப் பாதிக்கும் பொருளாதாரம் பாபகரமானது; ஒழுங்கீனமானது. எனவே ஒரு நாட்டின் பொருளாதாரம் மறு நாட்டை விழுங்க எண்ணுவது ஒழுக்கக் கேடானது.

ஒழுக்க விதிகளைப் புறக்கணிக்கும் பொருளாதாரம் உண்மையானதல்ல. பொருளாதாரத்தில் அஹிம்சையைக் கையாளுவதென்பது சர்வ தேசிய வர்த்தகத்தில் ஒழுக்க முறையை வலுயுறுத்துவதற்கே யாகும்.

நாம் நமது தேசிய சக்தியைத் திரட்ட விரும்புகிறோம். இந்த சேவையை, உற்பத்தியைச் சிறந்த முறையில் நடத்துவதனால் மட்டும் செய்ய முடியாது; விநியோகத்தையும் சிறந்த முறையில் செய்ய வேண்டும். எனது லட்சியம் சம பங்கு விநியோகம்தான். எனினும் எனக்கெட்டியவரை அது சாத்தியமானதாகப் படவில்லை. எனவே, நேர்மையான விநியோகத்துக்காக நான் உழைக்கிறேன்.

எனது உத்தேசப்படி இந்தியாவிலோ உலகிலோ எவரும் உடை உணவுக் கவலையால் வருந்தக் கூடாது. அதாவது ஒவ்வொருவருக்கும் இந்த இரு பொருளும் கிட்டும் வகையில், தொழிலும் கிடைக்க வேண்டும். ஆனால், இந்த லட்சியம் பரிபூர்ணமாக நிறைவேற, அன்றாடத் தேவைக்கான உற்பத்திச் சாதனங்கள் பொது மக்களின் ஆட்சிக்குள் வந்து தீரவேண்டும். கடவுள் அளித்த காற்றையும் நீரையும் போல இவையும் இலவசமாய்க் கிடைக்க வேண்டும். இந்தப் பொருள்கள் பிறரைச் சுரண்டி வாழ வைக்கும் யந்திரமாகிவிடக் கூடாது. இவற்றைத் தனி சொத்துரிமையாக்குவது எந்த தேசமானாலும், எவருக்கானாலும் நியாயமற்றதேயாகும். இந்தக் கொள்கையின் புறக்கணிப்பே இன்று நாம் நம் நாட்டில் மட்டுமல்லாது, வெளி நாட்டிலும் கண்கூடாகக் காணும் ஏழ்மைக்குக் காரணமாகும்.

**மகாத்மாவின் வருஷாப்திக தினத்தன்று ரேடியோ மூலம் பேசும் போது உலக மக்களுக்கும், தேச மக்களுக்கும் இங்கே காணும் செய்தியை விடுத்தார் நம் பிரதம மந்திரி. இச்செய்தியைச் சிரமேற் கொண்டு பணியாற்றுவது மக்கள் கடமை.**

# உலகுக்கு ஒரு செய்தி

**பண்டித நேரு**

**சோத**னை நிறைந்த கடந்த வருஷத்தின் பளுவை நீங்களும் நானும் சுமந்தபின் இன்று நான் மீண்டும் உங்களிடம் பேசுகிறேன்.

அந்த ஜோதி மறைந்துவிடவில்லை. ஏனெனில், முன்பு எப்போதையும் காட்டிலும் அது அதிகப்பிரகாசத்துடன் பிரகாசிக்கிறது. நமது கௌரவத்திற்குப் பாத்திரமான நம் தலைவரின் செய்தி நமது காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இருந்தபோதிலும் நம்மில் பலர் அடிக்கடி கோபம், தப்பபிப்பிராயம் காரணமாக அந்த ஜோதியைப் பாராது கண்களை மூடிக்கொள்கிறோம்; அவரது செய்தியைக் கேளாது காதுகளைப் பொத்திக்கொள்கிறோம்.

இன்று நாம் நமது கண்களையும் காதுகளையும், இதயங்களையும் திறந்து பூரண மரியாதையுடன் அவரைப் பற்றி நினைப்போமாக! எல்லாவற்றிற்கும் மேலாக அவர் எதற்காக வாழ்ந்தார், நாம் என்ன செய்ய வேண்டுமென அவர் விரும்பினார் என்று நினைத்துப் பார்ப்போமாக!

இன்று மாலை நம்மில் அநேகர் இந்தியா முழுவதிலும், நகரங்களிலும் கிராமங்களிலும் காந்திஜியின் செய்தியை மீண்டும் கேட்டோம்; அதையனுசரித்துப் புதிதாகப் பாடுபட நாம் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டுள்ளோம்.

பிளவுபட்ட, வேற்றுமை நிறைந்த இன்றைய உலகத்திற்குத் தேவைப்படுவதுபோல முன்பு எப்போதும் அவரது செய்தி இவ்வளவு அதிக அவசியமாக இருக்கவில்லை. மீண்டும் மீண்டும் தனது பிரச்னைகளை பலாத்காரம் துவேஷம் ஆகிய வழிகள் மூலம் தீர்த்துக் கொள்ள இவ்வுலகம் முயன்று திரும்பத் திரும்ப தோல்வியடைந்து படு நாசத்தில் வந்து நின்றிருக்கிறது. நமது கசப்பான சொந்த அனுபவத்திலிருந்து ஒரு படிப்பினையை நாம் கற்றுக்கொள்வது நலம்.

நமக்கு நாமே ஆபத்து தேடிக் கொள்ளாமல் நாம் தார்மீக முக்கியத்துவத்தை அசட்டை செய்துவிட முடியாது. உலகிலும் இந்தியாவிலுள்ள தீமைகளுக்கு துவேஷம் சண்டை இவற்றின் மூலம் பரிகாரம் தேடக் கூடாது. ஆனால் சமாதான முறைகள், ஒத்துழைப்பு, சுதந்திரத்திற்கும் சத்தியத்திற்கும் சுயநலமற்ற சேவை செய்தல் ஆகியவற்றின் மூலமே பரிகாரம்

காணவேண்டும். இந்திய மக்களனைவரிடையேயும் ஒற்றுமையை நாம் வளர்க்க வேண்டும். வகுப்பு வேற்றுமை பிறப்பு ஜாதி மத வேற்றுமைகள் இவற்றை ஒழிக்க முயலவேண்டும்.

நம்மைப் பற்றிக் கெட்ட எண்ணம் கொண்டுள்ளவர்களுக்கும் நமது நட்புறவுக் கையை நீட்டி அழைத்து அவர்களது நல்லெண்ணத்தைப் பெறவேண்டும்.

உலக நாடுகளுக்கு நாம் சொல்லுவது இதுதான் :

உங்களில் யாருடனும் எங்களுக்கு எவ்விதமான சண்டையும் கிடையாது. உலகின் மக்கள் அனைவருக்கும் சுதந்திரம், சுபிட்சம் இவற்றை அளிக்கும் மகத்தான காரியத்தில் உங்களது நட்புறவான ஒத்துழைப்பையே நாங்கள் நாடுகிறோம். நாங்கள் பிறர்மீது ஆதிக்கம் செலுத்தவோ அல்லது பிறரைப் பயன்படுத்திக் கொள்ளவோ விரும்பவில்லை. ஆனால் என்ன வந்தாலும் சரி, எங்கள் சுதந்திரத்தை எங்கள் முழு பலத்துடன் பாதுகாத்தே தீருவோம். இன்று எங்கள் குரல் பலவீனமாக இருக்கலாம்; ஆனால் அந்தக் குரல் வெளியிடும் செய்தி இருக்கிறதே, அது பலவீனமானதல்ல. சத்தியத்தின் பலம் அச்செய்திக்கு உள்ளது. அது என்றென்றும் உயிருடன் ஜீவித்திருக்கும்.

இந்த எண்ணத்துடனும், பிரதிக்ஞையுடனும் நம்மை விட்டுச் சென்ற—ஆனால் இன்னமும் நம்முடனேயே இருக்கும்—நமது பிதாவுக்கு நாம் வணக்கம் செலுத்துவோமாக!

நமது தாய் நாட்டுக்கே சேவை செய்வதென இன்று நாம் மீண்டும் நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம். இந்தியாவின் நற்பெயருக்கும் நமது பிதாவின் நற்பொருளுக்கும் பாத்திரதாரிகளாக நடந்து கொள்வோமாக!

கடந்த ஒரு வருஷ காலத்தில் இந்திய சர்க்கார் செய்துள்ள வேலைகள் அனந்தம். எனினும் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் எவ்வளவோ உள்ளன.

கடந்த வருஷத்தில் இந்தியா முன்னேறியுள்ளதெனவே நான் நினைக்கிறேன். ஆனால், மக்களனைவரும் ஏகோபித்து முயற்சி செய்து சர்க்காருடன் முழு மனதுடன் ஒத்துழைத்திருந்தால் முன்னேற்றம் மிகவும் அதிகமாக இருந்திருக்கும். தேசத்தில் ஏராளமான வளங்கள் உள்ளன. ஆனால் அவற்றைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ள அரும் பாடு அவசியம்.

ஒருபுறம், மகிழ்ச்சி பொருந்திய நவ இந்தியாவை நிர்மாணிக்கச் சிலர் பாடு படுவதையும், மறுபுறம் இந்த வேலைக்குச் சிலர் இடைஞ்சல்கள் செய்வதையும் இன்று நான் பார்க்கிறேன். இதுபோன்ற காலத்தில் நாட்டின் முன்னேற்றத்தில் குறுக்கிடுபவன் நமது நண்பனல்ல; பரம விரோதியாவான். தற்போதைக்கு நமது உரிமைகளை நாம் மறந்துவிட்டு நமது கடமைகளை நிறைவேற்றி வைப்பதில் ஒரு மனதுடன் பாடுபடுவோம். கடமைகளின்றி உரிமைகள் கிடையா என்பதை உரிமைகளுக்காகக் கூச்சல் போடுவோர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

*இரண்டாம் மனிதனின் தன்மையைக் கவனிக்காமல் அவனிடம் அன்புபாராட்டிக் கொண்டிருக்கும் தகைமையைப் பற்றி மகாத்மா கூறியது என்ன? ராஜாஜி என்ன கூறுகிறார்?*

# ஒருதலை அன்பு

○

**சி. ராஜகோபாலாச்சாரியார்**

**1947** முடிவில்தான் இந்தியா விடுதலை பெற்றது. ஆனால் மோசமான துரதிருஷ்டத்திற்கும் மனக்கசப்பிற்கும் இலக்காயிற்று. இது "பாபு"வுக்கு மிகவும் மனக்கஷ்டத்தை அளித்தது. இச்சமயம்தான் இவர் பூர்ண கீர்த்தியில் மேலோங்கினார்.

28 வருட காலமாக இவரிடம் எனக்கு அலாதி மரியாதையும் அன்பும் இருந்து வந்தது. ஆனால் 1947-ன் கடைசி மாதங்களில்தான் இவர்பால் எனது பக்தி உச்ச நிலையை எட்டிப் பிடித்தது.

"நான் சொல்வதை நீர் ஒப்புக் கொள்கிறீரா? ஒருதலை அன்பு முயற்சி தத்துவத்தை நீர் ஏற்றுக் கொள்கிறீரா?" என்று இவர் ஒரு நாள் என்னிடம் கேட்டார்.

"வேறு வழியே கிடையாது" என்று தயக்கமின்றி உற்சாகத்தோடு நான் பதிலளித்தேன்.

"ஆம்" என்று இவர் முக மலர்ச்சியோடு ஆமோதித்தார்.

இவர் கூறியதை நான் ஏற்றுக் கொள்ளும் போதெல்லாம் இவருக்கு அளவுகடந்த மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும். "பதில் என்னவாயிருக்கும்? மற்றக் கட்சி ஒத்துழைக்காவிடில் என்ன பிரயோசனம்?" என்ற கேள்விகள் எல்லாம் அனாவசியமானதாக மறைந்துவிடும்.

பாபுவின் வாழ்க்கைத் தத்துவமும், நடவடிக்கைகளும் இதுதான். இதைச் சிலர் உணர்ந்தனர். ஆனால் இப்பொழுதுதான் இத் தத்துவத்தில் அதிக நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது

கடவுளிடம் நமக்கு நம்பிக்கை உண்டா? உண்டென்றால் இவரை அன்பில் காணமுடியும். உயிருள்ள ஜீவனில் கடவுள் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையாகில் அன்பு, உதவி, அனுதாபம் முதலிய குணங்கள் இருக்கு மிடத்து கடவுளைப் பிரத்யக்ஷமாகக் காணுகிறோம். அன்பு மறைந்தால் கடவுளும் மறைந்து விடுகிறார்.

"அஹிம்சை" முதலியன விசேஷ அடைமொழிகளாகும். ஒரு தலைப்பட்சமான அன்புதான் அடிப்படைத் தேவையாகும். நமது சிந்தனைகளும், நடவடிக்கைகளும் அன்பில் சேர்ந்திருக்கவேண்டும். ஒருதலை அன்பின் ஒவ்வொரு முயற்சியும் பாபுவுக்கு சிரார்த்த விழாவாக இருக்கும்.

எஸ்கே பிலிம்ஸ் & உமா பிக்சர்ஸ் தயாரிப்பு

# நல்ல தம்பி

டைரக்ஷன் :
கிருஷ்ணன்-பஞ்சு

ஸ்டூடியோ :
நியூடோன்

இன்பகரமான 2வது வாரம்

கோயமுத்தூர் - ஷண்முகா டாக்கீஸ்
சேலம் - அம்பிகா டாக்கீஸ்
வேலூர் - தாஜ் டாக்கீஸ்
காஞ்சீபுரம் - கண்ணன் டாக்கீஸ்
பாண்டிச்சேரி - ரத்னா டாக்கீஸ்
விழுப்புரம் - சீதாராம் டாக்கீஸ்
தஞ்சாவூர் - டவர் டாக்கீஸ்
திருநெல்வேலி - பாலஸ்-டி-வேல்ஸ்
தூத்துக்குடி - ஜோஸப் டாக்கீஸ்
புதுக்கோட்டை - வெஸ்ட் & ராஜா டாக்கீஸ்
காரைக்குடி - ஸ்ரீராமவிலாஸ்

பிப்ரவரி 25உ முதல் சென்னை
ஸ்டார் & மஹாராணி டாக்கீஸில்
மகத்தான ஆரம்பம
இதர முக்கிய நகரங்களில் விரைவில்
திரையிடப்படும்

**டிஸ்ட்ரிப்யூடர்ஸ்:**

| | |
|---|---|
| மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி<br>**G. P. பிலிம்ஸ்**<br>பொரையார் | கோயமுத்தூர்—நீலகிரி<br>**ரேவதி பிலிம்ஸ் லிமிடெட்**<br>பொள்ளாச்சி |
| தஞ்சாவூர்—திருச்சி<br>**கிரேட் இந்தியா பிலிம்ஸ்**<br>ஸ்ரீரங்கம் | வட, தென் ஆற்காடு, செங்கல்பட்டு<br>சித்தூர், சேலம்: **V. S. நாயர்**<br>22, பெங்களூர் ரோட், வேலூர் |

மைசூர் ஸ்டேட் & மலபார்: **லக்ஷ்மி பிலிம் கம்பெனி**, பெங்களூர்சிடி

மதராஸ், ஆந்திரா, வட-இந்தியா & பர்மா : } **எஸ்கே பிலிம்ஸ்**, மதராஸ்-17.

## அவளுடைய பொக்கிஷம்

சூதக வியாதியினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருண டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரசாதமாகவும் கருதுகிருள்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

# அருண

கர்ப்பாசயரோக நிவாரணி

**ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.**

---

# தோட்டம் போடுகிறீர்களா?

அப்படியானுல்:

ஸ்ரீ மு. அருணுசலம் எழுதிய தோட்ட வரிசை நூல்கள் உங்களிடம் இருக்கின்றனவா?

| | | | |
|---|---|---|---|
| காய்கறித் தோட்டம் | 5 | 0 | 0 |
| பழத் தோட்டம் | 10 | 0 | 0 |
| வாழைத் தோட்டம் | 1 | 12 | 0 |

**சக்தி காரியாலயம், சென்னை 14**

லியோ டால்ஸ்டாய் (1828—1910) உலக இலக்கிய கர்த்தர்களின் நடுவில் இமயமலையைப் போன்று இருப்பவர். சிறு குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை எல்லோரும் படித்து ஆனந்திக்கத் தக்கவாறும், 'இதுதான் இலக்கியம்' என்று பாராட்டத்தக்கவாறும் உள்ளவை உலகத்திலேயே இவர் எழுத்துக்கள்தான் என்றால் மிகையாகாது. இந்த மகாமேதையின் குட்டிக் கதைகள் இவை. இவற்றில் சில பிறருடைய கதைகளைத் தழுவியவை.

# குட்டிக் கதைகள்

○

**லியோ டால்ஸ்டாய்**

## ஓநாயும் ஆட்டுக்குட்டிகளும்

ஒரு ஆடு தன் குட்டிகளை ஒரு களஞ்சியத்தில் அடைத்து வைத்துவிட்டுப் புல் சேகரிக்கப் புறப்பட்டது. போகும்போது தன் குட்டிகளைப் பார்த்து, "குழந்தைகளே! யாரையும் நீங்கள் உள்ளே விடக்கூடாது. நான் திரும்பி வந்து சத்தம் கொடுப்பேன். என் சத்தத்தைக் கேட்டுத்தான் நீங்கள் கதவைத் திறக்க வேண்டும்" என்று சொன்னது.

இதை மறைந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த ஒரு ஓநாய், ஆடு போன பிறகு அந்த இடத்திற்கு வந்தது. மெதுவாக வந்து களஞ்சியத்துக்கு முன்னால் நின்று கொண்டு, ஆட்டின் குரலைப்போல தன் குரலை மாற்றி, "அருமைக் குழந்தைகளே! கதவைத் திறவுங்கள். இதோ உங்கள் அம்மா; உங்களுக்காக நான் உணவு சேகரித்துக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொன்னது.

குட்டிகள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தன. பார்த்துவிட்டு அவை பின்வருமாறு கூறின:

"உன்னுடைய குரல் எங்கள் அம்மா குரலைப்போலத்தான் இருக்கிறது. ஆனால், உன்னுடைய கால்கள் ஓநாயின் கால்களைப்போல் இருக்கின்றன. அதனால் உன்னை உள்ளே விடமாட்டோம்."

## கழுதையும் சிங்கமும்

ஒரு காலத்தில் ஒரு சிங்கம் ஒரு கழுதையைத் தன்னோடு அழைத்துக்கொண்டு வேட்டைக்குப் புறப்பட்டது. அப்போது சிங்கம் கழுதையைப் பார்த்து சொன்னது:

"கழுதையே, நீ காட்டுக்குள்ளே போய் உன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பலமாகக் கத்து. உனக்கு நல்ல காத்திரமான சாரீரம் இருக்கிறது. நீ கத்துவதைக் கேட்டு பயந்து ஓடி, பிராணிகள் என் பிடியில் அகப்பட்டுக் கொண்டு விடும்."

கழுதை அவ்வாறே போய்க் கத்தியது. அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பயந்த பிராணிகள் கலைந்து நாலாபக்கமும் ஓட்டம் எடுத்தன. சிங்கம் அந்தப் பிராணிகளைப் பிடித்துக்கொண்டது.

இவ்வாறாக வேட்டை முடிந்தது. பிறகு சிங்கம் கழுதையிடம்,

"உன்னை மிகவும் பாராட்டுகிறேன்; ஆகா! எவ்வளவு அபாரமாகக் கத்தினாய் நீ!" என்று புகழ்ந்தது.

அன்று முதல், தன்னை மற்றவர்கள் புகழவேண்டும் என்று எதிர்பார்த்து, கழுதை எப்போதும் கத்திக்கொண்டிருக்கிறது.

## புத்தகம்

தெருவில் ஒரு புத்தகம் கிடந்தது. அதை இருவர் பார்த்துக்கொண்டனர். அந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, "இந்தப் புத்தகம் எனக்குத்தான் சொந்தம்" என்று இரண்டுபேரும் சண்டைபோட்டுக்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் அங்கே மற்றொரு ஆள் வந்தான். அவன் இந்த இருவரையும் பார்த்து, "உங்கள் இருவரில் யாருக்குப் படிக்கத் தெரியும்?" என்று கேட்டான்.

"இரண்டு பேருக்குமே தெரியாது" என்றனர் இருவரும்.

"அப்படியானால் உங்களுக்குப் புத்தகம் எதற்கு? புத்தகத்துக்கு நீங்கள் ஆசைப்படுவானேன்? உங்கள் சண்டையைப் பார்த்தால், இரண்டு வழுக்கைத் தலைப் பேர்வழிகள் ஒரு சீப்புக்காக அடித்துக்கொண்ட விஷயம் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது" என்றான் அந்த ஆள்.

## சுமை தூக்கி

மாஸ்கோ நகரத்தை விட்டு பிரெஞ்சுக்காரர்கள் போய்விட்டார்கள். உடனே இரண்டு குடியானவர்கள் ஊருக்குள் போய் அங்கு நாலா பக்கமும் சிதறிக்கிடக்கும் உயர்ந்த வஸ்துக்களை எடுத்துச் சுருட்டிக்கொண்டு வரப் புறப்பட்டார்கள். அந்த இருவரில் ஒருவன் புத்திசாலி; மற்றொருவன் முட்டாள்.

தீப்பற்றிய பகுதிக்கு முதலில் போனார்கள். அங்கே அரைகுறையாக எரிந்து மிஞ்சிக்கிடந்த ஆட்டு மயிரைப் பார்த்தார்கள். பார்த்ததும், "இதை வீட்டுக்குக் கொண்டுபோனால் மிகவும் பிரயோஜனப்படுமே" என்று இருவரும் சொன்னார்கள். அப்படியே அதைச் சுருட்டி எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள். வரும் வழியில் ஓரிடத்தில் ஒரு ஜவுளி மூட்டை கிடப்பதைப் பார்த்தார்கள். உடனே புத்திசாலியான குடியானவன் கம்பளி மயிரைத் தூக்கி எறிந்துவிட்டுத் தன்னால் எவ்வளவு தூக்கமுடியுமோ அவ்வளவு ஜவுளியைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டான். இதைப் பார்த்து முட்டாள்,

"ஏன் கம்பளிமயிரை எறிந்துவிட்டாய்? அதை அழகாக அடுக்கி முதுகோடு சேர்த்து நன்றாகக் கட்டியிருந்தோமே!" என்று அங்கலாய்த்தான். முட்டாள், ஜவுளி எதையும் எடுத்துக்கொள்ளவில்லை.

பின்னும் அவர்கள் கொஞ்சதூரம் நடந்து வந்தார்கள். அப்போது தெருவில் நன்றாகத் தைக்கப்பட்ட புதிய சட்டைகள், கோட்டுகள், நிக்கர்கள் முதலியன கிடக்கக் கண்டார்கள். புத்தியுள்ள குடியானவன் ஜவுளிப் பொட்டணத்தைத் தூர எறிந்துவிட்டு, இந்தப் புதிய உடைகளைப் பொறுக்கி எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டான். அப்போது முட்டாள், "நான் என் கம்பளியை எறிய

வேண்டும்? அதை அழகாக அடுக்கி முதுகோடு சேர்த்து நன்றாகக் கட்டியிருக்கிறேனே!" என்றான்.

மேலும் அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். வரும் வழியில் வெள்ளித் தட்டுகள் தெருவில் சிதறிக்கிடந்தன. அவற்றைப்பார்த்ததும் புத்தியுள்ள குடியானவன், துணிமணிகளை எறிந்துவிட்டு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு வெள்ளித் தட்டுகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். முட்டாள் குடியானவனோ தன் கம்பளி மயிரைத் தூர எறியவில்லை. 'அதை அழகாக அடுக்கி நன்றாகக் கட்டியிருக்கிறேனே' என்று நினைத்துக் கொண்டான்.

பிறகும் நடையைத் தொடர ஆரம்பித்தார்கள். அப்போது அங்கே தங்க நகைகள் நாலா பக்கமும் தெருவில் சிதறிக்கிடப்பதைப் பார்த்தார்கள். புத்தியுள்ள குடியானவன் வெள்ளிப் பாத்திரங்களைப் போட்டுவிட்டு, தங்க நகைகளை எடுத்து வைத்துக் கொண்டான். முட்டாள் சொன்னான்:

"கம்பளி மயிரைத் தூர எறிவதால் என்ன லாபம்? இதை அழகாக அடுக்கி முதுகோடு சேர்த்து நன்றாகக் கட்டியிருக்கிறேன்."

இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள். வரும் வழியில் மழை பிடித்துக் கொண்டதால், கம்பளி மயிரெல்லாம் நனைந்து கனத்துவிடவே அதைத் தூர எறிந்து விட்டு வெறுங் கையோடுதான் முட்டாள் வீடு வந்து சேர்ந்தான். புத்திசாலியோ தங்கத்தைத் தூக்கிக் கொண்டு வந்தான். பிறகு பெரிய பணக்காரனாகி விட்டான்.

## புழுதியில் ஓநாய்

ஆட்டு மந்தையிலிருக்கும் ஒரு செம்மறியாட்டைப் பிடித்துத் தின்ன வேண்டுமென்று ஒரு ஓநாய் மிகவும் ஆசைப்பட்டது. அதனால், அது ஆட்டு மந்தைக்குப் பின்னாகவே நடந்து சென்றது. ஆடுகள் நடந்து செல்வதன் காரணமாக ஒரேயடியாகப் புழுதி கிளம்பி, பின்னால் ஓநாய் நடந்து வருவதை கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவிட்டது. ஆனாலும், ஆட்டு மந்தையைச் சேர்ந்த நாய், ஓநாய் வருவதைப் பார்த்துக் கொண்டது. உடனே அது ஓநாயிடம்,

"ஓநாயே! புழுதியின் நடுவில் நீ நடந்து வருவதால் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது; அதனால் உன் கண்ணுக்குத் தான் கெடுதல்" என்று சொன்னது.

ஓநாய் அதற்குப் பின் வருமாறு பதில் சொன்னது:

"நாயாரே! துரதிர்ஷ்டவசமாக வெகு காலத்துக்கு முன்பே என் கண்கள் கெட்டுப்போய்விட்டன. ஆனால், ஆட்டு மந்தை நடந்து செல்லும்போது கிளம்புகிற புழுதி கண்ணுக்கு மிகவும் சிறந்த மருந்து என்று சொல்லுகிறார்கள்."

## சன்னமான நூல்

ஒருவன் மற்றொருவனைக் கூப்பிட்டு மிகவும் சன்னமான நூலாக நூற்றுக் கொண்டு வரும்படி கூறினான். அப்படியே அவன் சன்னமாக நூல் நூற்றுக் கொண்டு வந்து கொடுத்தான். இதைப் பார்த்ததும் முதலாமவன், "இந்த நூல்

நயமாக இல்லையே! மிகமிக நயமாக, சன்னமாக நூற்றுக் கொண்டு வரும்படி அல்லவா சொன்னேன்?" என்று கூறினான்.

அதற்கு இரண்டாமவன் சொன்னான்:

"இந்த நூல் உங்களுக்கு சன்னமாக இல்லையா? அப்படியானால் இதோ, இந்த நூலைப் பாருங்கள்; இது உங்களுக்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன்."

மேற்கூறியவாறு சொல்லிவிட்டு ஒரு வெற்றிடத்தைக் காட்டினான். முதலாமவன், "என்ன? ஒன்றையும் காணவில்லையே!" என்றான்.

இரண்டாமவன் சொன்னான்:

"உங்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதிலிருந்தே இது மிகவும் சன்னமான நூல் என்பது தெரியவில்லையா! என் கண்ணுக்குக்கூட அது தெரியவில்லை!"

முதலாமவனுக்கு மிகவும் சந்தோஷம் உண்டாகிவிட்டது. அந்த முட்டாள் மேற்கொண்டும் கொஞ்சம் இப்படிச் சன்னமான நூலாக நூற்கும்படி கூறி, அதற்கும் சேர்த்துப் பணத்தைக் கொடுத்து விட்டுப் போனான்.

## பெரிய அடுப்பு

ஒரு காலத்தில் ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு ஒரு பெரிய வீடு சொந்தம்; அந்த வீட்டில் ஒரு பெரிய அடுப்பு. ஆனால் அந்த மனிதனுடைய குடும்பமோ மிகவும் சிறிய குடும்பம். அதாவது அந்த வீட்டில் அவனும் அவன் மனைவியும்தான் வசித்து வந்தார்கள்.

குளிர் காலம் வந்துவிட்டது. அதனால், 'கதகதப்'புக்காக அந்தப் பெரிய அடுப்பு நிறைய ஏராளமாக விறகுக் கட்டைகளைப் போட்டு எரித்தான். ஒரு மாத காலத்தில் விறகுக் கட்டைகள் எல்லாம் தீர்ந்து போய்விட்டன. மேற்கொண்டு அடுப்பு எரிக்க ஒன்றுமில்லை; குளிர் காய்வதற்கும் வசதியில்லை; குளிர் நடுக்கமும் தாங்க முடியவில்லை. ஆகவே, அவன் தன் வீட்டு வேலியிலுள்ள மரப் பலகைகளையெல்லாம் கொண்டு வந்து அடுப்பில் போட்டு எரித்தான். இதுவும் தீர்ந்து போனது. பிறகு, குளிர் காய்வது எப்படி? இப்போதோ கணப்பு போதாததால் குளிர் மிகவும் அதிகமாகி வாடைக் காற்று 'ஜில்' என்று அடித்தது. வீட்டில் விறகு கிடையாது. உடனே தன் வீட்டு மச்சின் உட்புறத்தில் பதித்துள்ள கட்டைகளைப் பெயர்த்தெடுத்து அடுப்பு மூட்ட எத்தனித்தான். இதைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரன்,

"என்னஐயா, இது? உம்முடைய மூளையைப் பறிகொடுத்துவிட்டீரா? குளிர் காலத்தில் வீட்டு மச்சைப் பிரிக்கிறீரே! மச்சு இல்லை என்றால் நீரும் உம் பெண்டாட்டியும் குளிரில் விறைத்துச் செத்துப் போய்விடுவீர்களே!" என்றான்.

அதற்கு இவன் சொன்ன பதில்:

"அண்ணே, நான் அடுப்பில் கணப்புப் போடுவதற்குத்தான் மச்சைப் பெயர்த்துக்கொண்டிருக்கிறேன்; வேறொன்றுக்கும் அல்ல. எங்கள் வீட்டு அடுப்பு ஒரு பெரிய அதிசயமாக இருக்கிறது; அதில் கட்டைகளைப் போட்டு எரிக்க எரிக்க, எங்களுக்குக் குளிர் அதிகமாகிக் கொண்டு வருகிறது."

பக்கத்து வீட்டுக்காரன்:

“அப்படியா? உம் வீட்டு மச்சு உத்தரங்களை எரித்து முடித்த பிறகு, கூரையைப் பிரித்து எரிப்பீர்! வீட்டையே எரித்துவிட்ட பிறகு, குடி யிருப்பது எங்கே? கடைசியில் மிஞ்சப் போவது அடுப்பு ஒன்று தான். அதுவும் கூட குளிர் ஏறிப்போகும்.”

வீட்டுக்காரன்:

“என்ன செய்யலாம்? என்னுடைய துரதிர்ஷ்டம் அது! சுற்றுமுற்றும் உள்ள எல்லோருக்கும் குளிர் காலம் முழுவதும் எரிப்பதற்கு வேண்டிய விறகுக் கட்டை இருக்கிறது. ஆனால் நானோ ஏற்கெனவே, வேலி, உத்தரம் எல்லாவற்றையும் எரித்துவிட்டேன். இப்போது கைவசம் எதுவும் இல்லை.”

பக்கத்து வீட்டுக்காரன்:

“நீர் செய்ய வேண்டியது என்ன தெரியுமோ? உடனே உம்முடைய அடுப்பை இடித்து சின்னதாகக் கட்டும்.”

வீட்டுக்காரன் இதற்குப் பின் வருமாறு பதில் சொன்னான்:

“உங்கள் வீட்டையும் உங்கள் வீட்டு அடுப்பையும் விட, என் வீடும் என் வீட்டு அடுப்பும் பெரியவை. அதனால், என்மேல் உங்களுக்குப் பொறாமை என்று எனக்கு நன்றாகத் தெரியும். இல்லை என்றால், என் அடுப்பை இடித்துவிட்டு சின்ன அடுப்பாகக் கட்டும்படி யோசனை சொல்வீரா?”

ஆகவே, இவன் பக்கத்து வீட்டுக்காரனுடைய புத்திமதிக்கு செவி சாய்க்கவில்லை. தன் வீட்டு மச்சையும், தன் முழு வீட்டையுமே பெயர்த்து, ஒடித்து, அடுப்பில் போட்டு எரித்துவிட்டான். கடைசியில் வீடில்லாமல், இருப்பிடத்தை விட்டுக் கிளம்பி, அந்நியர்களின் வீடுகளில் போய் வசிக்கலானான்.

## யானையும் ஓநாய்களும்

**கா**ட்டில் அகப்படும் மாமிசத்தை எல்லாம் தின்று தீர்த்துவிட்டன ஓநாய்கள். அதனால் இப்பொழுது சாப்பாட்டுக்கு வழி இல்லை. உணவு சம்பாதிப்பதற்கு ஓர் உபாயம் கண்டு பிடித்தது ஒரு கிழட்டு ஓநாய். அந்த ஓநாய் ஒரு யானையிடம் போய்க் கீழ்க்கண்டவாறு கூறியது:

“எங்களுக்கு ராஜா ஒருவர் இருந்தார்; ஆனால் அவர் மிகவும் கெட்டுப்போய்விட்டார். எங்களால் நிறைவேற்ற இயலாத கட்டளைகளை எல்லாம் இடுகிறார். அதனால் நாங்கள் வேறொரு அரசரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். எங்கள் கூட்டத்தார், நீங்களே அரசராக வேண்டும் என்று விண்ணப்பித்து, உங்களை அழைத்து வரும்படி கூறி என்னை அனுப்பியிருக்கின்றனர். நாங்கள் செயலாக வாழ்கிறோம். நீங்கள் இஷ்டப்பட்டதை எல்லாம் நாங்கள் நிறைவேற்றி வைப்போம். சகல விஷயங்களிலும் உங்களுக்குப் பெரு மதிப்புக் கொடுத்து நடப்போம். நீங்கள் இப்போதே எங்கள் ராஜ்யத்துக்கு எழுந்தருள வேண்டும்.”

இதைக் கேட்ட யானை தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு ஓநாயின் பின்னாக நடந்து வந்தது. வரும்போதே சேறும் சகதியுமாக இருந்த சதுப்பு நிலத்தில் ஆழ்ந்து

விட்டது. ஓநாய்தான் வேண்டுமென்று தந்திரம் பண்ணி இப்படி மோசமான வழியைக் காட்டி அழைத்து வந்தது. யானை சேற்றில் அமிழ்ந்துகொண்டிருக்கும்போது, ஓநாய் யானையைப் பார்த்து,

"உங்கள் சித்தம் எதுவோ அப்படிக் கட்டளை இடுங்கள்; நாங்கள் நிறைவேற்றச் சித்தமாக இருக்கிறோம்" என்று சொன்னது.

யானை, "என்னை சேற்றிலிருந்து வெளியே இழுக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருக்கிறேன்" என்றது. ஓநாய் சிரித்தது.

"சரி, அப்படியானால் உங்கள் துதிக்கையால் என் வாலைப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் வெளியே இழுத்து விடுகிறேன்."

யானை: உன் வாலால் என்னை வெளியே இழுக்க முடியுமா?

ஓநாய்: செய்ய இயலாத காரியத்தைச் செய்யும்படி என் கட்டளை இடுகிறீர்கள்? இந்தத் தப்பிதத்தைச் செய்ததற்காகத்தானே எங்கள் பழைய அரசரை நாங்கள் விரட்டியடித்தோம்!

கடைசியில் யானை சேற்றிலேயே கிடந்து செத்துப் போய்விட்டது. பிறகு ஓநாய்கள் வந்து யானையைப் பக்ஷணம்பண்ணிவிட்டுச்சென்றன.

## நாய்களும் சமையல்காரனும்

ஒருவன் சமையல் செய்து கொண்டிருந்தான். சமையல் அறையின் வாசலில் சில நாய்கள் படுத்துக்கொண்டிருந்தன. சமையல்காரன் கறிக்காக ஒரு கன்றுக் குட்டியைக் கொன்றான்; பிறகு, கன்றுக் குட்டியின் குடலை எடுத்து வெளியே எறிந்தான்.

உடனே நாய்கள் குடலை எடுத்துத் தின்றுவிட்டு, "சமையல்காரன் மிகவும் கெட்டிக்காரன். எவ்வளவு அருமையாகச் சமைக்கத் தெரிந்து கொண்டிருக்கிறான்" என்று பேசிக் கொண்டன.

சிறிது நேரம் கழித்து முள்ளங்கியையும், வெங்காயத்தையும் உரித்தான். அவற்றின் தோலை வெளியே எறிந்தான். நாய்கள் அவற்றின் மீது பாய்ந்தன. ஆனால் அவை இன்னது என்று தெரிந்ததும், மூக்கை நிமிர்த்திக் கொண்டு "நம் சமையல்காரன் மிகவும் கெட்டுப் போய்விட்டான். முன்பெல்லாம் நன்றாகச் சமையல் செய்து கொண்டுதான் இருந்தான். இப்போது வெறும் உதவாக்கரையாகப் போய்விட்டான்" என்று பேசிக் கொண்டன.

நாய்கள் பேசியதை எல்லாம் சமையல்காரன் கேட்கவில்லை. வழக்கம் போல சமையல் செய்து முடித்தான். வீட்டுக்காரர்கள் விருந்துச் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு அதைப் பிரமாதமாகப் புகழ்ந்தார்கள். நாய்கள் புகழாவிட்டால் என்ன?

*

## உண்மை அன்பு

உண்மையான அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது; சேவைதான் வெளிப்படுத்தும்.

—மகாத்மா காந்தி

*நம் கல்வி மந்திரிக்கும் காந்திஜிக்கும் அரசியலுக்கும் பொதுத் தொடர்புள்ள ஒரு சந்தர்ப்பத்தையும், நிகழ்ச்சியையும் இக் கட்டுரை கூறுகிறது. மகாத்மாவின் தீர்க்கதரிசனமான ஆலோசனை எவ்வளவு மதிப்புவாய்ந்தது என்பதையும் அந் நிகழ்ச்சி தெரிவிக்கிறது.*

# பதவி ஏற்றுக் கொள்வதா?

○

டி. எஸ். அவிநாசிலிங்கம்

1937 ஆரம்பத்தில் மாகாண சட்ட சபைத் தேர்தல்கள் வந்தது அனைவருக்கும் ஞாபகமிருக்கும். முதல் தடவையாக காங்கிரசின் சார்பில் மாகாண சட்டசபையிலும் அங்கத்தினர்கள் நிறுத்திவைக்கப் பட்டார்கள். மக்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு மகத்தான ஆதரவளித்ததும் அனைவருக்கும் தெரிந்த விஷயம். மாகாண சட்ட சபையில் மொத்தம் 215 பேர்கள். அதில் 159 காங்கிரஸ் அங்கத்தினர்கள் வெற்றி பெற்றிருந்தார்கள். தவிர, மற்ற மாகாணங்களில் கிடைக்காத வேறு ஒரு வெற்றியும் சென்னைக்குக் கிடைத்திருந்தது. சென்னை மாகாணத்தில் மேல் சட்டசபையிலும் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். எனவே, காங்கிரசைத் தவிர வேறு ஒருவரும் ஆட்சியை ஏற்று நடத்த முடியாதென்ற நிலைமை வந்தது. இந்தியா முழுதிலுமுள்ள 11 மாகாணங்களில் காங்கிரஸ் பெரும்பான்மையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபை பதவியேற்று நடத்துவதா வேண்டாமா என்ற பிரச்னை எழுந்தது. இப்பொழுது கவர்னர்ஜெனராலாக இருக்கும் மேன்மை தங்கிய ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அப்பொழுது சென்னையில் காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்குத் தலைவராக இருந்தார் என்பதை அனைவரும் அறிவார்கள்.

அந்தக் காலத்திலிருந்த 1935-ம் வருஷத்திய இந்தியா ஆக்டுப்படி கவர்னருக்கு பலவிதமான அதிகாரங்கள் இருந்தன. இந்தியன் ஸிவில் ஸர்வீஸ்காரர்களுடைய சம்பள விகிதங்கள், சிறுபான்மையோருடைய உரிமைகள், ஐரோப்பியருக்குள்ள சலுகைகளைக் காப்பாற்றுதல் என்பன போன்ற அதிகாரங்கள் பல கவர்னரிடத்தில் இருந்தன. அதைத் தவிர மந்திரிகள் சாதாரணமாக செய்யக்கூடிய காரியங்களில்கூட பிரவேசிக்கும் உரிமை அந்த சட்டப்படி கவர்னருக்கு இருந்தது. காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவியை ஏற்று ஆட்சி நடத்தும்போது, கவர்னர் சாதாரண தினசரிக் காரியங்களில்

பிரவேசிப்பதனால் மந்திரிகளுடைய பொறுப்பை எவ்விதம் நிர்வகிக்க முடியும்? தவிர, எவ்விதம்தான் அவர்கள் கோரும் லட்சியங்களை சாதிப்பதற்குள்ள நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முடியும்? எனவே, அந்த நிலையில் மாகாண சுயாட்சி என்பது உண்மையில் மக்களின் சுயாட்சியாக இருக்க முடியாது. இக்காரணங்களைக் கொண்டு அப்பொழுது இருக்கும் சட்டப்படி அமுல் நடத்துவதில் காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்பது அவசியமில்லை என்று மகாத்மாஜி போன்ற பெரியோர்கள் நினைத்தார்கள். மந்திரிகளுடைய தினசரிக் காரியங்களில் கவர்னர் பிரவேசிப்பதேயில்லையென்ற கட்டுப்பாடான ஒரு உறுதி இருந்தாலொழிய இவர்கள் அங்கு செல்வது சரியாக இருக்காது, என அவர்கள் கருதினார்கள். தவிர, கருத்துக்களிலும் நோக்கங்களிலும் காங்கிரஸ் கட்சிக்கும் அந்நிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்த கவர்னருக்கும் பல அபிப்பிராய பேதங்கள் இருந்தன. எனவே, இத்தகைய உறுதியின்றி காங்கிரஸ் மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ளுவது இடைவிடாத சச்சரவுகளுக்கு இடம் கொடுக்குமேயொழிய சமாதானமாகக் காரியங்களைச் செய்வதற்கு வசதியாக இருக்காது. எனவே, தினசரிக் காரியங்களில் தாங்களே யோசனை செய்து கவர்னருடைய பிரவேசிப்பு இல்லாமல் காரியங்களைச் செய்யக் கூடிய வசதிகள் இல்லாமல் பதவியை ஏற்கக் கூடாது என்று மகாத்மாஜி அபிப்பிராயப் பட்டார்.

இந்த விஷயம் பத்திரிகைகளில் பலவாறாக விவாதிக்கப் பட்டது. சிலர் சொன்னார்கள், 'இது என்ன மடத்தனம்? உத்தியோகத்தை முதலில் ஏற்றுக்கொண்டு உள்ளுக்குப் போய் சண்டை செய்யலாமே? அதற்காக இப்பொழுதிருந்தே சண்டையைக் கிளப்பிக் கொண்டிருப்பானேன்!' என்று. இன்னும் சிலர், 'பதவியை ஏற்று காங்கிரஸ்காரர்கள் தங்களைப் பலப் படுத்திக்கொள்ள வேண்டும். காங்கிரஸ்காரர்களுக்கு லௌகீகம் தெரியாது. தங்கள் கட்சியைப் பலப் படுத்திக்கொள்ளக்கூடிய இந்த பெரிய சந்தர்ப்பத்தை விட்டு விடுகிறார்களே' என்று சொன்னார்கள். இன்னும் சிலர் ' 'சட்டம் எப்படியோ பார்லிமெண்டில் நிறைவேறிவிட்டது. இனிமேல் காந்தி சொல்வதற்கும் காங்கிரஸ் சொல்வதற்கும் மறுபடியும் சட்டத்தை மாற்றுவார்களா? அது எப்பொழுதும் நடைபெறாது. ஆதலால், வழக்கம்போல் காங்கிரஸ்காரர்கள் இப்பொழுதும் தவறுதலான கொள்கைகளை ஏற்று, சந்தர்ப்பத்தை நழுவவிட வேண்டியதுதான்' என்றார்கள். எல்லோருக்கும் காங்கிரஸ் பதவியேற்று மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆனால், மகாத்மாஜி இவ் வாதங்களுக்கு இடம் கொடுக்கவில்லை. இவ்விஷயங்களைத் தீர ஆலோசனை செய்து முடிவு செய்வதற்கென்றே இந்தியா முழுவதிலும் காங்கிரஸின் பெயரால் சட்டசபைகளுக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்களின் பெரிய கூட்டமொன்று கூட்ட வேண்டியது என்று தீர்மானம் செய்யப் பட்டது.

இக்கூட்டம் டெல்லியில் கூடிற்று. டெல்லி சட்டசபையில் மிகுந்த புகழ் வாய்ந்த ஸ்ரீ புலாபாய் தேசாய் அவர்களுடைய தலைமையில் காங்கிரஸ் கட்சி அப்பொழுது வேலை செய்து கொண்டிருந்தது. டெல்லி சட்டசபையில் நடந்துகொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் வேலை தேசமெங்கும் மிக உயர்வாகப் பாராட்டப்பட்டு வந்தது. எனவே, டெல்லியில் கூடின இக்கூட்டம் மக்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. இக்கூட்டத்திற்கு எல்லா மத்திய சட்டசபைக் காங்கிரஸ் அங்கத்தினர்களும், மாகாண சட்டசபைக் காங்கிரஸ் அங்கத்தினர்களும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். சுமார் ஆயிரம் பேர்களுக்குமேல் வந்திருப்பார்களென்று நினைக்கிறேன். இதற்கென அழகாக அமைக்கப்பட்ட பந்தலில் கூட்டம் கூடியது. இந்தியாவின் சரித்திரத்திலேயே முதல் தரமாக இவ்விதம் ஒரு கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. அதற்குப் பிறகும் இம்மாதிரிக் கூட்டம் நிகழ்ந்ததாக எனக்கு ஞாபகமில்லை. எனவே, மிகுந்த உற்சாகத்துடன் அங்கத்தினர்கள் பலரும் கூட்டத்தில் சேர்ந்துகொண்டார்கள். அன்றைய தினம் மகாத்மாஜி டெல்லியில்தான் இருந்தார். அப்பொழுது மத்திய சட்டசபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்ததால் நானும் அப்பொழுது டெல்லியில்தான் இருந்து கொண்டிருந்தேன். கூட்டத்திற்கு தென்னிந்தியாவிலிருந்து காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் பலரும் வந்திருந்தார்கள். ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன் அவர்களும், சர்தார் ஏ. வேதரத்னம் பிள்ளை, ஸ்ரீ சி. பி. சுப்பய்யா, ஸ்ரீ கிருஷ்ணசாமி பாரதி முதலிய பலரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது மாலையில் மகாத்மாஜியை சந்தித்து வந்தால் என்ன என்ற எண்ணம் தோன்றிற்று. ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன் அவர்களும் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் தாங்களும் கூட வருவதாகச் சொன்னார்கள். எனவே, மாலையில் அவரைப் பார்ப்பதற்குப் புறப்பட்டோம். மகாத்மாஜி அக்காலத்தில் டெல்லியிலிருந்து சுமார் 10 மைல் தூரத்திலுள்ள 'கிங்ஸ்வே' என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஹரிஜன ஆச்ரமத்தில் இருந்துவந்தார். அங்கு ஒரு சிறு வீட்டு மாடியில் இருந்துகொண்டிருந்தார். நாங்கள் சென்ற சமயம் இருட்டு வரக்கூடிய நேரம். பிரார்த்தனை முடிந்து, மகாத்மாஜி மாடியில் உலாத்திக் கொண்டிருந்தார். நாங்கள் மூவரும் வந்திருப்பதாகச் சொல்லியனுப்பினோம். உடனேயே வரும்படி தகவல் வந்தது. உள்ளே சென்றதும் மகாத்மாஜி அவருடைய பழக்கமான ஒப்புவமையில்லாத புன்சிரிப்புடன் 'வா, வா,' என்று சொல்லி மூவரையும் வரவேற்றார். மூவரும் கீழே விழுந்து அவர் பாதங்களைத் தொட்டு நமஸ்காரம் செய்தோம். ஸ்ரீ சுப்பராமனை அவருக்கு முன்னதாகவே நன்றாகத் தெரியும். நான் மத்திய சட்டசபையில் இருப்பதும் அவருக்கு முன்னமேயே தெரியும். ஸ்ரீ சுப்பராமன் அவர்களும்,

ஸ்ரீ சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்களும் மாகாண சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், சட்டசபை அங்கத்தினர்கள் கூட்டத்திற்காக டெல்லிக்கு வந்திருப்பதாகவும் சொன்னோம். அதைக் கேட்டதும் 'கொல்' என்று சிரித்தார். சிரித்துச் சொன்னார்: 'என்ன வேடிக்கை! நீ மத்திய சட்டசபை அங்கத்தினர். அவர்கள் மாகாண சட்டசபை அங்கத்தினர்கள்' என்றார். நாங்களும் கூடச் சேர்ந்து சிரித்தோம். அவர் சொன்னதின் பொருள் 'காலத்தின் மாறுபாட்டைப் பார்த்தீர்களா? நேற்று பிறந்த பிள்ளைகள் நீங்கள். அதில் ஒருவர் மத்திய சட்டசபை அங்கத்தினர், இருவர் மாகாண சட்டசபை அங்கத்தினர்கள்' என்று தம்முடைய குழந்தைகள் இந்தப் பதவிகளை அடைந்ததைப் பார்த்து மகிழ்ந்தது மாதிரி இருந்தது. அது எங்கள் உள்ளத்திலும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது.

அதற்குமேல் நாங்கள் அங்கு வந்திருக்கும் அலுவல்கள் பற்றியும் அப்பொழுது நடந்துகொண்டிருக்கும் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் கூட்டத்தைப் பற்றியும் பேச்சு வந்தது. அப்பொழுது அவரிடத்தில் சொன்னேன்: 'தாங்கள் சர்க்காரிடம் கவர்னர் சாதாரண விஷயங்களில் தலையிடக்கூடாது என்ற உறுதிமொழி கேட்டிருக்கிறீர்கள். இம்மாதிரி உறுதி மொழிகள் கேட்டுத்தான் 1920-ம் வருஷத்திலிருந்து இதுவரை பல நல்ல சந்தர்ப்பங்களை நீங்கள் நழுவவிட்டிருக்கிறீர்கள் என்று பலர் நினைக்கிறார்கள். தவிர, அதிகாரம் ஏற்றுக்கொண்ட பிற்பாடு உள்ளிருந்து சண்டை செய்வது காங்கிரசுக்கு இன்னும் அதிக பலத்தைக் கொடுக்குமென்று சிலர் நினைக்கிறார்கள்.'

நான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் அவர் முகத்தில் இருந்த புன்சிரிப்பு போய் ஒரு ஆழ்ந்த தோற்றம் தோன்றியது. அவர் பதில் சொன்னார்: 'அப்படிப் பலர் நினைப்பது எனக்குத் தெரியும். ஆயினும் இந்த சமயத்தில் இத்தகைய வாக்குறுதியின்றி உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுவது தேசத்திற்கு நல்லதல்ல என்றே நான் நினைக்கிறேன். ஒரு வித செடி இருக்கிறது. அது மலர்ந்து அனைத்தையும் வரவேற்பதுபோல் இருக்கும். ஆனால், பூச்சி ஏதாவது அதன்மேல் போய் உட்கார்ந்ததும் தன்னைத்தானே அப்படியே மூடிக்கொண்டு அந்த பூச்சியைக் கொன்று சாப்பிட்டுவிடும். இதுபோல் பெரிய மரங்கள் சிலவும் இருக்கின்றன. தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது அவைகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அவைகளை மனிதன் தொட்டாலும் அல்லது வேறு பிராணிகள் தொட்டாலும் உள் இழுத்துக்கொண்டு அவர்களை முறித்து உடைத்து உரிந்துவிடுமாம். அதுபோல்தான் இப்போதைய ராஜீய நிலை இருக்கிறது. நாம் கேட்ட உறுதிமொழியின்றி காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்றுக்கொண்டால் அந்தப் பூச்சிகள் அல்லது பிராணிகளுக்கு ஆன கதிதான் கிடைக்கும். இத்தகைய உறுதி மொழி இருந்தாலொழிய சர்க்காரின் அமைப்பும் கவர்னருக்

கிருக்கும் அதிகாரமும் அவர்களைக் கபளீகரம் செய்துவிடும் என்பதில் எனக்கு ஐயமில்லை.'

அவர் சொல்லிய வார்த்தைகள் எங்கள் மனதிற்கு ஒரு புதிய வெளிச்சத்தைக் கொடுத்தன. எவ்வளவு உயர்ந்த நோக்கத்துடன் அவர் காரியங்களைச் சிந்திக்கிறார் என்பது எங்களுக்கு ஒருவாறு புலனாயிற்று. குறுகிய பார்வையுடன் காரியங்களை முடிவு செய்வது தலைவர்களுக்கு ஏற்காது. நீண்ட தார்க்கதரிசனத்துடன் பின்னால் வரக்கூடிய காரியங்களைத் தும் தெரிந்து அதற்கேற்றவாறு திட்டங்களை அமைப்பதுதான் உன்னதமான தலைவர்களின் குணாதிசயமாகும். மகாத்மாஜி அத்தகைய நீண்ட பார்வையுடன் காரியங்களைப் பார்க்கிறார் என்பது எதிர்காலத்தில் இது சம்பந்தமாக நடந்த விஷயங்களே நிரூபித்தன.

உலகத்தில் அறிவாளிகள் படித்தவர்கள் என்று நினைத்த பலர் அவர் கேட்ட நிபந்தனையை பிரிட்டிஷார் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று உரைத்தார்கள். ஆனால், மூன்று மாதங்களில் இந் நிபந்தனையை ஒப்புக்கொண்டு சர்க்கார் வெளியிட்ட அறிக்கை உலகமறிந்த விஷயம். எந்த மனிதன் தான் கோரியவற்றை நன்றாக உணர்ந்து அதற்காகத் தீர்மானமாக, ஏகமனதுடன் பாடுபடுவானோ அவனுக்கு வெற்றி நிச்சயம். 'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்பது பொய்யாமொழி. மகாத்மாஜி இதற்குச் சிறந்த உதாரணமாக நம் கண்முன் விளங்கிவந்தார்.

*

## உலோபித்தனம்

எவர்கள் (தாங்கள்) உலோபித்தனம் செய்வதுடன் (மற்ற) மனிதர்களையும் உலோபித்தனம் செய்யும்படி தூண்டி, அல்லாஹ் தன் அருளால், அவர்களுக்குக் கொடுத்ததையும் (பிறருக்குக் கொடுக்காமல்) மறைத்துக் கொள்ளுகிறார்களோ, அத்தகைய நன்றி கெட்டோருக்கு, இழிவு படுத்தும் வேதனையையே நாம் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்.

—குர் ஆன்

## அழகு எது?

உருவத் தோற்றத்தில் எதுவும் இல்லை. அது அழிந்து போய்விடக் கூடியது. நிலைத்திருப்பது நல்ல குணம்தான்; அது மாறி மாறி அவதாரம் எடுக்கக் கூடியதும் ஆகும். இதயப் பரிசுத்தத்தில்தான் உண்மையான அழகு குடிகொண் டிருக்கிறது. புறத் தோற்றம் எப்படி இருந்தபோதிலும், ஆத்மாவில் உண்மையைக் கொண்டிருக்கும் ஒரு முகம்தான் உண்மைக் கலைஞனுக்கு அழகாகத் தோற்றமளிக்கிறது. உண்மையைத் தவிர வேறு அழகு எதுவும் கிடையாது.

—மகாத்மா காந்தி

*நமக்கு எப்படிச் சுதந்திரம் கிடைத்தது, என்பது பற்றி பற்பல அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. அதை விடப் பெரிய பிரச்னை, கிடைத்த சுதந்திரத்தை எப்படிப் பாதுகாப்பது என்பதே. இந்த இரண்டு அம்சங்களையும் ஆராய்ந்து மக்களின் கடமைகளை நினைவூட்டுகிறார் நம் அரசியல் அறிஞர்.*

# காந்தியடிகளும் சுதந்திரமும்

வெ. சாமிநாத சர்மா

**நா**ம் சுதந்திரத்தை யடைந்து விட்டோம்; இல்லை, இல்லை, சுதந்திரம் நமக்கு கிடைத்திருக்கிறது. நாமாக அதைப் பெறவில்லை; அதுவாக நம்மை வந்து சேர்ந்திருக்கிறது. சிறைக்குச் சென்றோம், தடியடி பட்டோம், இன்னும் மகத்தான தியாகங்களைச் செய்தோம், இவற்றின் பயனாகச் சுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்றெல்லாம் சொல்வது முற்றிலும் உணர்ச்சிக்குப் பொருத்தமாயிருக்கலாம். ஆனால் இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட சர்வதேசச் சிக்கல்களில், தான் இன்னும் அதிகமாகச் சிக்கிக்கொள்ள விரும்பாமல், பிரிட்டன், தன்னுடைய கட்டினின்று இந்தியாவை அவிழ்த்து விட்டு விட்டது; இந்தக் கட்டவிழ்ந்த நிலையைத்தான் நாம் சுதந்திரமாகப் பார்க்கிறோம் என்று சொல்வதுதான் ஓரளவேனும் உண்மைக்குப் பொருத்தமானது. 'இப்படிச் சொல்லி, தேசத்திற்காக உயிர், பொருள், ஆவி மூன்றையும் விட்டவர்களுடைய கோபத்தையும் சாபத்தையும் ஏன் ஏற்றுக்கொள்கிறாய்?' என்று எமது எழுதுகோல் எம்மைக் கேட்கிறது. ஆனால் அவர்கள் எம்மைக் கோபிக்கவோ, சபிக்கவோ மாட்டார்களென்பது எமக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனென்றால், அவர்களுடைய தியாகத்தை நாம் குறைகூறவில்லை; அந்தத் தியாகத்தின் மறுவற்ற தன்மையிலே நாம் சந்தேகங் கொள்ளவில்லை. அவர்களுடைய தியாகத்தைப் போற்றுகிறோம்; அவர்களுக்கு வணக்கமும் செலுத்துகிறோம். நாம் கூறுவதெல்லாம் என்னவென்றால், அவர்களுடைய தியாகத்தினால் மட்டும் சுதந்திரம் கிடைத்துவிடவில்லையென்பதுதான். அவர்களுடைய தியாகம், தேசத்தின் சுதந்திர ஆவலை எடுத்துக்காட்டியது, சுதந்திர ஆவலைத் தூண்டிவிட்டது, ஆனால் சுதந்திரத்திற்கு நம்மைத் தகுதிப்படுத்தவில்லையென்றுதான் நாம் கூறுகிறோம். சுதந்திரத்திற்கு நம்மைத் தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்ன மகா தியாகி மகாத்மா காந்தி ஒருவர்தான். அவர், சுதந்திரத்தை வாங்கிக் கொடுப்பதாக ஒருபொழுதும் சொன்னதில்லை. சுதந்திரத்திற்குத் தகுதிப் படுத்

திக் கொள்ளுங்களென்றுதான் அடிக்கடி சொல்லிவந்தார். ஏனென்றால், கொடுத்துப் பெறுவது சுதந்திரமன்று, முயன்று அடைவதுதான் சுதந்திரம் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். "கடவுள்கூட நமக்குச் சுயராஜ்யத்தைக் கொடுக்க முடியாது என்று நான் துணிந்து கூறுகிறேன். நாமேதான் அதனைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். சுயராஜ்ய மென்பது பிறரால் கொடுக்கப்படுவதன்று." இது காந்தியடிகளின் வாக்கு.

பக்குவமில்லாத நிலையில் சுதந்திரம் பெற்று விட்டதனால் நாம் அதிர்ஷ்டசாலிகள்தான். உலகத்தில் வேறு யாருக்கும் இந்த அதிருஷ்டம் வாய்க்கவில்லை. ஐர்லாந்தை எடுத்துக் கொள்வோமே, ஒரேஜாதி, ஒரே மதம், எல்லாம் ஒன்று. ஆனால் சுதந்திரம் பெறுவதற்காக அது பிரிட்டனுடன் எத்தனை வருஷ காலம் போராட வேண்டியிருந்தது? எத்தனை பேர் தூக்கு மேடையி லேறினார்கள்? இப்படியே ஒவ்வொரு நாடும் வருஷக்கணக்கில் போராடி, எண்ணற்கரிய தியாகங்களைச் செய்து சுதந்திரத்தை அடைந்திருக்கிறது. இந்தியா, சுதந்திரத்திற்காகத் தீவிரப் போராட்டத்தைத் தொடங்கியதெல்லாம், காந்தியடிகள், இந்திய அரசியல் மேடையில் பிரதான பாத்திரமாக நடிக்கத் தொடங்கிய காலத்திலிருந்துதான்; ஏறக்குறைய இருபத்தைந்து வருஷ காலமாகத்தான். நம்மை அடக்கியாண்டுவந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வலிமை, ஏறக்குறைய முந்நூறு வருஷ காலமாக நம்மீது ஏறியிருந்த அடிமைத் தழும்பு, நமது நாட்டின் விஸ்தீரணம், நம்முடைய நாகரிக பாரம்பரை, இவைகளையெல்லாம் உத்தேசிக்கையில், நாம் செய்த தியாகம் சிறிது, கிடைத்திருக்கிற சுதந்திரம் பெரிது என்றே சொல்லவேண்டும். செய்த தியாகம் சிறிதாயிருந்தாலும், அது புனிதமுடையதாகவும் ஆழமுடையதாகவும் இருந்தது. இப்படிப் புனிதமுடையதாகவும் ஆழமுடையதாகவும் செய்தவர் காந்தியடிகள். அவருடைய பெருமையினால், ஆத்ம சக்தியினால் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது என்று சொன்னால், அஃது ஓரளவுக்காவது பொருந்தும். அப்படிச் சொல்லி நாம் திருப்தியும் அடைகிறோம். ஆனால் அதில் நமக்கென்ன பெருமை? நம்முடைய முயற்சியிலே, நம்முடைய உழைப்பிலே, நாம் வாழவேண்டும். மகாத்மா காந்தி எவ்வளவு பெரியவராயிருந்தாலும், உலகத்துச் சிரஞ்சீவிகளிலே ஒருவராயிருந்தாலும், எவ்வளவு காலந்தான், தமது ஆத்ம சக்தி நிழலில் நம்மை வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்க முடியும்? நாமுந்தான் எத்தனை வருஷம் அப்படி வாழ்ந்துகொண்டிருக்க முடியும்?

காந்தியடிகள் இருந்த காலத்தில், அவரைக் கண்ணாரக் கண்டு களிப்பதிலே திருப்தியடைந்தோம்; அவர் சொன்னதைக் காதாரக் கேட்டு மகிழ்வதிலே பெருமை கண்டோம். அவர் சொன்னதை நடக்கையிலே கொண்டுவருகிற போதுதான், அவர் வேறு, நாம் வேறாகி விட்டோம். அவரை அவதார புருஷராக மேலே உயர்த்தி வைத்துவிட்டு நாம் கீழேயே இருந்துவிடத் தீர்

மானித்து விட்டோம். அவர், தாழ்ந்தவரை உயர்த்த வேண்டுமென்று கீழே இறங்கி வந்தார். நாமோ, அவரை, நமக்கு எட்டாதவரென்று மேலேயே வைத்து விட்டோம். அவர் உயிரோடு இருக்கிறபோது அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டு விட்டது. இப்பொழுது, அவர் அமர நிலை எய்திய பிறகு, கேட்க வேண்டுமா? அவர் கண்மூடி சரியாக ஒரு வருஷந்தானாகிறது. இதற்குள், படித்தவர்களென்றும், உலக அனுபவம் வாய்ந்தவர்களென்றும் நம்மால் கௌரவிக்கப்பட்டு வருகிற பலரும், 'காந்தியா, அவர் ஒரு தனிப் பெயர் வழி; அவரைப் போல் நம்மால் செய்ய முடியாது; ஆசவும் முடியாது' என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள். நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்கிறதென்பதில் நம்பிக்கை கொள்ளாதவர்கள் கூட, காந்தியடிகளை நமக்கு அப்பாற்பட்டவராகவே வைத்துப் பேசுகிறார்கள். என்ன வேடிக்கை?

காந்தியடிகள் இருந்த வரையில் சுதந்திரத்திற்குத் தகுதிப்படுத்திக் கொள்ளும்படி நம்மை வற்புறுத்திக் கொண்டே வந்தார். ஆனால் நாமோ, தகுதியின்மைக்குத்தான் நம்மைத் தகுதிப்படுத்திக்கொண்டு வந்தோம். உதாரணமாக, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் கொள்கைக்கு எளிதிலே பலியானோம். பலியானோம் என்ற வார்த்தையை அர்த்தந் தெரிந்தே இங்கு உபயோகிக்கிறோம். இரண்டு உதாரணங்களை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

முதலாவது, அரசாங்க உத்தியோகங்கள், பிரதிநிதி ஸ்தாபனங்கள் ஆகியவற்றில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்பதற்கு ஒப்புக்கொண்டோம். இப்படி இருக்கவேண்டுமென்று நாமே விரும்பிக் கேட்டோமா, அல்லது கேட்குமாறு தூண்டப்பட்டோமா என்பது வேறு கதை. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஏற்றுக் கொண்டோம். இதன் பயனாக, நமக்குள்ளே ஜாதி, மத, வகுப்பு வேற்றுமைகள் இருக்கின்றன வென்பதை அந்நியர் முன் ஒப்புக் கொண்டதோடல்லாமல், இந்த வேற்றுமைகளை ஊர்ஜிதமும் செய்து கொண்டோம். இந்த வேற்றுமைகள், மேற் சொன்ன இரண்டு துறைகளிலிருந்து வேறு பல துறைகளுக்கும் பரவின. தேசிய இயக்கத்திலும் தலைகாட்டின. வேற்றுமைகளற்ற நிலையில்தான் தேசியம் உருப் பெறுகிறது. ஆனால் நாமோ, வேற்றுமைகளை வளர்த்துக் கொண்டே தேசியத்தையும் வளர்க்க முனைந்தோம். விளைவு என்ன? சுதந்திரம் கிடைத்த பிறகு கூட, இந்த வேற்றுமைகள் நிலை பெற்று விட்டன. இப்பொழுது, கல்வித் துறையுள்பட எல்லாத் துறைகளிலும் இந்த வேற்றுமை விஷக் காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

இரண்டாவது, அரசியல் காரணங்களுக்காகச் சிறை சென்றவர்களை ஏ. பி. சி. என்று மூன்று தரத்தினராகப் பிரித்து வைப்பதற்கு ஒப்புக்கொண்டோம். இதன் மூலம், பணக்காரர், ஏழை என்ற வித்தியாசத்தை நிலைநாட்டிக் கொண்டுவிட்டோம். தேச பக்தியென்பதும், அதன் செயல் வடிவமான தியாகமென்பதும் புனித

மானவையென்று ஏன் போற்றப் படுகின்றன வென்ருல், அவை, வேற்றுமைகளைக் கடந்து நிற்கிற காரணத்தினுல்தான். குடிசையிலே வளர்ந்த தேச பக்திக்குக் கட்டாந்தரைதான் கதியா? மாளிகையிலே வளர்ந்த தேசபக்திக்கு மின்சார விசிறி இல்லாமற் சரிப்படவில்லையா? எவ்வளவு கேவலம் இது?

இந்த மாதிரியான பிரிவினைகளெல்லாம் நிலைத்திருந்தால்தான், அந்நிய ஆதிக்கத்திற்கு அசைவு ஏற்படாது, அந்த ஆதிக்கத்தை அசைத்துக் கொடுக்கவல்ல தேசியமும் தலையெடுக்காது என்று தெரிந்தே பிரிட்டிஷார், ஆளுந்தந்திரத்தில் கைவல்ல பிரிட்டிஷார், இந்தப் பிரிவினைகளுக்கு மகிழ்ச்சியுடன் இடங்கொடுத்தனர். நாமும், இவையெல்லாம், நமக்குக் காட்டப்பெறும் சலுகைகளென்று கருதி ஏற்றுக் கொண்டோம். நமது தேசிய வாழ்வை அரிக்கும் கரையான்களே இந்த வேற்றுமைகளென்பதை நாம் அப்பொழுது உணரவில்லை. இந்த உணராதிருந்த ஒன்றே, சுதந்திரத்திற்கு நம்மைத் தகுதிப் படுத்திக்கொள்ள வில்லையென்பதை நிரூபித்துக் காட்டுகிறது. வேற்றுமைக் கரையான்கள் இன்னமும் நம்மை அரித்துக் கொண்டிருக்கின்றன.

காந்தியடிகள் கருதிய சுதந்திரம் வேருகவும், நாம் இப்பொழுது காண்கிற சுதந்திரம் வேருகவும் இருப்பதில் என்ன ஆச்சரியம்? "நான் கனவு காண்கிற சுயராஜ்யம், எந்த விதமான இன வேற்றுமையையோ, மத வேற்றுமையையோ அங்கீகரிக்காது; படித்தவர்களுடைய அல்லது பணக்காரர்களுடைய ஏகபோக உரிமைச் சொத்தாகவும் இராது. சுயராஜ்யமானது, எல்லோருக்குந்தான்; படித்தவர்களுக்குக் கூட; சிறப்பாக, அங்கவீனர்கள், கண் தெரியாதவர்கள், பட்டினியோடு உழைக்கும் ஏழைகள் ஆகிய இவர்களெல்லோருக்குந்தான்" என்ற காந்தியடிகளின் வாசகம் இங்கு நினைவு கூர்தற்குரியது.

பக்குவம் பெருத நிலையில் நமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டபடியால், நமது பொறுப்பு மிகவும் அதிகமாகிறது. ஒரே சமயத்தில், சுதந்திரத்திற்கு நம்மைத் தகுதிப் படுத்திக் கொள்ளவும் வேண்டும்; அந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் வேண்டும். இப்பொழுது சுதந்திரம் வேருகவும், நாம் வேருகவுமே இருக்கிரும். நம்முடைய பேச்சு, செயல், அன்ருட விவகாரங்கள், அரசியல் நடவடிக்கைகள் எல்லாவற்றிலுமே இன்னமும் அடிமைச் சாயல்படிந்திருக்கிறது. சுதந்திர உணர்ச்சி நமக்கு இன்னும் ஏற்படவில்லை. சர்தார் பட்டேல் கூறுகிற மாதிரி சுதந்திரத்திற் குரித்தான சூழ்நிலை இன்னும் அமையவில்லை.

தானுக வந்த சுதந்திரம், தானுகக் காப்பாற்றி கொள்ளும் என்று நாம் கருதிக்கொண்டிருப்போமானுல் நம்மைக் காட்டிலும் முழுமூடர்கள் இந்த உலகத்தில் வேறு யாரும் இருக்கமுடியாது. அப்படியே, நமக்குச் சுதந்திரம் கிடைக்கச் செய்த காந்தியடிகளின்பெயரை அடிக்கடி உச்சரித்துக் கொண்டிருப்ப தனுலேயோ, அவருடைய திருவுருவத்திற்குத் தூபதீபங் காட்டுவதனுலேயோ,

கிடைத்த சுதந்திரம் நிலைத்து நிற்கும் என்று எண்ணிக்கொண்டிருப்போமானால், கனவு உலகத்தில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கவேண்டும்.

ஒரு மகானைப் போற்றுவது சுலபம்; பின்பற்றுவது கடினம், ஆனால் மகான்கள், போற்றப்படுவதற்காக வாழவில்லை; பின்பற்றப்படுவதற்காகவே வாழ்ந்தார்கள்; வாழ்கிறார்கள். இந்த உண்மையை இனியாவது நாம் தெரிந்துகொள்ள வேண்டும். காந்தியடிகளை, உருவச் சிலைகளிலோ, பூந்தோட்டம், நடைபாதை இவை போன்றவற்றின் பெயர்களிலோ காண்பதில் பயனில்லை. நமது அன்றாடவாழ்க்கையில் அவரைக் காணவேண்டும். அவர் இறந்த நாளை நினைத்துக் கண்ணீர் உகுப்பதில் பிரயோஜனமில்லை; வாழ்ந்த நாளைக் கருதி, நமது வாழ்நாளுக்கு வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும். விவசாயியா, வியாபாரியா, சநாதனியா, சீர்திருத்தவாதியா, அரசியல் வாதியா, ஆத்ம ஞானியா, எல்லோருக்கும் அவர் வழிகாட்டியா யிருக்கிறார். அவரை நாம் வழிகாட்டியாகக் கொண்டோமானால்தான், உலகத்தினருக்கு நாம் வழிகாட்டியாக இருக்க முடியும்.

காந்தியடிகளைப் பொறுத்தமட்டில், லட்சியமும் சாதனமும் ஒன்றாகவே இருந்தன. லட்சியத்தைப் போல் சாதனமும் தூய்மையாயிருக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தி வந்தார். சமுதாய நலன் என்கிற லட்சியத்திற்காக, அரசியலை ஒரு சாதனமாகவே அவர் கொண்டார். ஜனங்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவர் ஒரு காரியத்தையும் செய்யவில்லை; ஜனங்களுடைய நன்மைதான், அவருடைய ஒவ்வொரு செயலின் குறிக்கோளாகவும் இருந்தது. அவர், அதிகார பலத்திற்கு அடிப்படையில் அன்பு பலம் இருக்க வேண்டுமென்று கூறினார். அரசாங்கமானது, ஜனங்களுடைய உயிரையும் பொருளையும் காப்பாற்றுவதற்காக மட்டும் இருக்கக் கூடாது, ஜனங்கள் நல்வாழ்க்கை நடத்துவதற்குத் துணை செய்வதாய் இருக்கவேண்டும் என்று அரசாங்கத்தின் கடமையை எடுத்துக் காட்டினார். இவற்றையெல்லாம், நமது அரசியல்வாதிகளும், அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கிறவர்களும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

பொது விவகாரங்களில் ஜாதி மத வேற்றுமைகளைப் புகவிடுதல் மிகக் கேவலம். எதனையும் ஜாதிக் கண்ணோடு அல்லது வகுப்புக் கண்ணோடு பார்க்கிற மனப்பான்மை அடியோடு ஒழியவேண்டும். இதனை எத்தனை தரம் திருப்பித் திருப்பிச் சொன்னாலும் பரவாயில்லை. ஏனெனின் சமுதாயத்தின் கட்டுக்கோப்பு இதனால் தளர்ந்துகொண்டு வருகிறது. இது மிகவும் ஆபத்து. இதை இன்னமும் வளர்த்துக்கொண்டு போவோமானால், கிடைத்த சுதந்திரத்தை இழந்துவிடுவது நிச்சயம். இந்த விஷயத்தில் காந்தியடிகளின் மனப்பான்மை எல்லோருக்கும் ஏற்படவேண்டும். அவர் கூறுகிறார் ஓரிடத்தில்: "நான் உறவினரென்றும் அந்நியரென்றும், வெள்ளையரென்றும் கறுப்பரென்றும்,

½ கப் கோதுமைமாவு, 1 கப் மைதாமாவு, ருசிக்குத் தகுந்தபடி உப்பு இவைகளை கலக்கவும். 3 தேக்கரண்டி டால்டாவை மாவுக்கலவையில் தேய்த்து, பூரிக்கு தயாரிப்பதுபோல் பிசைந்த மா செய்து சிறிய பந்துகளாக உருட்டிக்கொள்ளவும். பந்துகளை 3 அங்குலம் குறுக்களவுள்ள வட்டவடிவமாக பரத்தி இருபாதியாக துண்டிக்கவும். ஒவ்வொரு பாதியையும், விளிம்புகளை தண்ணீரால் நனைத்து ஒன்றோடொன்று பொருத்தி திருகோணமாகச் செய்துகொள்ளவும். மசாலா சேர்த்து பொடி செய்த உருளைக்கிழங்கும் பயறுமோ அல்லது சிறு மாமிசத் துண்டுகளோ, இந்த திருகோணத்தினுட் திணித்து மூடி பொருத்தவும். சூடான டால்டாவில் சமோசாக்களை சிறு சிவப்பாகும் வரை நன்றாக பொரித்து எடுக்கவும்.

வடித்த கஞ்சி ஒரு உணவா?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!

**தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்**

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1.

HVM. 96-50 TM

# அரிய நாவல்கள்

ரூ. அ.

| | | |
|---|---|---|
| சிப்பாய் ஹிருதயம் 'சுகி' | 1 | 8 |
| வளர் பிறை 'மாறன்' | 3 | 0 |
| பாசவலை ய. ல. | 1 | 8 |
| மரகதம் விக்டர்ஹ்யூகோ | 5 | 0 |
| மிருணாளினி பங்கிம்சந்தர் | 2 | 8 |

தபசியும், தாசியும் (அச்சில்)
அனத்தோல் பிரான்ஸிஸ்

தபால் செலவு தனி

## கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம்,
திருச்சினாப்பள்ளி ஜில்லா

கேசரியின்
மூன்று பிரசித்த மருந்துகள்

★

## லோத்ரா

கர்ப்பாசய நிவாரணி

மலடு, சங்காதோஷம், கெல்வாயு, தூக்கமின்மை, ஆஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

## அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, புலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றை குணப்படுத்தும்.

★

## அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்டு, மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

## கேசரி குடீரம் லிட்,

ராயப்பேட்டை, மதராஸ் 14.

ஹிந்துக்களென்றும் ஹிந்துக்களல்லாதாரென்றும் வித்தியாசப்படுத்திப் பார்ப்பதே இல்லை. அந்த மனப்பான்மை எனக்கு ஏற்படவில்லை.''

நாம் பேசுகிற ஒவ்வொரு பேச்சிலும், செய்கிற ஒவ்வொரு செயலிலும், நிதானம், கண்ணியம், உறுதி, அன்பு முதலிய பலவும் இருக்க வேண்டும். அரசாங்கத்தை எதிர்க்கிற மனப்பான்மை போய், அரசாங்கத்தோடு ஒத்துழைக்கிற மனப்பான்மை ஏற்படவேண்டும். அரசாங்கத்தின் குறைநிறைகள், நம்முடைய குறைநிறைகளின் பிரதிபிம்பம் என்பதை நாம் உணர வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஒழுங்காகவும் ஒழுக்கத்துடனும் நடந்து கொண்டால்தான், அரசாங்கம் ஒழுங்காகவும் ஒழுக்கத்துடனும் நடைபெறும். ஏனென்றால், நம்மிலிருந்து வேறு பட்டதல்ல அரசாங்கம்.

இப்படி நாம் சீர்திருத்திக் கொள்ள வேண்டிய அமிசங்களும், செய்யவேண்டிய காரியங்களும் பல இருக்கின்றன. இவற்றின் மீது உடனடியாக நமது கவனத்தைச் செலுத்த வேண்டும். அப்பொழுது தான், கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டவர்களாவோம்; காந்தியடிகளுக்கு நாம் செலுத்தவேண்டிய காணிக்கையையும் செலுத்தினவர்களாவோம்.

*

## ஜனநாயகம்

மக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுவிட்ட பிறகு, மக்களுடைய சுதந்திரத்தில் அரசாங்கம் தலையிடுவது என்பது மிக மிகக் குறைந்துவிடுகிறது. இதையே வேறு வார்த்தைகளில் சொல்லுகிறேன் : அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் தன் விவகாரங்களை இலகுவாகவும் நிரந்தரமான பயன் தரக்கூடிய முறையிலும் கவனித்துக் கொள்ளும் நாடுதான் உண்மையில் ஜனநாயக நாடாகும். இப்படிப்பட்ட நிலைமை ஒரு நாட்டில் இல்லை என்றால், அந்த நாட்டின் அரசாங்கம் பெயரளவில்தான் ஜனநாயக அரசாங்கமாக இருக்கிறது.

—மகாத்மா காந்தி

## உண்மையும் அன்பும்

நன்மார்க்கத்தின் முதல் கொள்கை என்ன தெரியுமா? உண்மையைப் பேசுவதும், உண்மையைச் சிந்திப்பதும், உண்மையைச் செயலில் காட்டுவதுமே ஆகும். உண்மையினாலும் அன்பினாலும் உலகம் முழுவதையுமே நாம் வென்றுவிடலாம் என்பது என் திடமான நம்பிக்கை.

—மகாத்மா காந்தி

## கடவுள் கூறியது

வேலை செய்து சாப்பிடவேண்டும் என்று கடவுள் மனிதனைப் படைத்தார்; வேலை செய்யாமல் சாப்பிடுகிறவர்களைத் திருடர்கள் என்று கடவுள் கூறினார்.

—மகாத்மா காந்தி

நவநாகரிகத்தில் மூழ்கிக் கிடந்த ஒரு வாலிபன் எப்படி காந்திஜியின் சொற்பொழிவைக்கேட்டு, அவர் வழியில் திரும்பினன் என்பதற்குத் தம் வாழ்வையே உதாரணமாகக் காட்டுகிறார், கட்டுரை ஆசிரியர்.

# காந்திஜி கற்பித்த கலை

பொ. திருகூடசுந்தரம்

1917-ம் ஆண்டில் நான் சட்டக் கல்லூரியில் பி. எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் காந்தியடிகள் ஆமதாபாத் நகரத்தின் அருகில் சபர்மதி நதிக்கரையில் தமது ஆச்சிரமத்தை நிறுவினர். அதன் தத்துவங்களையும் நோக்கங்களையும் அதில் அங்கத்தினராகச் சேர விரும்புவோர் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகளையும் பற்றி நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அந்தச் சுற்றுப் பிரயாண வட்டத்தில் சென்னை நகரமும் சேர்ந்திருந்தது.

ஒரு நாள் சென்னையில் அக்காலத்தில் லிங்கிச் செட்டித் தெருவில் ஆரம்பத்திலிருந்த கிறிஸ்தவ கல்லூரியின் முற்றத்தில் ஒரு கூட்டம் நடந்தது. காந்தியடிகள் பேசினர். பெரும்பாலும் மாணவர்களே குழுமி யிருந்தார்கள். இளைஞர்களைத் தமது வாழ்க்கை முறையில் ஈடுபடுத்துவதே காந்தியடிகளின் நோக்கம். அந்த மாணவர் கூட்டத்தில் நானும் ஒருவனாக இருந்தேன்.

காந்தியடிகள் அந்தக் காலத்தில் குஜராத்தி கனவான் தரிக்கும் உடையே அணிந்திருந்தார். அப்பொழுது அவரிடம் மகாத்மா என்பதற்குரிய லட்சணங்கள் எதுவும் மாணவர்களாகிய எங்கள் கண்ணுக்குப் புலனாகவில்லை. தென் ஆப்பிரிக்காவில் இந்தியாவின் கௌரவத்தைக் காத்த பெரியார் என்ற எண்ணம் மட்டுமே எங்கள் உள்ளத்தில் பதிந்திருந்தது. ஆயினும் அவர் எழுந்து பேச ஆரம்பித்ததும் அவருடைய முகத்தில் காணப்பட்ட ஒளியும் அவருடைய குரலில் காணப்பட்ட அன்பும் எங்கள் உளளத்தை அப்படியே கவர்ந்து கொண்டுவிட்டன.

அவர் சபர்பதி ஆச்சிரமத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து மனித வாழ்வின் லட்சியம் பிறர்க்கு உழைப்பதே என்பதையும் அந்த லட்சியத்தை அடைவதற்கு எளிய வாழ்க்கை முறையை ஏற்பதொன்றே வழி யென்பதையும் விளக்கிக் கூறலானர். அவர் கூறிய விஷயங்கள் எங்களுக்கு - இந்தியாவில் பிறந்து வளர்ந்த மாணவர்களாகிய எங்களுக்கு - சிறிதும் புதியனவாகத் தோன்றவில்லை. அவரும் அப்படியேதான் கூறினர். "நான் பழைய உண்மைகளுக்குப் புதிய வியாக்கியானமே கூறுகின்

றேன்" என்றுதான் சொன்னுர்.

ஆயினும் அவர் வாயிலிருந்து மொழிகள் வரவர எங்கள் உள்ளத்தில் இதற்குமுன் காணுத ஒருவித உணர்ச்சி உண்டாகிக்கொண்டேயிருந்தது. எல்லா மாணவர்களுடைய மனத்திலும் இந்த நிகழ்ச்சி உண்டாயிற்ருே இல்லேயோ, என்னுடைய மனத்தில் உண்டாயிற்று என்பதில் சந்தேகமில்லே.

அப்பொழுதுதான் ஆங்கில மகா கவி மாத்தியூ ஆர்னுல்டு என்பவர் மார்க்க ஔரேலியஸைப் பற்றிக் கூறியதன் உண்மையை உணர்ந்தேன். "மார்க்க ஔரேலியன் கூறியவை அனைத்தும் நான் அறிந்தனவே. ஆனுல் அவன் வாயிலிருந்து வரும்பொழுது அவை அதிகார சக்தியுடன் வந்து நம்முடைய இதயத்தில் புகுந்து நம்மை ஆட்கொண்டு விடுகின்றன" என்று கூறினுர் ஆர்னுல்டு.

"ஆட்கொண்டு" என்பதுதான் அதற்குரிய மொழி. அப்படியேதான் காந்தியடிகளுடைய மொழிகளும் அன்று என்னுடைய மனத்தில் புகுந்து என்னே ஆட்கொண்டன.

நான் எம். ஏ. பட்டம் பெறுவதற்காக இராஜதானிக் கல்லூரியில் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களிடம் கல்வி பயின்றுவந்த சமயத்தில் என்னுடைய உடை விஷயத்தில் நான் மேற்கொள்ளும் விசேஷ சிரத்தையைக் குறித்து ஆசிரியர் என்னிடம் கூறுவார். அதற்காக அவர் உபயோகித்த ஆங்கில மொழி-Fastidious என்பது-இன்னும் என்னுடைய ஞாபகத்தில் இருக்கிறது. அந்த மொழிக்கு "திருப்தி செய்வதற்குக் கஷ்டமான" என்பது பொருள். அவ்வளவு நவ நாகரிக புருஷனுக இருந்தேன் நான் அந்தக் காலத்தில்.

ஆனுல் அன்று ஒரு நாள் மாலே கிறிஸ்தவக் கல்லூரி முற்றத்தில் ஒரு குஜராத்தி மெதுவாகக் கூறிய மொழிகள் என்னே அந்த இடத்திலேயே வேறு மனிதனுக மாற்றிவிட்டது. எனக்கு என்னுடைய நாகரிகத்தில் வெறுப்பு மட்டுமன்று, அருவருப்பும் உண்டாய்விட்டது.

நான் 1921-ம் ஆண்டில் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து ஊர் ஊராகச் சென்று கதர்ப் பிரசாரம் செய்த காலத்தில், "கதர் அல்லாத துணிகளேக் களேந்து தீயிலிட வேண்டும் என்பது காந்தியடிகளின் கட்டளே" என்று நான் கூறிய மாத்திரத்தில் அநேக மக்கள் அவ்விதமே களேந்து தீயிலிட்டார்கள்.

அதுபோல் செய்யாவிடினும் அன்று காந்தியடிகள் எளிய வாழ்வின் அவசியத்தைப் பற்றிக் கூறியதைக் கேட்டதும் உடனேயே என் கழுத்தில் அணிந்திருந்த "கழுத்துச் சுருக்கு" (Neck tie) என்னும் ஆங்கில நாகரிக உடை விசேஷத்தை அவிழ்த்து அந்த முற்றத்தின் வாயிலில் எறிந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தேன். அன்று முதல் காந்தியடிகள் உபதேசித்த எளிய வாழ்க்கை முறையிலேயே என்னுடைய மனமானது சஞ்சரிக்க ஆரம்பித்தது.

பிறகு அவர் தென் ஆப்பிரிக்காவிலிருந்தபொழுது எழுதிய

"ஹிந்த் சுயராஜ்" என்னும் அரிய நூலைப் படிக்கும் பாக்கியம் பெற்றேன். அதன் இறுதியில் டால்ஸ்டாய், ரஸ்கின், கார்ப்பெண்டர் ஆகிய மூன்று பெரியோர்களுடைய நூல்களைப் படிக்குமாறு அவர் சிபார்சு செய்திருந்தார். அவைகளையும் படித்தேன். அவ்வளவுதான். அதன் பிறகு எளிய வாழ்க்கை நல்லதோ கெட்டதோ அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அதனிடம் அடங்காத காதல் உண்டாகி விட்டது. நான் அதைப்பற்றி வர்ணிப்பதைக் கேட்ட நண்பர்களில் சிலர் 'இதைக் காதல் என்று கூறுவது, மோகம் என்றேதான் கூற வேண்டும்' என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னாலும் அதில் தவறு ஒன்றுமில்லை. தவறு செய்தாலும் காந்தியடிகள் போன்ற சான்றோருடன் சேர்ந்துதானே தவறு செய்கின்றேன்.

கலைகளைப்பற்றி யாரேனும் பேசினால் காந்தியடிகள் "ஆம். கலைகள் அவசியம்தான். ஆனால் எந்தக் கலை நீங்கள் கூறும் கலைகளுக்கு அவசியமோ அந்த அஸ்திவாரமான கலையை மறந்து விடுகிறீர்களே. வாழ்வாகிய கலைக்குத் தானே மற்றக் கலைகள் எல்லாம் சாதனங்கள்?..." என்று கூறுவது வழக்கம்.

அந்த அடிப்படைக் கலையைப் பற்றித்தான் அன்று காந்தியடிகள் லிங்கிச் செட்டித் தெருக் கல்லூரியில் எங்களுக்குக் கற்பித்தார். சர்வ கலாசாலையில் படித்து எம். ஏ - மாஸ்டர் ஆப் ஆர்ட்ஸ், அதாவது சகல கலைகளிலும் வல்லவன் - என்ற பட்டத்தைப் பெற்றவன் நான். அஸ்திவாரமில்லாமல் அரண்மனை கட்டியிருப்பதாகக் கூறுவதே அதன் பொருள். காந்தியடிகள் இந்த உண்மையைக் கூறிய பிறகே என்னுடைய அசம்பாவிதமான காரியத்தை உணர்ந்தேன். காந்தியடிகள் கூறும் அஸ்திவாரத்தை அமைத்து அதன்பின் அதற்கு ஏற்றவாறு என்னுடைய கலைகளை அமைத்துக் கொண்டேன்.

அன்றும் அதற்கு முன்னும் பின்னும் காந்தியடிகள் கற்பித்த இந்தக் கலையை அறிந்து என்னைப் போலவே பயன் பெற்றவர் ஆயிரக் கணக்காக இருப்பர். அவர்கள் கோடிக் கணக்காக ஆகி உலகம் காந்தி மயமாக வேண்டும் என்பது மன் பேரவா.

✻

## ஒரு வேண்டுகோள்

பெற்றோர்களுக்கு என் வேண்டுகோள் இதுதான்: தம் குழந்தைகளுக்குப் பால்ய வயதிலேயே கல்யாணம் செய்து வைத்து அவர்கள் கழுத்தில் திரிகைக் கல்லைக் கட்டிப் போட்டுவிடக்கூடாது. பெற்றோர்கள், வளர்ந்துவரும் தம் சந்ததிகளின் நலத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டுமே ஒழிய, அவர்கள் வீண் டம்பத்துடன் எதை எல்லாம் விரும்புகிறார்களோ அதை எல்லாம் வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கக் கூடாது.

—மகாத்மா காந்தி

*அரசியல் தத்துவம் என்பது எது? எப்படியெல்லாம் வளர்ந்து வந்திருக்கிறது? இந்த விபரங்களை ரத்தினச்சுருக்கமாக, அழகாகக் கூறுகிறது இக் கட்டுரை.*

# அரசியல் என்றால் என்ன?

○

**காலக்கோலன்**

"**அரசியல்**" என்றால் என்ன?

அரசாங்க விவகாரங்களைப்பற்றிய பேச்சை நாம் அரசியல் என்று கூறுகிறோம். ஒரு மனிதன் அரசியல் வேலை செய்கிறான், அரசியலில் ஈடுபட்டிருக்கிறான் என்று நாம் கூறும்பொழுது அவன் அரசாங்க அதிகாரத்தை மாற்றக்கூடிய வேலையில் அல்லது இயக்கத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறான் என்று நினைக்கிறோம். ஆனால் "அரசியல்" என்ற வார்த்தைக்குத் திட்டவட்டமான பொருள் என்ன என்பதைச் சரிவரக் குறிப்பிடுவதற்கில்லை. எனினும் இப்பொழுது தமிழில் நாமும் நம்மவர்களும் பற்பல விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அவ்விஷயங்களில் அரசியல் என்பதும் ஒன்று. இது பௌதிகம், தாவரம் போன்ற ஒரு தத்துவம். இது 'அரசு' என்று குறிப்பிடப்படும் அரசாங்க அமைப்பைப் பற்றியது.

அரசியல் என்பது நடைமுறையில் சில கட்சிகள் தங்களுடைய லட்சியங்களைக் கூறி அவற்றிற்கு ஆதரவு தேடி, அரசியல் அதிகாரத்தை அடைவதற்குச் செய்யும் வேலை மட்டுமல்ல; அரசாங்கம் எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்பதை எடுத்துரைக்கும் தத்துவமும் ஆகும்.

சமூகத்தில் வர்க்கப் பிரிவினை இருக்கும் வரையில் உண்மையான ஜனநாயம் ஏற்பட முடியாது என்று சோஷலிஸ்டுத் தத்துவம் கூறுகின்றது. "சட்ட சபைகள் வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கும் சந்தைக் கூட்டம், தேசத்தின் நலனுக்கு உகந்த முறை பாசிஸ்டு முறைதான்" என்று பாஸிஸ்டுத் தத்துவம் கூறிற்று. ஜனநாயக ஆட்சி முறை ஏற்படுவதற்கு முன்னிருந்த மன்னனுடைய முடியாட்சி முறை சமூகத்திற்கு ஏற்றதென்று வாதித்தவர்களுமுண்டு. இவை அனைத்தும் பலவகை அரசியல் தத்துவங்கள். சரித்திரத்தில் தோன்றியுள்ள அரசியல் அமைப்பின் வெவ்வேறுவித அமைப்புகளையும், அந்தந்தக் காலங்களில் கூறப்பட்ட அரசியல் தத்துவங்களையும் கொண்டதே அரசியல். இன்றைக்கு சமூகம் இப்படி நடக்க வேண்டும், இந்த நியாய நியதிகளை அனுசரித்து அரசியல் அதிகாரம் செலுத்தப்பட வேண்டும் என்று ஒருவர் கூறுவதும் அரசியல் தத்துவமாகலாம்.

மனித சமூகம் ஆதி காலத்தில் ஏற்பட்டவுடன் அரசாங்க அமைப்பு தோன்றி விடவில்லை. நாளடைவில் தான் "ஸ்டேட்" (State) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் 'அரசு' ஏற்பட்டது. இந்த அரசுக்கு முக்கியமான அம்சங்கள் தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்டக்கூடிய சட்டமியற்றுவது; சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவது; அதை மீறியவர்களைத் தண்டிப்பது. இந்த வேலைகளைச் செய்வதற்குப் பலம் வேண்டும். இந்தப் பலத்தைப் பிரயோகிப்பவர்கள் அரசாங்கத்தினர், காவலாளர், படை வீரர்கள் ஆகியோர். ஓர் ஊரின் குடிகளைப் பிற ஊராரின் ஆக்கிரமிப்பிலிருந்தும் கொள்ளைக் கூட்டங்களிலிருந்தும் காப்பாற்றுவதற்காக அரசியல் அதிகாரம் ஏற்பட்டது என்றும் கூறுவதுண்டு. இவ்வாறு சமூகத்தின் மீது அதிகாரத்தைச் செலுத்தி, அதை அமல் நடத்துவதற்காக ஓர் அமைப்பை ஏற்படுத்தி இருப்பது அவசியமானது என்று கூறும் தத்துவமாக இருந்தது அரசியல். ஆனால் இந்த அதிகார முறையை மாற்ற வேண்டுமென்று கிளர்ச்சி ஏற்பட்டு வலுவடைந்த காலங்களிலெல்லாம் அந்தந்தக் காலத்திற்கேற்றபடி புதிய அரசியல் தத்துவங்கள் பிறந்தன. உதாரணமாக பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்ட பதினெட்டாம் நூற்றூண்டிலே பிரான்ஸ் தேசத்தில் மன்னர் முடியாட்சி மாற்றப்பட வேண்டுமென்றகிளர்ச்சிவலுவடைந்ததற்கு ரூஸ்ஸோவின் சமுதாய ஒப்பந்தம் (Social Contract) என்ற நூலை ஒரு முக்கிய காரணமாகக் கூறலாம். இம் மாதிரி சமயங்களில் அரசியல் தத்துவம் அரசியல் மாறுபாட்டுக்கு உடந்தையாகவும், காரணமாகவும்கூட இருந்தது.

அரசியல் துறையில் மாறுபாடுகள் ஏற்பட்டு வரும் சமயத்தில் புதிதாக ஏற்பட்டு வரும் அமைப்பைப் புகழ்ந்து, அதன் சிறப்பை எடுத்துரைக்கும் நூல்களும் தோன்றியுள்ளன. பதினேழாம் நூற்றூண்டின் இறுதியில் இங்கிலாந்தில் மன்னனுடைய அதிகாரம் பார்லிமெண்டு சபையால் கட்டுப்படுத்தப்பட்டது. ஜான்லாக் (John Locke) என்பவர் அக் காலத்தில் சிவில் அரசாங்கம் என்ற தலைப்புடன் இரு கட்டுரைகளை எழுதினார். அவை பார்லிமெண்டரி அதிகாரத்தின் அவசியத்தை எடுத்துரைப்பவை எனக் கூறலாம். அது போலவே பத்தொன்பதாம் நூற்றூண்டில் மில் என்பவர் எழுதிய லிபர்ட்டி (Liberty), ஜனப்பிரதிநிதித்வ அரசாங்கமுறை (Representative Government) என்ற இரு வியாசங்களும் பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையைச் சிறப்பித்தன. அந்தக் காலத்தில்தான் ஆங்கிலேயருடைய சாம்ராஜ்ஜியம் பல விடங்களில் பரவியது. மில் எழுதிய நூல்களைப் படித்து பல இந்தியர்கள் சுதந்திரம் வேண்டுமென்று கேட்க ஆரம்பித்தனர் என்று சிலர் கூறுவதுண்டு. மில் எழுதிய நூல்களிலிருந்து ஆங்கிலேயர்கள் மற்றவர்கள் மீது அரசாளுவதற்கும் ஒரு தத்துவம் பிறந்தது. அத் தத்துவம் அதிக வளர்ச்சி அடையாத ஜனங்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் அரசியல் வளர்ச்சி அடையும்

பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்று நடத்துவதாகக் கூறி, ஏகாதிபத்திய ஆட்சி நடத்தியதற்கு ஆங்கிலேயர்கள் நாகரிகத்தைப் பரப்பும் பணியை ஆற்றி வருவதாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பமளித்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் பிறந்தது சோஷலிஸ்டுத் தத்துவம். முதலாளித்துவ அரசாங்க அமைப்பையே அடியோடு மாற்றினால்தான் புதிய சமூகத்தை ஏற்படுத்த முடியுமென்று **மார்க்ஸ்** கூறினார். மார்க்ஸிஸ்டு தத்துவத்திற்கும், இதர அரசியல் தத்துவங்களுக்கும்ஒருவித்தியாசம்உண்டு. மார்க்ஸிஸ்டுதத்துவம் அரசாங்க அதிகாரமே அவசிய மற்றுப் போகும் ஒரு நிலையை சமூகம் அடையும் என்று கூறுகின்றது. சட்டமென்றும், சிறை யென்றும், தண்டனை யென்றும் சமூகத்தை அடக்கி ஆளவேண்டிய அவசியம் இல்லாத ஒரு நிலைமையை அத்தத்துவம் எதிர் பார்க்கின்றது. இந்த வகையில் பலாத்காரமே இல்லாத சமாதானம் நிலவும் ஒரு சாத்வீக சமுகத்தை அடையலாம் என்று மார்க்ஸிஸ்டுத் தத்துவம் கூறுகின்றது.

புராதன கிரேக்க சமூகம் மிகவும் வளர்ச்சி அடைந்திருந்தது. கிரேக்க நாகரிகம் உயர்ந்திருந்த காலத்தில் தான் அவர்களுடைய அரசியல் அனுபவமும் மிகச் சிறப்பாயிருந்தது. மேல் நாடுகளின் அரசியல் சாஸ்திரம் கிரேக்க தத்துவாசிரியர்களிலிருந்துதான் ஆரம்பமாகின்றது. பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும்இந்த கிரேக்க தத்துவாசிரியர்களில் மிகப் பிரசித்தி பெற்றவர்கள். கிரேக்க நாகரிகம் ஜனநாயக அமைப்பே சிறப்பானது என்று உணர்ந்தது. கிரேக்க தத்துவாசிரியர்கள் முடியாட்சி, பிரபுக்களின் ஆட்சி, மக்களின் ஜனநாயக ஆட்சி ஆகிய மூன்றையும்பற்றி உணர்த்தி ஜனநாயக ஆட்சியின் உயர்வை உணர்த்துகின்றனர். ஜனநாயக ஆட்சியைப்பற்றி சிறப்பாகப் பேசிய கிரேக்க சமூகத்தில் அடிமை முறை ஒரு முக்கியமான அம்சம். அடிமைகளின் உழைப்பிலே உயிர வாழ்ந்து சுகமாக வாழ்ந்தனர் கிரேக்கர். இந்தக் குறைபாடு இருந்த போதிலும் கிரேக்கர்களின் அரசியல் நூல்கள் ஆதி காலத்திலேயே அரசியல் சாஸ்திரத்தின் முக்கிய அம்சங்களை வகுத்துள்ளன.

**கா**லப் போக்கில் அரசாங்கத்தின் அதிகாரம் வளர்ந்து கொண்டே வந்தது. அரசியல் தந்திரங்களைப் போதித்து ஒரு மன்னன் எப்படி ஆட்சி புரிய வேண்டும் என்பதை **மாக்கியவெல்லி** (Machiavelli) என்ற இத்தாலிய அறிஞன் பதினைன்ரும் நூற்றாண்டியில் ஒரு நூல் எழுதித் தெரிவித்தான். பதினேழாம் நூற்றாண்டின் நடுவில் இங்கிலாந்தில் மன்னனுக்கும் பார்லிமெண்டுக்கும் மும்முரமான சச்சரவு ஏற்பட்ட காலத்தில் **தாமஸ் ஹாப்ஸ்** (Thomas Hobbs) என்ற நூலாசிரியன் **லெவியாதன்** (Leviathan) என்ற நூலில் அரசாங்க அதிகாரமே எல்லாவற்றிற்கும் மேலான அந்தஸ்துடையது என்று எழுதினான்.

இவ்வாறாக அரசியல் தத்துவம் பல அறிஞர்களால் வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

*இது துருக்கி நாட்டில் வழங்கும் ஒரு அழகான கிராமியக் கதை. இந்தக் கதையை உருவம் கொடுத்து பிரமாதமாக எழுதியிருக்கிறார் எழுத்தாளர்.*

# ஹோஜாவின் கோவில்

ஏ. கிட்ரோப்

அநேக வருஷங்களுக்கு முன்னால், தம் வாலிபப் பிராயத்தில், ஹாஜி பக்கிரியின் சிஷ்யனாகப் போய்ச் சேர்ந்தார் நாஸிர் உத்தின் ஹோஜா.

ஹாஜிபக்கிரி ஒரு முனிவர்; துறவி. அனதோலியாவின் செழிப்பு மிக்க பள்ளத்தாக்குப் பகுதியில் ஓரிடத்தில் அவர் வசித்து வந்தார். அங்கே ஒரு கல்லறைக் கோவில் இருந்தது. அந்தக் கோவிலைப் பராமரித்து வருபவர் ஹாஜி பக்கிரிதான். இவருக்கு முன்னால் அவ்விடத்தில் ஒரு முனிவர் வாழ்ந்து வந்தார். இப்போது, மற்ற முனிவர்களைப் போலவே, காலஞ்சென்ற அந்த முனிவரும் தம் சமாதியிலிருந்த வண்ணம், தம் சிஷ்யப்பிள்ளையாகிய ஹாஜி பக்கிரியைக் கருவியாகக் கொண்டு அவர் மூலம் தம் கைங்கரியத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார்.

வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் அந்தக் கோவிலுக்கு வருவார்கள்; வெள்ளுடையும், தலைப்பாகையும் தரித்து அமர்ந்திருக்கும் ஹாஜி பக்கிரியிடம் வந்து தங்கள் நோய் நொடிகளைப் போக்கிக் கொண்டு போவார்கள். ஹாஜி பக்கிரி மிகவும் ஆழ்ந்த குரல் எழுப்பி தம்முள் அடங்கியுள்ள சித்தைத் தட்டி எழுப்புவார்; பிறகு சிறு சிறு தோல் நறுக்குகளில் ஒரு மந்திரத்தை எழுதிக் கொடுப்பார்; பிணியாளர்கள் அந்தத் தோல் நறுக்குகளைத் தம் சரீரத்தில் ஒரு மண்டலம் இரவும் பகலும் தரித்திருந்தால் நோய் நொடிகள் யாவும் தீர்ந்து விடும்.

யாராவது ஒருவனுக்குக் காய்ச்சல் என்றால் தம் தொண்டையினால் உறுமுவதுபோல் சப்தம் செய்வார்; உடனே காய்ச்சல் பறந்து போய் விடும். வயிற்று வலியென்றால் தம் விரல்களால் தட்டிக் கொடுத்துக் கொண்டே மந்திரத்தை ஜெபிப்பார்; அவ்வளவில் வயிற்று வலி நீங்கும்! பிள்ளைப் பேறு வேண்டி மலட்டு ஸ்திரீ வந்தால் அவளுக்குத் தம் தாடி ரோமம் ஒன்றைப் பிடுங்கிக் கொடுப்பார்; அவள் அதைக் கொண்டுபோய், தூங்கும் போது தன் தலையணைக்குக் கீழே வைத்துக்கொண்டு தூங்கவேண்டும். இப்படி ஒன்பது மாதகாலம் செய்து வந்தால் அவளுக்குச் சந்தான பாக்கியம் கிட்டும்.

அந்தக் கோவிலின் பக்கத்திலேயே, ஹாஜி பக்கிரி ஒரு சிறு

மடாலயத்தைக் கட்டினார். அதிலே தான் எளிய முறையில் சந்நியாச வாழ்க்கையை நடத்தி வந்தார்; அந்த மடாலயத்தில் ஒரு சில சிஷ்யர்களைக் கூட்டி தம் ஞானத்தை உபதேசித்து வந்தார். அந்தக் காலத்தில் துருக்கியில் வேதகிரந்தத்தையும், அதன் பாஷ்யங்களையும் ஹாஜி பக்கிரியைப் போல தெரிந்து கொண்டவர்கள் யாருமே கிடையாது.

சிஷ்யர்கள் மடத்தின் சிப்பந்தி வேலைகளை எல்லாம் கவனித்துக் கொள்ளுவார்கள்; கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பது, திராக்ஷைத் தோட்டங்கள் காய்கறித் தோட்டங்கள் முதலியவற்றைப் பயிர் செய்வது, மாவரைப்பது, ரொட்டி சுடுவது, மட்டுக்கு மீறிய அதிகக் கூட்டம் கோவிலுக்கு வரும் சமயங்களில், வந்தவர்களுக்குப் பல்வலி, சிலந்தி, கால் நகங்கள் உள் நோக்கி வளர்ந்திருந்தால் அந்த நோய்—இப்படிச் சிறு நோய்களைக் குணமாக்குவது போன்ற காரியங்களைச் செய்து வந்தார்கள். இந்த சிஷ்யப்பிள்ளைகளில் நாஸிர் உத்தீனும் ஒருவர்.

நாஸிர் உத்தீன் ஹோஜா பட்டிக்காட்டுக் காரர்; இளைஞர். இன்னும் அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது; ஆனால் தம் குருநாதரிடம் அளவு கடந்த பக்தி செலுத்தினார்; அவருக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக இருந்தார். ஹாஜி பக்கிரியும் இந்தச் சிறுவன் மீது மிகவும் அன்பு காட்டி வந்தார்; மசூதிக்கு வேதப் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு வருவது, தம் அடர்ந்த தாடியை ஒவ்வொரு நாளும் காலையில் சீப்பால் வாரிவிடுவது போன்ற காரியங்களைச் செய்து வரும் தனிச் சலுகைகளை நாஸிர் உத்தீனுக்கே ஹாஜி பக்கிரி கொடுத்தார். இந்தச் சலுகை மிக்க பணிகளை நிறைவேற்றும்போதெல்லாம் நாஸிர் உத்தீனின் மகிழ்ச்சி கரை புரண்டோடும்; அதிலும் இவரோடு வசிக்கும் மற்ற சிஷ்யர்கள் இவரைப் பொறாமையோடு பார்ப்பதைக் காணும் போது மகிழ்ச்சிக்கு எல்லையே இராது.

ஒரு நாள் நாஸிர் உத்தீனுக்குத் தம் சொந்த ஊருக்குப் போக வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. இதைத் தெரிவிப்பதற்காகத் தலை குனிந்த வண்ணம் வந்து நிற்கும் நாஸிர் உத்தீனைப் பார்த்து ஹாஜிபக்கிரி, "மகனே! உன் முகத்தில் ஒளிரும் கதிரொளி எங்கே போய்விட்டது? அந்தப் பிரகாசத்தை, பாலைவனத்தின் மணற் சூறாவளிபோல அடித்துக் கொண்டுபோனது எது?" என்று கேட்டார்.

"சந்நிதானம் அவர்களே! நான் வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்து சரியாக ஒரு வருஷம் ஆகிறது. என் பெற்றோர்களைப் போய் ஒரு முறை பார்த்து வரவேண்டும் என்ற ஆவலுடையவனாக இருக்கிறேன்; இந்த ஆவலை எவ்வகையிலும் தணிக்க இயலாதவனாகத் தவிக்கிறேன். போய்ப் பார்த்தால் தான் இந்த ஆவல் நோய் தீரும் போல இருக்கிறது" என்றார் நாஸிர் உத்தீன்.

"அல்லாவுக்குப் பெருமை சேர்வதாக!" என்று சொல்லிவிட்டு ஹாஜிபக்கிரி சொன்னார்: "உன் ஆவல் நோயை எளிதில் குணப்படுத்திவிட முடியும். ஆனாலும்,

உன் துணி மணிகளை எடுத்துக் கொள்; கூடையில் கொஞ்சம் சாப்பாட்டையும் எடுத்துவைத்துக் கொள்; வெள்ளையாக இருக்கும் கழுதைக்குச் சேணத்தை மாட்டிக் கொண்டு உடனே புறப்படுவாயாக'' என்றார்.

நாஸிர் உத்தீனுக்குத் தம் செவிகளை நம்பவே முடியவில்லை. குனிந்து, ஹாஜிபக்கிரியினுடைய அங்கி நுனியை முத்தமிடும் போது நன்றியறிதலுடன் அவர் கண்களில் நீர் பொங்கியது.

"வா வா, இதெல்லாம் செய்வானேன்? இப்போது அதற்கு என்ன அவசியம்? உன் பெற்றோர்களிடமே போய்வா; அல்லா உனக்குத் துணை செய்வார். எப்போது இங்கு வரவேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போது வருவாயாக. மற்றொரு முக்கியமான விஷயம்: இந்த வெள்ளைக் கழுதையை பத்திரமாக கவனித்து கொள்ளவேண்டும். இது கிடைத்தற்கரிய அபூர்வமான பிராணி; இதை இழந்துவிட முடியாது.''

"என் கண்களைக் காப்பதை விட அதிக சிரத்தையுடன் ஜாரிபாவை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.'' என்றார் நாஸிர் உத்தீன் ஹோஜா.

ஜாரிபா என்பது அந்தக் கழுதையின் பெயர்.

"நல்லது, என் பரிபூரண ஆசியுடன் சென்றுவா மகனே. அல்லா உன்னைக் காப்பாராக!'' என்று விடை கொடுத்தனுப்பினார் ஹாஜிபக்கிரி.

மூன்று நாட்களாகிவிட்டன. ஜாரிபாவின் முதுகில் சவாரி செய்து கொண்டு இன்னும் தம் பிரயாணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் நாஸிர் உத்தீன். வரும் வழியில் சாலையோரத்தில் ஒரு நிழலில் கொண்டுபோய் கழுதைக்கு உணவு கொடுத்துவிட்டு தாமும் கொஞ்சம் இளைப்பாற்றிச் செல்ல வேண்டும் என்று, நல்ல நிழலான இடம் ஒன்றைப் பார்த்துக் கொண்டே வந்தார். ஓரிடத்தில் குடைபோல அகன்று பரவிய மரம் ஒன்று இருந்தது. அதன் கீழே ஜிலு ஜிலு என்று நீரோடும் ஒரு குளிர்ந்த ஓடை புல் வளர்ந்த வயலின் ஊடாக குமிழிட்டுக் கொண்டு ஓடியது. நாஸிர் உத்தீன் அங்கே வந்து, கழுதையின் கழுத்தில் காணப் பயிறு உள்ள ஒரு பையைக் கட்டினார்; ஓடையின் குளிர்ந்த நீரைப் பருகினார். கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு குளிர்ச்சியாக இருக்கும் புல்லின் மேல் படுத்து, வெண்ணீலமாக இருக்கும் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். வெகு சீக்கிரத்தில் அவருக்குத் தூக்கம் வந்துவிட்டது; தூங்கினார். தூங்கி எழுந்து பார்க்கும் போது தூரத்தே மேற்கு மலையில் சூரியன் தகத்தகவென்று ஊதா வர்ணத்துடன் அஸ்தமனமாகிக் கொண்டிருந்தான். எழுந்ததும் அவர் முதலில் கவனித்தது ஜாரிபாவைத்தான். அதன் வாயில் கட்டிய காணப்பயிற்றுப் பையிலிருந்து ஒரு காணத்தையாவது ஜாரிபா சாப்பிடவில்லை. இதைப் பார்த்ததும் அவருக்குத் திடுக்கிட்டுவிட்டது.

"ஜாரிபா! என் கண்ணின் ஒளியே! நீ ஏன் சாப்பிடவில்லை?'' என்றார் நாஸிர் உத்தீன்.

கழுதை மிகவும் துக்ககரமான பார்வையுடன் அவரைப்பார்த்தது; சக்தி கெட்டுப்போய் சிரமத்துடன் மூச்சுவிட்டது.

"ஐயோ! ஜாரிபாவுக்கு உடல் நிலை ஆரோக்கியமாக இல்லை! என்னவோ நோய்! இப்போது என்ன செய்வேன்?" என்று சொல்லி விட்டுக் கைகளைக் குவித்துக் கொண்டு வானத்தைப்பார்த்தார். "அல்லாவே! எனக்கு என்னவென்று விளங்கவில்லையே! எனக்கு என்னவென்று உணர்த்த மாட்டீர்களா அல்லாவே!" என்று பிரார்த்தித்தார். பிறகு கழுதையை ஓடையருகே கொண்டு போய் தண்ணீர் காட்டப் போனார்; அது தண்ணீர் குடிக்க மறுத்து விட்டது. உடனே நீரோரத்தில் வளர்ந்த பசும் புல்லைப் பிடுங்கிக் கொடுத்துப் பார்த்தார்; கழுதையோ தலையை மறுபுறம் திருப்பிக் கொண்டது. நாஸிர் உத்தீன் பின்பு கழுதையின் உடம்பை நன்றாகத் தேய்த்துத் தடவி விட்டார்; அதனுடைய வெள்ளை மயிரெல்லாம் நிலவொளியில் பள பள வென்று மின்னியது. என்ன செய்தும் பிரயோஜனப் படவில்லை. கழுதை அப்படியே கீழே படுத்து விட்டது. நாஸிர் உத்தீன் கழுதையை வளைய வளைய வந்தார்; 'கண்ணே, ராஜா!' என்று கெஞ்சிக் கதறிஅழைத்தார். கழுதை பல ஹீனத்துடன் வலுவற்றுப் போய் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது.

சூரியோதயம் ஆகும்போது ஜாரிபா செத்துக் கிடந்தது. நாஸிர் உத்தீன் ஹோஜா அதன் பக்கத்தில் துயரத்தில் ஆழ்ந்து போய் உட்கார்ந்திருந்தார். "இப்படிப்பட்ட ஆபத்து ஏற்பட்டு விட்டதே! இனி எப்படிப் போய் ஹாஜி பக்கிரியின் முகத்தில் விழிப்பேன்!" என்று வாதைப்பட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது தூரத்தில் ஏதோ சப்தம் கேட்டது. ஏறிட்டுப் பார்த்தார். யாத்ரீகர்களின் கூட்டம் சாரை சாரையாக புழுதி படிந்த சாலை வழியே சாவதானமாக வந்துகொண்டிருந்தது. அவர்களெல்லாரும் ஹாஜி பக்கிரியின் கோவிலுக்குப் போகிறவர்கள் தான்; அதில் சந்தேகமில்லை.

இப்போது ஹோஜாவுக்கு ஒரே பய பீதியாகிவிட்டது. யாத்ரீகர்கள் வருவார்கள்; வந்து செத்துக் கிடக்கும் கழுதையைப் பார்ப்பார்கள். பிறகு அதை ஹாஜி பக்கிரியிடம் போய்ச் சொல்லுவார்கள். இனி என்ன செய்வது? சுற்று முற்றும் பார்த்தார். சாலையோரமாக ஒரு பெரிய கிடங்கு இருந்தது. அதில் ஜாரிபாவின் பிணத்தைக் கஷ்டப்பட்டு இழுத்துக் கொண்டுபோய்த் தள்ளினார்; 'விறு விறு' என்று அதன் மேல் பக்கத்தில் கிடந்த பெரிய பெரிய கற்களை எல்லாம் எடுத்து அடுக்கினார்.

யாத்ரீகர்களின் கூட்டம் அங்கே வந்த சமயத்தில், ஜாரிபாவை கொஞ்சம்கூட வெளிக்குத் தெரியாதபடி மறைத்துவிட்டு, 'அப்பாடா!' என்று மூச்சுவிட்டார். ஹோஜா.

கும்பல் அங்கே வந்து நின்றது. அந்தக் கும்பலின் தலைவன் ஹோஜாவைப் பார்த்து,

"நண்பரவர்களே! தங்களுக்குச் சாந்தி கிட்டுமாக!" என்று பேசத் தொடங்கினான்.

"தங்களுக்குச் சாந்தியும், அல்லாவின் ஆசீர்வாதமும், அளவற்ற அருளும் கிட்டுமாக!" என்று சம்பிரதாய முறைப்படி சொன்னார் ஹோஜா.

"நண்பவரவர்களே! தாங்கள் இங்கே எதைப் புதைத்து அடக்கம் செய்து கொண்டிருந்தீர்கள்?"

ஹோஜாவின் குரல் தடுமாறி நடுங்கியது.

"ஏன்? எதற்காக? அது ஒரு கிழவரின் சடலம்; அவர் ஒரு முனிவர்; துறவி. என்னோடுதான் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். நேற்று இரவு தேக அசௌகரியத்தின் காரணமாகக் காலமாகிவிட்டார்; இப்போது அவரைத்தான் புதைத்துக்கொண்டிருக்கிறேன்."

"முனிவரா? துறவியா? அப்படியானால் நாங்கள் பேசாமல் கையைக் கட்டிக்கொண்டு நின்று அதன் மூலம் வசையைக் ஏற்றுக் கொள்ளலாமா? முனி சிரேஷ்டரை அடக்கம் செய்வதில் நாங்களும் ஒத்துழைக்கிறோம்" என்று சொல்லி அந்த யாத்ரீகன் அங்கு நின்ற வாலிபர்களையும் தன்னோடு வேலை செய்ய அழைத்தான்.

யாத்ரீகன் கழுதையை விட்டுக் கீழே இறங்கினான். ஜாரிபாவின் சமாதியில் கற்களை எடுத்து வைத்து அடுக்கத் தொடங்கினான். அந்த யாத்ரீகர்களில் ஒருவன் கொத்து வேலைக்காரன். பிறருடைய ஒத்தாசையைக் கொண்டு அவன் கூரிய கற்களைக் கொண்டே ஒரு கல்லறையைச் சமைத்துவிட்டான். அவனைப் பார்த்து பக்கத்தில் நின்றவர்களும் பொறாமைப் பட்டார்கள்.

ஹோஜா இதைப் பார்த்துக் கொண்டே நின்றார். எப்போதாவது உண்மை வெளியாகிவிட்டால், இந்த அழகான சமாதியின் அடியில் இருப்பது இன்னது என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டால், தன் கதி என்ன என்று எண்ணித் திகைத்துக்கொண்டிருந்தார்.

கல்லறை வேலை முடிந்தது. ஒரு கிழவன் ஹோஜாவின் பக்கம் வந்தான். அவன் ஒரு குருடன் என்பதை ஹோஜா அறிந்து கொண்டார்.

கிழவன் சொன்னான்:

"மகனே! நீ முனி சிரேஷ்டரின் சிஷ்யன். இழந்த பார்வையை எனக்கு மீண்டும் கொடுத்தருளும்படி நீ முனிவரிடம் கேட்டுக் கொள்ள மாட்டாயா? நான் என் குழந்தைகளையும், என் பேரப் பிள்ளைகளையும் பார்க்க வழி செய் அப்பா! தெய்வலோகத்தில் அவர்களைப் பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியவேண்டாமா?"

ஹோஜாவுக்குத் தொண்டை அடைத்துக்கொண்டது; மென்று விழுங்கினார். இப்படி எதிர்பாராத உபகாரத்தைச் செய்யும்படி கேட்பார்கள் என்று அவர் நினைக்கவில்லை. இந்தச் சிக்கலிலிருந்து தப்புவது எப்படி என்று எண்ணி எண்ணி மண்டையை உடைத்துக் கொண்டார். ஒரு வழியும் புலப்படவில்லை. மேலும் யாத்ரீகர்கள் எல்லோரும் இவர் எப்படி கண் பார்வையைத் தம் குருநாதரிடமிருந்து வாங்கி கிழவனுக்குக் கொடுக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் ஹோஜாவிடம் நெருங்கி வந்து கொண்டிருந்தார்கள்.

'தலைவிதி எப்படி இருக்கிறதோ அப்படியே நடக்கட்டும்' என்ற தீர்மானத்துடன், முன்பு ஹாஜி பக்கிரி எப்படி கண்ணில்லாதவர்களுக்குக் கண் கொடுப்பாரோ அதே முறைப்படி கிழவனுடைய அந்தகநிலையைப் போக்க முற்பட்டார்.

புதிதாகக் கட்டப்பட்ட கல்லறையைச் சுற்றியிருந்த மண்ணைக் கொஞ்சம் கையில் எடுத்தார்; அத்துடன் சிறிது தண்ணீரைக் கலந்தார். அந்த ஈரமண்ணைத் திரட்டி கிழவனின் கண்களின் மேல் வைத்தார். பிறகு, ஒரு மணிநேரம் விடாமல் எத்தனையோ மந்திரங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அவை என்ன மந்திரங்கள் என்று யாத்ரீகர்களுக்கும் புரியவில்லை; ஹொஜாவுக்கும் புரியவில்லை. கடைசியாகக் குருடனை ஓடையின் பக்கம் அழைத்துப் போய், கண்ணைக் கழுவும் படியாகக் கூறினார். கிழவன் அப்படியே செய்தான்; கண்பார்வை கிடைக்கும் என எதிர் பார்த்த வண்ணம் நடுங்கிக் கொண்டே கழுவினான். கழுவினதுதான், கிழவனுக்கு ஒரே பேரானந்தம்; குதித்தான்; ஆடினான்; பாடினான்:

"அல்லாவுக்குப் பெருமை சேர்வதாக! இப்போது என்னால் பார்க்க முடியும்! என்னால் பார்க்க முடியும்! என்னால் பார்க்க முடியும்!"

ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நிற்கும் ஹொஜாவைப் போய்க் கட்டித் தழுவினான் கிழவன்; எத்தனையோ ஆசிர்வாதங்களைச் சொரிந்தான். மற்ற யாத்ரீகர்களும் வந்து, ஹொஜாவைச் சூழ்ந்து கொண்டு முன்னினும் அதிகப் பயபக்தியுடன், தங்கள் தங்கள் நோய் நொடிகளைத் தீர்க்குமாறு வேண்டினார்கள்.

இப்படியாக ஹொஜாவின் கைங்கரியம் தொடங்கியது. சீக்கிரத்திலேயே, தம்மிடம் வரும் பிணியாளரின் நன்கொடையைப் பெற்று கல்லறைக் கோவிலின் அருகில் ஒரு சிறு மடாலயத்தைக் கட்டினார்; பிறகு அதையே ஒரு வழிப்போக்கர் விடுதியாகவும் விஸ்தரித்தார். யாத்ரீகர்கள் இராக்காலங்களிலோ, சிறிது நாட்களுக்கோ, தங்கள் இஷ்டப்படி அங்கே தங்கிச் செல்லுவதற்கு வழி செய்தார். அந்த மடத்தைச் சுற்றியுள்ள நிலத்தை விலைக்கு வாங்கி, சிறு தோட்டம் ஒன்றை உண்டாக்கினார்; நீர் நிலைகளை வெட்டித் திருத்தினார்; பசும் புல்லை வைத்து வளர்த்தார். மாலைக் காலங்களில் அவர் அதன் மேல் போய் படுத்துக் கொண்டு நட்சத்திரங்களின் உதயத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது வழக்கம்.

ஹாஜீ பக்கிரியைப் போன்ற கல்வியறிவோ, ஆகிருதியோ, தோற்றமோ ஹொஜாவுக்குக் கிடையாது. ஆனால் ஹாஜி பக்கிரி பராமரிக்கும் கல்லறைக் கோவிலில் அடங்கியுள்ள முனிவரை விட மகத்துவம் பொருந்தியவர் ஹொஜாவின் கல்லறை முனிவர் என்பதை யாத்ரீகர்கள் உணர்ந்து கொண்டார்கள்; மேலும் தம் குருநாதரைக்காட்டிலும் அதிகமாக,பற்பல நோய்களை ஹொஜா குணப்படுத்தி விட்டார்.

சில மாதங்கள் சென்றன. ஹொஜாவின் கோவில் மகத்துவம் துருக்கி தேசம் முழுவதும், மத்திய கிழக்குப் பிராந்தியம் முழுவதும் பரவியது. டைக்ரிஸ் நதிதீரம், நைல்

நதிப் பிரதேசம் போன்ற தூரப் பகுதிகளிலிருந் தெல்லாம் யாத்ரீகர்கள் வரத் தொடங்கினார்கள்; வைரங்கள், பட்டு, தந்தம் முதலிய வற்றைக் காணிக்கையாகக் கொண்டு வந்து செலுத்தினார்கள். இந்த வஸ்துக்களெல்லாம் கல்லறைக் கோவிலையும், மடத்தையும் அலங்கரிக்கப் பயன்பட்டன.

ஹோஜா இப்போது கனவுகலத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார். அவ்வுலகத்திலிருந்து எப்போதோ ஹாஜி பக்கிரியும் மறைந்துவிட்டார். ஜார்பாவும் மறைந்துவிட்டது. இதனால் ஹோஜா நன்றி கெட்டவர் என்று அர்த்தமல்ல; தினந்தோறும் வந்து கூடும் நூற்றுக் கணக்கான யாத்ரீகர்களைக் கவனித்து ஆவன செய்யவேண்டியிருந்ததால் ஹாஜி பக்கிரியைப் பற்றியோ, ஜார்பாவைப் பற்றியோ எண்ணிப் பார்க்க ஹோஜாவுக்கு அவகாசம் இல்லாமல் போய் விட்டது.

இங்கு இப்படி யிருக்க ஹோஜாவுக்கும் வெள்ளைக் கழுதைக்கும் என்ன நேர்ந்துவிட்டது என்று எண்ணித் திகைத்துக்கொண்டிருந்தார் ஹாஜி பக்கிரி. ஹோஜாச் சிறுவன் மீது அவருக்கு ஒரே பிரியம்; அவனை இழந்துவிட்டதை எண்ணி மனம் வருந்தினார். உண்மையில் அவர் மனதை மிகவும் துன்புறுத்தியது என்னவென்றால், தம் கோவில் கைங்கரியத்தில் மகத்தான சித்திகளைப் பெற்ற தம் அருமைச் சிஷ்யன் ஏதோ கீழ் நிலைக்கு இறங்கிவிட்டான் என்ற எண்ணமே.

ஒரு நாள் ஹோஜாவையும், சித்து விளையாடுகின்ற அவருடைய மகத்துவம் நிரம்பிய கோவிலையும் நேரில் போய்ப் பார்த்து வரவேண்டும் என்று தீர்மானித்தார் ஹாஜி பக்கிரி. அவருக்கு இன்னும் தம் சிஷ்யனாகிய ஹோஜாவும், இப்போது கல்லறைக் கோவிலைக் காத்துக் கைங்கரியம் புரியும் ஹோஜாவும் ஒரே ஆள்தான் என்ற விபரம் தெரியாது.

ஹோஜா சேவிக்கும் கல்லறைக்கு வந்து சேர்ந்தார் ஹாஜி பக்கிரி; மடாலயத்தைக் கண்ணுற்றார்; நன்கு பராமரிக்கப்பட்டு வரும் தோட்டங்களையும், வழிப் போக்கர் விடுதியையும், மட்டுக்கு மீறி வந்து கூடும் யாத்ரீகர்களையும் பார்த்தார்.

ஹோஜாவைச் சந்திக்க வந்து கொண்டிருக்கும்போது, 'இந்த நாஸிர் உத்தீன் ஹோஜா ஒரு பெரிய முனி சிரேஷ்டராகத்தான் இருக்க வேண்டும்' என்று தமக்குள்ளேயே ஹாஜி பக்கிரி சொல்லிக்கொண்டார்.

இருவரும் சந்தித்தார்கள்; திறந்த வாய் மூடாமல் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் நின்றார்கள்.

ஹாஜி பக்கிரியை முதலில் அடையாளம் கண்டு கொண்டார் ஹோஜா. உடனே பாய்ந்து, அவருடைய காலடியில் விழுந்து தண்டனிட்டு, கண்ணீர் சொரிந்து கொண்டு, தாம் செய்த தப்பிதத்தை மன்னிக்க வேண்டு என்று கெஞ்சினார்.

"சந்நிதானம் அவர்களே! இச் சாதிகெட்ட நாயைக் காலா உதைத்துத் தள்ளுங்கள்; ஒட்டகம் தின் சாணி என்று திட்டுங்கள்

என் முகத்தில் காறித் துப்புங்கள்; தங்கள் நிழலைக்கூடத் தொடத் தகுதியற்ற கடைப்பட்டவன் நான்'' என்று கூறி ஹோஜா அழுது புலம்பினார்.

"அப்படியானால் அது நீதானா! பரவாயில்லை, இப்படியாகும் என்று யாரப்பா நினைத்திருக்கக் கூடும்? இந்தமாதிரி நீ வருந்த வேண்டாம், ஹோஜா. நீ வெட்கப்பட எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக என் சிஷ்யன் ஒருவன் இப்படிப் பெருமைப்பட வாழ்கிறான் என்பதைக் காண நான் மிகவும் பெருமைப் படுகிறேன்'' என்றார் ஹாஜிபக்கிரி.

"சந்நிதானம் அவர்களே! தங்களுக்கு விஷயம் என்னவென்று தெரியாது; விஷயம் என்னவென்று தெரியாது.''

"மகனே, எனக்குத் தெரியாத அந்த விஷயம் என்ன?''

"இந்தக் கல்றைக்குள்ளே அடங்கி யிருப்பது யார் என்பதைத் தாங்கள் அறியமாட்டீர்கள்.''

"நானும் அதைக் கேட்கத்தான் இருந்தேன் ஹோஜா. இந்தக் கல்லறையில் அடங்கி யிருக்கும் உன் முனி சிரேஷ்டர் யார்?''

ஹோஜா மென்று விழுங்கினார்; மெல்லிய குரலில் சொன்னார்:

"ஜாரிபாதான்.''

"ஜாரிபாவா!''

ஹோஜா மன வருத்தத்துடன் 'ஆம்' என்று தலையை அசைத்தார்.

"இது யாருக்காவது தெரியுமா?'' என்று கேட்டார் ஹாஜி பக்கிரி.

"யாருக்கும் தெரியாது. ஆனால் அதைத் தங்களுக்குச் சொல்லிவிட வேண்டும் அல்லவா?''

"நடந்த சமாச்சாரம் என்ன?''

ஹோஜா எல்லாக் கதையையும் ஆதியோடு அந்தமாகச் சொன்னார். அவர் சொல்லி முடித்ததும், ஒரு ஐந்து நிமிஷ நேரம் ஹாஜி பக்கிரி கீழே உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். பிறகு நாஸிர் உத்தீன் ஹோஜாவை அழைத்துச் சொன்னார்:

"நாஸிர் உத்தீன்! என்னுடைய கல்லறைக் கோவிலில் அடங்கியிருக்கும் முனிவர் யார் என்பதை அறிய நீ ஆசைப்பட்டிருப்பாய் என்று நினைக்கிறேன்.''

"ஆம், சந்நிதானம் அவர்களே, நான் ஆசைப்பட்டதுண்டு. அந்த முனிபுங்கவர் யாரோ?''

பய பக்தியுடன் ஹாஜி பக்கிரி பதில் சொன்னார்:

"ஜாரிபாவின் பாட்டி.''

## பொறுமையின் பெருமை

பொறுமையை இழந்துவிட்டோமானால், போரில் நமக்குத் தோல்விதான் கிடைக்கும். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப் பொறுமை இருக்குமோ (பொறுமை என்பது தியாகத்தின் மறுபெயர்தான்) அவ்வளவுக்கு அவ்வளவு நமக்குப் பலம்.

—மகாத்மா காந்தி

# கடைசிப் பிரார்த்தனை

○

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

வெள்ளிக்கிழமை : மாலை 5-40 : 30—1—49

மெய்யுறு எலும்பில் தாக்கி,
வெள்ளமாய் குருதி தேக்கி,
கையறு நிலைமைதன்னை
வேதனை கழுறுமாமோ?
மெய்வழி புகன்று, பாரில்
வீரன் போல் ஆவி நீத்து
ஐயன் வீழ் கொடுமை—கூறும்
அபசுரம் ஒலிக்கும் சொற்கள்.

சாந்தியின் அமுதக் கிண்ணம்
தளர்கின்ற கரத்தில் ஏந்தி
'மாந்திட வாரீர்' என்று
மக்களை அழைத்த அண்ணல்
காந்தியின் போதம், பொய்யர்
சழக்கிடை கரப்பதன்றே!
ஏந்தலின் ஆன்மா இங்கு
பிணப்பறை ஏற்பதன்றே!

படம்: கே. எம். ரங்கசாமி, சென்னை

ஆர்த்தசபை நூற்றொருவர்;
ஆயிரத் தொன்றாம் புலவர்
(1946ல்-சென்னை எழுத்தாளர் கூட்டத்தில் காந்திஜி)



"சித்திரத்தில் காண்போம்
சிலை செய்து கும்பிடுவோம்"

[14-1-49-ல் கல்கத்தா கலைக் கழகத்தினர் பரிசளித்த காந்திஜியின் திருவுருவப் படத்தை, கல்கத்தா கார்ப்பரேஷன் கட்டடத்தில் பண்டித ஜவாஹர்லால் நேரு திறந்து வைக்கும் உருக்கமான காட்சி]

"தாதையவன், மக்கள் நாம் என்று கூறும்
தகவு பெற வழிபார்ப்பீர்; தர்மம் காப்பீர்"

[30-1-49-ல் டில்லியில் காந்திஜியின் சிரார்த்த தினத்தன்று நூல் நூற்கும் வைபவமும் நடை பெற்றது. ஆச்சாரிய விநோபா பாவேயுடன் பண்டித ஜவாஹர்லால் நேரு அமர்ந்து நூல் நூற்கும் காட்சி]

மேல் படம்:

சென்னையில் 1946-ல்
நடைபெற்ற பக்தி மயமான
ஒரு பிரார்த்தனைக் கூட்டம்

கீழ் படம்:

டில்லியில் 1949-ல்
நடைபெற்ற துக்க மயமான
ஒரு பிரார்த்தனைக் கூட்டம்

30-1-49-ல் காந்திஜியின் சிரார்த்த தினத்தன்று பிரார்த்தனைக் கூட்டத்தில் தலைவர்கள் புடைசூழ அமர்ந்து பேசுகிறார் வினோபா பாவே





இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக அரும்பாடு பட்டார் மகாத்மா. வீடு தேடிப் போய் ஜனாப் ஜின்னாவைக் கண்டு பேசி வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்ட முயன்றார்; நவகாளியில் வகுப்புக்கலவரம் காட்டுத்தீயாக வளர்ந்து பரவியபோது, அங்கே சென்று சரித்திரம் கண்டிராத வாறு அமைதியை நிலைநாட்டினார். வகுப்பு ஒற்றுமைக்கு பாடு பட்ட இந்த புனித உயிர், வகுப்பு வெறிக்குப் பலியான மறக்க முடியாத காட்சியையே வலப்புறத்தில் காண்கிறோம்.



*புலவர்களுக்குள்ளும் போட்டியும் சண்டைகளும் உண்டு. அவற்றைக் காரசாரமான பாடல்கள் மூலம் அவர்கள் வெளியிட்டுவிடுவார்கள். அவர்கள் சண்டைபோட்டுக் கொண்டது நமக்கு லாபகரமாகப் போய்விட்டது. அதன் மூலம் நயமான பாடல்கள் கிடைத்துவிட்டன அல்லவா?*

# புலமைக் காய்ச்சல்

○

**போ. குருசாமி**

தமிழ் இனத்தவரிடையே ஏன் ஒற்றுமை இல்லை? இந்தக் கேள்வி நண்பர்களின் குழுவில் ஒருநாள் எழுந்தது. அப்போது உடனிருந்த அரசியல் தலைவர் ஒருவர் பின்வருமாறு கூறினார்: "தமிழர்கள் யாவருமே நல்ல அறிவாளிகள். ஒவ்வொருவரும் தத்தம் கருத்தே சிறக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள். எல்லோருமே சிந்தனை ஆற்றல் பெற்றால் கருத்து வேறுபாடு பெருகுவதும், ஒற்றுமையின்மை தோன்றி வளர்வதும் இயற்கைதான்."

அறிவுலகிலே ஒருவரை ஒருவர் விஞ்சப் பார்ப்பதும், தத்தம் தலைமையே பெரிதென நிலை நாட்ட அரும்பாடு படுவதும் மிக மிக இயற்கைதான். தலைமையும் அதை யொட்டிய சிறப்பும் கருதிப் போட்டி ஏற்படுவதும் எதிர் பார்க்கக் கூடியதுதான். அறிவுலகில் அமைந்து கிடைக்கும் இந்த இயற்கை காரணமாகத்தான், புலவர்களிடையே போட்டி, பொறாமை, பூசல், வசை முதலியவற்றைக் காணுகிறோம். 'புலமைக் காய்ச்சல்' என்ற தொடரும் தமிழகத்தில் நெடுங்காலத்துக்கு முன்னரே ஏற்பட்டுவிட்டது. புலவர்கள் தங்கள் அறிவுத் திறனை நிலை நாட்ட வேண்டுமாயின் சில முறைகளைக் கையாளவேண்டும். பிற புலவர்கள் கூறுவனவற்றுள் பிழைகள் உள என்று காட்டுவது அவற்றுள் ஒன்று. எனவே, பிறர் படைப்புகளில் எங்கே குற்றம் குறைகள் இருக்கின்றன எனத் தேடுவதே புலவனின் இயல்பு என்று கூட ஆகிவிட்டது. இப்பண்பு காரணமாகவே, வடமொழியில் 'தோஷக்ஞன்' (பிழையறிவோன்) என்று புலவனைக் குறித்தனர்.

பிற துறைகளில் அறிவுப் போட்டியால் ஏற்படுகின்ற விளைவுகள் பெரும்பாலும் தீயனவாகவே இருக்கும். அந்தப் போட்டியில் ஈடுபடுவோர் உள்ளப் பண்பினை ஒதுக்கி விடுவதுதான் தீமை விளைவதற்குக் காரணமாகிறது. ஆனால், புலவனாக உள்ளவனுக்கு உள்ளத்து உயர்வு நீக்க முடியாதது. உள்ளமும் அறிவும் ஒருங்கே இயங்கும் நிலையில்தான் புலமையின் கொடுமுடியைக் காண இயலும். உள்ளத்து உணர்வற்று உயர்நிலையதாகிய அறிவு மட்டும் பெற்றோர் பெரும் சூழ்ச்சிக் காரராகவே இருப்பர்; அறிவுல

ஆ... கல்வி...

கப் போட்டி என்று கருதுங்கால், வெறும் அறிவுமட்டும் கொண்டோர் ஒரு சாரார் எனவும், உணர்வு கலந்த அறிவினர் பிறிதொரு சாரார் எனவும் உணர்தல் வேண்டும். இவருள் பின் நிலையினரே புலவர் என்று கூறுதற்குரியர். அவரிடையே நிலவும் போட்டிக்கு காரணமாவதையே 'புலமைக் காய்ச்சல்' என ஆன்றோர் குறித்தனர்.

புலவர்களிடையே ஏற்படுகின்ற போட்டிக்குக் காரணம், முன்னே கூறியவாறு தலைமை வேட்கை தான். தலைமை வேட்கையை விரும்பும் புலமையுள்ளம் தன்னை எவ்வெவ்வாறு புலப்படுத்துகிறது என்று காணலாம்.

நலங்கிள்ளி என்பானும் நெடுங்கிள்ளி என்பானும் சோழர் குடித் தலைவர்கள். ஒருவரை ஒருவர் பகைத்தனர். நெடுங்கிள்ளி உறையூர்த் தலைவன். அவ்வூர்க்குள் இளந்தத்தன் என்ற புலவன் வந்து சேர்ந்தான். எவரோ செய்த சூழ்ச்சியால் நலங்கிள்ளியின் ஒற்றனே இளந்தத்தன் என்ற குற்றம் புலவன் தலைமீது விழுந்தது. நெடுங்கிள்ளியும் ஆராயாது, புலவனைக் கொல்லப் புகுந்தான். அப்போது கோவூர்கிழார் என்ற புலவர், ஏழைப் புலவரின் நிலை இது என எடுத்துக் கூறி, இளந்தத்தனை மீட்கிறார். "எத்தனை காடுகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் கடந்து வந்து, வள்ளல்களை நாடி; பாடிப் பிழைக்கும் இந்தப் புலவன் வாழ்க்கை பிறர்க்குத் தீங்கு செய்தறியாதது" என்று அடக்கமாகச் சொல்லுகிறார் கோவூர்கிழார். புலவன் எப்படிப் பட்டவன்?

வள்ளியோர்ப் படர்ந்து
புள்ளிற் போகி
நெடிய என்னது
சுரம்பல கடந்து
வடியா நாவின்
வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து...

வாழ்வது புலவனின் வாழ்க்கை என்று கூறுகின்றார். "இதுவும் ஒரு வாழ்க்கையா? பிச்சை எடுப்பதே தொழிலாகக் கொண்டது ஒரு பிழைப்பா?" என வினவத் தோன்றுகிறது.

அவரே கூறுகிறார்:

—பரிசில் வாழ்க்கை.

ஆம் பரிசில் வாழ்க்கைதான். ஆனால் பரிசுகெட வாழும் வாழ்க்கை யன்று.

—வரிசைக்கு வருந்தும் இப்
பரிசில் வாழ்க்கை.

என்று குறிப்பது கருதத்தக்கது. "தகுதியை நிலை நாட்டுவதற்காகப் பாடுபடும் பரிசில் வழக்கை" என்பது கருத்தாகும். தங்கள் அறிவுத் தகுதிக்குக் கேடு வரும் வண்ணம்— அறிவுலகின் தலைமைக்கு மாசு வரும் வண்ணம்— புலவர்கள் வாழார் என்ற கருத்தை விளக்குவதே கோவூர்கிழாரின் நோக்கம். தங்கள் தகுதி குறைக்கப் படுதல் கூடாது, புலவர் அதனை ஏற்கமாட்டார் என்ற கருத்தினை மேலும் புலப்படுத்துகின்றார்.

வரிசைக்கு வருந்துமிப்
பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந்தன்றோ
இன்றே, திறப்பட
நண்ணார் நாண
அண்ணாந்து ஏகி
ஆங்கு இனிது
ஒழுகி னல்லது.

தங்கள் துறையிலே பகைவராயுள்ள புலவர்களை நாணச் செய்து நிமிர்ந்து நடப்பதுண்டு. ஆங்கே பெருமிதம் தோன்ற நடப்பது தவிர, பிறர் எவர்க்கும் தீங்கு அறியாதது, புலவனின் பரிசில் வாழ்க்கை. அங்கேயும் பெருமிதம் எதற்கு என்று கேட்கலாம். புலவனின் வாழ்க்கை தகுதியைக் குறிக்கோளாக உடையது— வரிசைக்கு வருந்துவது— இது மேற்கண்ட வரிகளின் கருத்து.

கோவூர்கிழார் அதோடு நிற்கவில்லை. புலவன் வாழ்விலே புகுகின்றவன் புரவலனாகவே இருந்தாலும் அனுமதிக்க அவர் தயாராக இல்லை. "நீ புவித் தலைமை பெற்றவன் என்று எண்ணுகிறாயா? எங்களுக்கும் ஒரு தலைமை உண்டு" என்று எடுத்துக் காட்டுகிறார்:

—ஓங்குபுகழ்

மண்ஆள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன
செம்மலும் உடைத்தே

"மன்னர் வாழ்க்கை புவி ஆளும் செல்வத்தால் தலைமையும் புகழும் பெறுவதென்றால், புலவன் வாழ்க்கை கவியாளும் செல்வத்தால் தலைமையும் புகழும் எய்துவது. இதனை அறிக" என்று எடுத்துரைப்பதுபோல இடித்துரைக்கும் நயம் இப்பாடலில் பாராட்டத் தக்கது.

பாடலின் நயம் ஒரு பக்கம் இருக்கட்டும். அதன் கண் ஒளிரும் கருத்தை எண்ணிப் பாருங்கள். புலவன் அறிவுத் துறையில் உள்ளவன், தன் தலைமையை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாய் இருப்பவன். தன்னைப் பற்றி 'வடியா நா,' 'பரிசில் வாழ்க்கை' என்ற தொடர்களால் குறிக்கநேர்ந்த இடத்திலும் தகுதிக்கும் தலைமைக்கும் இழுக்குண்டாவதைப் புலவன் ஏற்கமாட்டான். நாம் பார்த்த கதையினுள் இக்கருத்து நலம் கனிந்த கவி நலமே சுவைக்கத் தக்கது.

வரிசைக்கு வருந்தும் புலமை வாழ்க்கை சங்க காலத்தில்தான் இருந்ததோ என்று யாரும் எண்ணவேண்டாம். எந்தக் காலத்திலும் உள்ளது புலமைக் காய்ச்சல்.

காளமேகப் புலவர் கதை யாவரும் அறிந்ததுதான். அதிமதுரக் கவிராயரின் கூட்டத்தாருக்கும் அவருக்குமிடையே நிகழ்ந்த கவிப் போட்டியில் விளைந்த பாடல்கள் பின் வருவன:

மூச்சுவிடு முன்னே
முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும்
ஆகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிக்காள
மேகமே! உன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக்
கட்டு

—இது அதிமதுர கவிராயரின் பாட்டு. காளமேகத்தின் பாட்டென்ன சளைத்ததா? பதந்தான் சளைத்ததா?

இம்மென்னு முன்னே
எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்
பாட்டாகாதா—சும்மா
இருந்தால் இருப்பேன்
எழுந்தேனே யாகில்
பெருந்தரை மேகம்
பிள்ளாய்

ஒருவர் மூச்சு விடுமுன்னே மூந்நூறும் நானூறும் பாடுவாராம்!

போட்டிக்கு வந்தவர், 'மூச்சு விடு முன்னே என்ன? இம்மென்னும் முன்னரே எழுநூறும் எண்ணூறு மாகப் பாடுவேனே!'' என்கின்றார்! எப்படி இருக்கிறது, போட்டி?

இத்தகைய போட்டிகளில் ஈடு படுகின்ற புலவர்கள் தங்கள் உள்ளத்துச் சான்றாண்மை, உரையில் இனிமை ஆகியவற்றை மறந்து விடுவதுகூட உண்டு. உள்ளப் பண்பை ஒழிப்பதால் வருவனதான் 'யமகண்டம்' போன்ற சோதனைகள். உரையிலே நிலை தடுமாறும்போது புலவர்களின் வாயிலே வரத் தகாதனவும் வரும். இதோ பாருங்கள்:

"......சீறுமா றுகவே
தாறுமா றுகள்சொல்
திருட்டுக் கவிப் புலவரைக்
காதங்கறுத்துச்
செருப்பிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்து......"

சரி இது போதும், சொல் தன் வரையறை கடந்து சென்று, செலச் சொல்லும் புலவரைச் சுடச் சொல்லும் நிலையினராக மாற்றி விடுகிறது.

புலவர்கள் மோதும்போது இத்தகைய 'வரிசை நாட்டுப் படல'ங்களைக் காணலாம். சீட்டுக் கவிகள் என்ற வகையான பாடல்கள் உண்டு. அவற்றிலே புலவர்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதற்கு ஓர் எல்லையே இராது.

"கற்பனை பிறப்பிடம்
கலைமக ளிருப்பிடம்
கவிமாரி பொழியும் மேகம்..."

என்று இந்த வண்ணமாகத் தற்புகழ் விரியக் காணலாம்.

முன்னே காட்டிய புறநானூற்றுப் பாடலுக்கும் பின்னே காட்டிய இடைக்காலப் பாடல்களுக்கும் இடையே உள்ள பண்பு நிலையினை எண்ணிப் பாருங்கள். பின்னே வந்த பாடல்களில் என்ன தான் கற்பனை நயமும் சொல்லாட்சிச் சதுரப்பாடும் இருந்தாலும், உள்ளப் பண்பாடு ஒதுங்கிவிட்டது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. உள்ளத்தின் சான்றாண்மையும் உரைக்கின்ற சொற்களின் நுட்ப நாகரிகமும் சங்க இலக்கியங்களிலே உள்ள அளவு, பின்னைய நூல்களிலே இல்லை என்று சொன்னால் அது மிகையன்று. இங்கே நாம் கண்டது ஒரு காட்சி. இத்தகையன பல பல காட்டலாம்; காணலாம். இந்த மாறுதல் எப்படித் தோன்றியது என்பது வேறு ஆராய்ச்சி; இங்கே வேண்டியதில்லை. ஒன்றை மட்டும் மறக்க வேண்டாம். தரத்திலே ஏற்றத் தாழ்வு இருந்தாலும், தகுதியும் தலைமையும் காப்பதில் புலவர்கள் எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருந்திருக்கின்றனர்.

பாட்டு என்றால் புலவர் பெருமக்களின் தனிச் சொத்து என்பதில்லை. இதனை இந்தக் காலத்தில் விளக்க வேண்டுவதில்லை. நாட்டுப்புறங்களில் வாழும் நல்ல பேறு பெற்ற மக்களின் உள்ளம் பொங்கி எழுவதால் உயர்ந்த கவி மணிகள் நமக்குக் கிடைக்கின்றன. அங்கே கூட, இந்தப் புலமைக் காய்ச்சல் இருக்கிறது; நிறைய இருக்கிறது.

மிக நாகரிகம் வாய்ந்து விட்டவர்கள் என்ற பேர் பெற்று, அரசவைகளில் அமருகின்ற புலவர்களே 'செருப்படி' 'எமனேறும் பரி'

என்றெல்லாம் சொற்களைப் பரிமாறிக் கொள்ளுகிறார்கள். அப்படியானால், குச்சு வாழ்வும் கொச்சை மொழியும் கொண்ட சாதாரணக் குடி படைகளின் பாடல்களிலே 'நாகரிக'க் குறைவு இருந்துவிட்டால் என்ன, குடி முழுகியா போய் விடுகிறது! அப்படியே போய் விடும் என்று எண்ணினாலும், பரவாயில்லை. அவர்களைப் போல் நமக்கு வாழத் தெரிந்தால், 'நாகரிகம்' என்ற பெயரால் உலகத்தை அழிக்கமாட்டோம் என்ற நினைவோடு பின் வரும் 'புலமைக் காய்ச்ச'லைப் பாடிப் பாருங்கள்:

வாகரிசித் திருமகனே
   வாதுக்காடா படிக்க வந்தே?
வரிசைக்குப் புடிக்கலெண்ணு
   வச்சிருவேன் மண்டையிலே

மாக்கால் களவாணி
   மாவிடிக்கும் குந்தாணி
சொக்காய் களவாணி
   சொல்லிவாடா ஓம்பாட்டை

(களவாணி—திருடன். ஓம்பாட்டை—உன் பாட்டை)

பாட்டுக்குப் பாட்டெடுப்பேன்
   பாட்டனைத் தோற்கடிப்பேன்
எதிர்ப்பாட்டுப் படிக்கெலெண்ணு
   ஏணிவச்சுப் பல்லுடைப்பேன்

(தப்பிப் போய்விடலாம் என்று எண்ணாதே; எங்கே போனாலும் விடமாட்டேன். பல்லை உடைக்காமல் உன்னை விடுவேனா?)

இதுவரை வசை கலந்த பாட்டாக இருந்தது. இனி, வசையே பாட்டாக வருகிறது.

கந்தைத் துணிபொரக்கி
   கடைக்குக் கடை நெல்பொரக்கி
பீத்தைத் துணி பொரக்கி
   பீத்தாதே ஓம்பாட்டை

எதிராளி சளைக்கவில்லை. ஒரு படி மேலே போய்த் திட்டுகிறான்:

சுண்டான் எலிபோலே
   சுடுகாட்டு வெள்ளெலியா
அண்டத்து ரோமம்போலே
   அடக்கிவைபி ஓம்பாட்டை

ஆக, இந்தப் புலமைக் காய்ச்சல் அறிவுலகம் எங்கணும் கலந்து தன் ஆட்சி செலுத்துவதைக் காணலாம். மற்றக் காய்ச்சல்கள் நகரம், நாட்டுப்புறம் என்று வேறுபாடு செய்யாதது போலவே, புலமைக் காய்ச்சலும் அந்த வேறுபாடு கொண்டாடுவதில்லை. நகர்ப்புறக் காய்ச்சல் கொஞ்சம் அமைதியாக, நாசுக்காக இருக்கும். நாட்டுப்புறக் காய்ச்சல் அப்படி இருக்க முடியாது. ஆனாலும், காய்ச்சல் காய்ச்சல்தான்.

✤

## தியாகம்

தியாகமும், ஒழுங்கும், சுயகட்டுப்பாடும் இல்லாமல் விமோசனமோ, நம்பிக்கையோ ஏற்படாது. ஒழுங்கு இல்லாத, வெறும் தியாகத்தினால் மட்டும் யாதொரு பயனும் உண்டாகாது.

—மகாத்மா காந்தி

## எதிர்ப்பும் அன்பும்

என்னுடைய லட்சியம் உலகத்துடன் நட்புக் கொள்ளுவதே. தவறானவற்றை எதிர்க்கக்கூடிய மிகப் பெரிய எதிர்ப்புடன், மிகப் பெரிய அன்பையும் கலப்பதற்கு என்னால் முடியும்.

—மகாத்மா காந்தி

*1934-ல் தமிழ்நாட்டுக்கு வந்து காந்திஜி சுற்றுப் பிரயாணம் செய்யும்போது ஆங்காங்கே நடைபெற்ற சில நிகழ்ச்சிகளை இங்கே காண்கிறோம். சில மிகவும் ருசிகரமாக இருக்கின்றன. காந்திஜிக்கும் தமிழ் நாட்டுக்கும் இருந்த தொடர்பை நினைத்துப் பார்ப்பது மிக்க சந்தோஷமாக இருக்கிறது. இக்கட்டுரை, பெரும்பாலும் எஸ். மகாதேவன் எழுதிய அருமையான நூல் ஒன்றை அஸ்திவாரமாகக் கொண்டது.*

# தமிழ் நாட்டில் மகாத்மா

○

*"சரித்திராசிரியன்"*

**1932-ம்** வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதி மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டார். பிறகு ஆகஸ்டு 4-ம் தேதி காந்திஜியை விடுதலை செய்து, ஏரவாடா கிராமத்தை விட்டுப்போய் புனாவில் வசிக்கவேண்டும் என்று காந்திஜிக்கு உத்தரவு பிறப்பித்தனர். இந்த உத்தரவை மகாத்மா மீறவே, மறுபடியும் விடுதலை செய்த அரை மணி நேரத்துக்குள் கைது செய்து, ஒரு வருஷச் சிறைத் தண்டனை விதித்தனர். சிறையில் ஹரிஜன முன்னேற்றப் பணியைச் செய்து வர மகாத்மாவுக்கு வசதிகள் செய்து கொடுக்கவில்லை. இதை எதிர்த்து ஆகஸ்டு 16-ம் தேதி உண்ணாவிரதம் ஆரம்பித்தார். நிலைமை மோசமாகிவிடவே, நிபந்தனையின்றி ஆகஸ்டு 23-ம் தேதியில் காந்திஜியை விடுதலை செய்தனர். அதே வருஷத்தில் நவம்பர் 7-ம் தேதி முதல் ஹரிஜன முன்னேற்றத்துக்காக தேசமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டார் மகாத்மா. மத்திய மாகாணத்தில் வார்தா சத்தியாக்கிரக ஆஸ்ரமத்திலிருந்து பிரயாணம் தொடங்கியது. அம்மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, ஆந்திர தேசம், கேரளா முதலிய மாகாணங்களுக்கும் வந்தார். பிறகு கேரளாவிலிருந்து, அதாவது திருவாங்கூரிலிருந்து தமிழகத்துக்குள் பிரவேசித்து தமிழ் நாட்டில் பிரயாணம் செய்யத் தொடங்கினார்.

## நாகர்கோவில்

இவ்வூரில் சுமார் 20,000 பேர் அடங்கியகூட்டம் காந்திஜியைத் தரிசிக்கக் காத்திருந்தது. அக்கூட்டத்தில் ஆறில் ஒரு பகுதியினர் பெண்கள். கூட்டத்தின் நெருக்கடி காரணமாக, மிகவும் சிரமப்பட்டுத்தான் மகாத்மா பிரசங்க மேடைக்கு வர முடிந்தது. மகாத்மாவுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கக்கூடாது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருந்ததும் கூட, நாகர்கோவில்

முனிசிபல் கவுன்சிலர்களும், தலைவரும் நகரவாசிகளின் சார்பாக வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர்.

பிறகு மகாத்மா கன்னியா குமரிக்குப்போய், குமரி கட்டத்தில் நீராடினர். அருணசலப் பண்டாரம் சத்திரத்தில் மகாத்மாவுக்கு ஜாகைவசதி செய்யப்பட்டிருந்தது. மாலையில் கடற்கரையில் மகாத்மா உலாவி வந்தார்.

## நாங்குநேரி

திருநெல்வேலிச் சீமையின் தென் பகுதியில் உள்ளது நாங்குநேரித் தாலுகா. நாங்குநேரி ஊருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தினர் மகாத்மாவைக்காண சாலையில் வந்து கூடியிருந்தார்கள். அப்போது அவர்களிடம், "மகாத்மா அப்போதே இந்த ஊரைக் கடந்து போய்விட்டார்" என்று சொன்ன பொழுது ஒரு வாலிபனல் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "முந்திய காரில் மகாத்மாதான் போனர் என்று தெரிந்திருந்தால், நான் அந்தக் காரின் டயரைக் கிழித்திருப்பேன். எல்லோரும் ஆவல் தீர, மகாத்மாவைப் பார்த்திருப்போமே!" என்று அங்கலாய்த்தான்.

## திருநெல்வேலி

இந்நகரில் 50 அடி நீளமும் 25 அடி அகலமும் உள்ள ஒரு ஹால்தான் மகாத்மாவின் ஜாகை. அங்கே ஆணும் பெண்ணுமாக ஏராளமாகக் கூடியிருந்தனர். அங்கே ஹரிஜன ஊழியர்களுடன் மகாத்மா பேசிக்கொண்டிருந்தார். பற்பல இடங்களுக்கும் போய் விட்டு வந்தார். ஹரிஜன் நிதிக்காக பணமும், நகைகளும் திரட்டிக் கொண்டிருந்தார். அப்போது பல தடவைகளிலும் மகாத்மா பேசும்போது தமிழ்ப் பதங்களை உபயோகித்துக் கொண்டிருந்தார்.

பேட்டையில் அழகான 'கவான்' வளைவுகள் அமைத்து அவற்றில் "அருந்தவப் பெரியோய் வருக! வருக!" என்று எழுதி மகாத்மாவைப் பொது ஜனங்கள் வரவேற்றார்கள். பொதுக் கூட்டத்தில் சுமார் பதினயிரம்பேர் கூடியிருந்தார்கள். அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்ததால் காந்திஜி குடை நிழலில் பிரசங்கத்தை நிகழ்த்தினர்.

## தென்காசி

தென்காசிக் கூட்டத்தில் ஆண்களை விடப் பெண்களின் கூட்டம் தான் அதிகம். மகாத்மாவுக்கு வரவேற்புப் பத்திரங்கள், புத்தகங்கள், விவேகானந்தர் மகாத்மா முதலியோரின் போட்டோக்கள், வெள்ளித்தட்டு, வெள்ளியினல் செய்யப்பட்ட கிளி முதலிய பல வஸ்துக்களையும் பொது மக்கள் பரிசளித்தார்கள்.

## தூத்துக்குடி

இவ்வூரில் கூட்டம் மிகவும் நன்ருக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுமார் 30,000 பேர் கடற்கரையில் கூடியிருந்தார்கள். இரவு 7 மணி; இரவைப் பகல் செய்தன ஜோதி மயமான மின்சார விளக்குகள். வாடைக் காற்றின் காரணமாக மகாத்மா உடம்பை எல்லாம் போர்த்திக் கொண்டிருந்தார். மகாத்மா பேசினர். 'டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் மொழி பெயர்த்தார்.

முனிசிபல் சபையார் வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரத்தை மகாத்மா ஏலம் போட்டார். ஒரு ஹிந்து, ஒரு முஸ்லிம், ஒரு கிறிஸ்தவர் மூவரும் போட்டி போட்டு ஏலத் தொகையை உயர்த்தினார்கள். கடைசியில் எட்டு ரூபாய்க்கு ஏலம் போயிற்று. முஸ்லிம் வெற்றி பெற்றார். இரும்பு வியாபாரிகள் வாசித்தளித்த பத்திரத்தை பன்னிரண்டு ரூபாய்க்கு ஒரு ஹிந்து ஏலம் எடுத்து வாங்கிவிட்டார். ஹரிஜன சேவாசங்கப் பத்திரம் கிறிஸ்தவருக்குக் கிடைத்தது.

தூத்துக்குடியில் மகாத்மாவுக்குக் கொடுத்த பரிசுப் பொருள்களில் திருவோடும் ஒன்று!

**மதுரை**

மதுரையில் சேரிகளைப் பார்வையிட்டார் காந்திஜி. அவை அசுத்தமாக இருந்தன. இதைப்பற்றி, முனிசிபல் சபையார் வரவேற்பின் போது மகாத்மா புகார் செய்தார். சேதுபதி உயர் நிலைப் பாடசாலையில் காந்திஜிக்கு வெள்ளியினால் செய்த ஒரு குங்குமச் சிமிழை ஒரு மாணவி கொடுத்தாள். அதிலுள்ள குங்குமத்தை எடுத்து எல்லாக் குழந்தைகளின் நெற்றியிலும் இட்டுப் புன்னகை செய்தார் காந்திஜி. மதுரையில் பெண்கள் கூட்டத்துக்கு மகாத்மா போகும் போது சில பெண்கள் அவருடைய பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தனர்; சிலர் 'பகவானே!' என்று சொல்லி கன்னத்தில் தட்டிக் கொண்டார்கள். கூட்டத்தில் 5000 பெண்கள் கூடியிருந்தனர். ஆகவே சத்தமும் அதிகமாக இருந்தது. அதனால் 'சத்தம்! சத்தம்!' என்று சொல்லியும் பயன்படாமல் போயிற்று. ஏராளமான நகைகளை ஹரிஜன நிதிக்காக மகாத்மா இங்கே நன்கொடையாக வாங்கினார். அவற்றில் சுமார் 20 பவுனுக்குச் செய்யப்பட்ட வைரமாலையும் ஒன்று. ஹிந்திப் பட்டமளிப்பு விழாவில் 12 வயது நிரம்பிய ஒரு பெண்ணுக்கு மகாத்மா தம் கையால் நற்சாட்சிப் பத்திரத்தை வழங்கினார். 'உனக்கு ஹிந்தி வாசிக்கத் தெரிமா?' என்று கூறி அவருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட அகராதியில் உள்ள ஒரு வார்த்தையைக் காட்டி அதை வாசிக்கும்படி மகாத்மா கூறினார். பெண் வாசிக்க முயன்றாள்; முடியவில்லை.

'ஹா! ஹா! ஹா!' என்று சிரித்தார் மகாத்மா.

தொழிலாளர் கூட்டம் ஒழுங்காக நடை பெற்றது. அங்கும் மகாத்மா பேசினார்.

**அமராவதிபுதூர்**

எல்லோரும் வந்து மகாத்மாவின் ஜாகையை முற்றுகை போட்டுவிட்டார்கள். அப்பொழுது ஒரு ரேகை சாஸ்திரி மகாத்மாவின் கையைப் பார்க்கவேண்டும் என்று பிடிவாதம் பண்ணினார். "ரூபாய் ஆயிரம் கொடுத்தால் ஒழிய என் ரேகையைப்பார்க்க முடியாது. நான் ஹரிஜன ஊழியன்; ஒவ்வொரு நிமிஷத்தையும் நான் பிரயோஜனகரமாகக் கழிக்கவேண்டும். அதனால் எனக்கு ரேகையைக் காட்ட நேரம் இல்லை" என்று கூறி மறுத்து விட்டார் மகாத்மா.

**காரைக்குடி**

போலிக்கதரை விற்பதால், அசல் கதர் நெய்வதற்காக நூல் நூற்கும் ஆயிரக்கணக்கான ஹரி

ஜனப் பெண்களுடைய பிழைப்புக்கு ஆபத்து ஏற்படும் என்றும், போலிக்கதரை யாரும் வாங்கக் கூடாது என்றும், அகில பாரத சர்க்கா சங்கக்கதரையே வாங்க வேண்டும் என்றும் இவ்வூர்க் கூட்டத்தில் மகாத்மா கூறினார்.

## தேவகோட்டை

வெள்ளியினால் செய்யப்பட்ட பல பொருள்கள் மகாத்மாவுக்கு இங்கே பரிசாகக் கொடுக்கப்பட்டன. ஒரு பெண் குழந்தையின் போட்டோவை எடுத்துக்கொண்டு வந்து மகாத்மாவிடம் கொடுத்து குழந்தைக்குப் பெயர் வைக்கும்படியாக ஒருவர் கூறினார். இந்த நாமகரணச் சடங்குக்காக ஒரு பவுன் தக்ஷிணை வைத்தார்.

"இந்தக் குழந்தையின் தகப்பனார் யார்?" என்று கேட்டார் மகாத்மா.

மேடையில் இருந்த ஒருவர் "நான்தான்" என்றார்.

"சாவித்திரி என்று பெயர் வைக்கட்டுமா?"

"மிகவும் சந்தோஷம்" என்றார் தகப்பனார்.

மகாத்மா போட்டோப் படத்தில் 'சாவித்திரி' என்று எழுதிக் கொடுத்தார். குழந்தையின் தாயார் வந்து ஒரு வெள்ளித் தட்டையும், ஒரு பவுனையும் மகாத்மாவுக்குக் கொடுத்தார். பிறகு, ஒரு கைக்குட்டையை ஏலம் போட்டு 25 ரூபாய் வாங்கிக் கொண்டார் மகாத்மா. அதன்பின் ராம் நகருக்குப் போய் அங்கே அளித்த வரவேற்புப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார்.

தேவகோட்டையில் ஹரிஜனங்களுக்கும் நாட்டார்களுக்கும் இடையே இருந்த தகராறைத் தீர்த்துவைக்க மகாத்மா முயன்றார். நாட்டார்களின் பிடிவாதத்தால் மகாத்மாவின் முயற்சி வெற்றி பெறவில்லை.

## திருப்பத்தூர்

திருப்பத்தூர் கூட்டத்தின் மேடையில் ஐந்து ஐரோப்பியர்களும் அமர்ந்திருந்தனர். அங்கே வெள்ளித் தகடு பதித்த ஒரு பல்கையில் மகாத்மாவின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அதை ஏலத்தில் எடுக்க வேண்டும் என்றால் 20 ரூபாயிலிருந்து ஏலம் கேட்கத் தொடங்க வேண்டும் என்றார். ஒருவரும் அந்தத்தொகையைக் கூறவில்லை. பிறகு பாகனேரியில் நூறு ரூபாய்க்கு அது ஏலம் போயிற்று.

## நீலகிரி

கூனூரின் சீதோஷ்ணநிலை மகாத்மாவுக்கு மிகவும்பிடித்திருந்தது. அங்கிருந்துகடிதங்களும் 'ஹரிஜன்' கட்டுரைகளும் எழுதினார்மகாத்மா. 'மவுண்ட் ப்ளஸண்ட்'டில் உள்ள 'ராமாஸ்ரமம்' என்னும் தேசோத்தாரக கே. நாகேஸ்வர ராவ் பந்துலுவின் பங்களாவில்தான் மகாத்மாவுக்கு ஜாகை. அங்கு மகாத்மாவைப் பார்க்க வந்தவர்களுள் ஐரோப்பியர்களும், கிறிஸ்தவ பாதிமார்களும் சிலர். ஹங்கேரி நாட்டு பெண்மணி ஸ்ரீமதி ஸாஸ் ப்ரன்னர் என்பவரும் அவருடைய குமாரத்தியும் மகாத்மாவைப்பார்த்துப் படம் எழுத வந்தனர்.

கோட்டகிரிக்கு அருகே உள்ள மக்களிடம் மகாத்மாவைப் பார்க்கப் போகக்கூடாது என்று சிலர் பிரசாரம் செய்தனர். மகாத்மாவைப் பார்க்கப் போனால் தண்டிக்கப் படுவார்கள்' என்றுகாந்தி-எதிர்ப்பாளர்கள்

ஊர் ஊராகப் போய்ச் சொன்னார்கள் காங்கிரஸ் தொண்டர்களோ, "வாழ்க்கையிலேயே காந்திஜியைக் காணும் இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட வேண்டாம்" என்று பிரசாரம் செய்தனர். கடைசியில் காந்திஜியைக் காணவந்தது பெருங் கூட்டம். கூட்டத்தில் ஐரோப்பியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் கலந்திருந்தனர். படகர்களும் வந்திருந்தனர். குடிப் பழக்கத்தை விட்டு விடும்படி காந்திஜி பிரசங்கத்தில் கூறினார். அப்போது ஐரோப்பிய கனவான் ஒருவர் ஐந்து ரூபாய் கொடுத்து காந்திஜியின் கையெழுத்தை வாங்கிக்கொண்டார்.

'மவுண்ட் பிளஸண்ட்'டில் உள்ள சேரியைக் காந்திஜி பார்வையிட்டு அங்குள்ள காளிகோயிலுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு, 'காளி தேவதைக்கு எருமையைப் பலியிடாதீர்கள்' என்று ஹரிஜனங்களுக்குப் போதித்தார். கூனூர் நகரிலும் ஒரு சேரியைச் சுற்றிப் பார்த்தார். அங்கு கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து காந்திஜி கூறியதாவது.

"நான் வேண்டுமென்று தோட்டி ஆனவன். என் வாழ்க்கையில் நூற்றுக் கணக்கான கட்டடங்களைப் பரிசுத்தப்படுத்தியிருக்கிறேன். என் ஆஸ்ரமத்தில் எல்லோரும் தமக்குத்தாமே தோட்டி வேலை பார்த்துக்கொள்ளுகிறார்கள். தோட்டி வேலை கௌரவமான தொழில்களில் ஒன்று என நான் கூறுகிறேன்."

கூனூர்க் கூட்டம் கோட்டகிரிக் கூட்டத்தைவிடச் சிறியதே. உதகமண்டலத்தில் டிப்போ மைதானத்தில் பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. சுமார் 9000 பேர் அடங்கிய கூட்டம் அது. ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் இருந்தனர். சிலர் மகாத்மாவைத் தெளிவாகப் பார்க்கவேண்டும் என்று தூரதிருஷ்டிக்கண்ணாடி கொண்டு பார்த்தனர். உதக மண்டலத்தில் கோடப்பமண்டலம் என்ற இடத்தில் ஒரு பையன் காந்திஜிக்கு காந்திஜியின் போட்டோ ஒன்றைக் கொடுத்தான். காந்திஜி, 'இந்தப் படத்தை விற்க எனக்கு இப்போது நேரம் இல்லை' என்று சொல்லவும் பையன் ஒரு நிமிஷம் திகைத்தான். உடனே காந்திஜிக்குத் தன் பையிலிருந்து ஒரு அணாவை எடுத்துக் கொடுத்தான். 'சபாஷ்' என்று சொல்லி காந்திஜி அதை வாங்கிக் கொண்டார்.

## கோயமுத்தூர்

இவ்வூரில் கூடிய கூட்டமும் பெருங் கூட்டம்; ஹரிஜன நிதிக்குக் கொடுத்த தொகையும் பெருந் தொகை. அதாவது மொத்தம் 45,000 பேர். (அவர்களில் 12,000 பேர் பெண்கள்) கொடுத்ததொகை ரூ. 25,000. கூட்டத்தில் பெண்களிடம் ஆபரணங்களாக நிதி வசூல் செய்தார் மகாத்மா. ஹரிஜன போஜன விடுதியையும் காந்திஜி பார்வையிட்டார். அங்கு பரிமாறப்படும் சாப்பாட்டைப் பற்றியும், செலவுகளைப் பற்றியும் விசாரித்துவிட்டு, "விடுதியில் பால் கொடுக்கப்படுவதில்லையா!" என்று வியந்தார்.

பீளமேடு தொழில் ஸ்தாபனத்தில் காந்திஜிக்கு ஸ்தாபனச் சொந்தக்காரர் ரூ 500 கொடுத்தார். பிறகு காந்திஜியின் கையெழுத்

தைக் கேட்டார். "இந்த ரூ 500 கையெழுத்துக்காக அல்ல; கையெழுத்துக்குத் தனியாக ரூ 5 வந்துவிட வேண்டும்" என்று சிரித்துக்கொண்டே மகாத்மா கூறினார். பிறகு கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கும்போது, ஒருவர் சலனப் படக் காமிராவினால் மகாத்மாவைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்ததும் மகாத்மா "படம் பிடிப்பதற்கும் நீங்கள் பணம் கொடுக்க வேண்டும்" என்றார். பக்கத்தில் இருந்த ஒருவர் "அவர் நெடுகிலும் உங்களைப் படம் பிடித்துக் கொண்டே இருக்கிறார்" என்று ஆங்கிலத்தில் கூறினார். ஆங்கிலத்தில் படம் பிடிப்பதை "ஷூட்டிங்" (Shooting) என்று சொல்லுவார்கள். "ஷூட்டிங்" என்ற பதத்துக்கு "சுடுவது" என்ற பொருளும் உண்டு. இந்த சிலேடை நயத்தைப் பயன் படுத்தினார் காந்திஜி. எப்படி?

"அவர் நெடுகிலும் உங்களை 'ஷூட்' பண்ணிக் கொண்டே வருகிறார்."

"அப்படியிருந்தும் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன்."

மேற்கண்டவாறு கூறிவிட்டு மகாத்மா சிரித்தார்.

தொழில் நிலையத்தில் இருக்கும் போது ஒரு கிழவி வந்து நின்றாள். "நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்?" என்று கேட்டுக் கிழவியின் முதுகில் தட்டினார் காந்திஜி. கிழவியோ மகாத்மாவின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிக்க குனிந்தாள். பிறகு காந்திஜியின் கன்னங்களை விரல்களால் தொட்டு விட்டுக் கிழவி சந்தோஷ மிகுதியால் சிரித்தாள்.

கோயமுத்தூரில் ஒரு நாடகக் கொட்டகைக்குக் மகாத்மா விஜயம் செய்தார். நடிகர்களாக இருந்த மூன்று சிறுவர்கள் 'வைஷ்ண ஜனதோ' கீதத்தைப் பாடினார்கள். பாடி முடிந்ததும், கோமாளி வேஷம் போட்டிருக்கும் ஒரு சிறு பையன் வந்து "மகாத்மாவே! நான் எப்பொழுதும் உங்களை என் மனதில் வைத்திருக்கிறேன்" என்று கூறித் தன் மார்பைத் தொட்டுக் காட்டினான்.

### உடுமலைப் பேட்டை

உடுமலைப் பேட்டையில் முஸ்லிம் ஒருவர் தம் குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து காந்திஜிக்கு பரிசு ஒன்றைக் கொடுத்தார். குழந்தையின் பெயர் 'காந்தி சாஹிப்' என்றும் கூறினார். மற்றொருவர் தம் குழந்தையைக் கொண்டு வந்து அதற்குப் பெயர் வைக்கும்படி மகாத்மாவிடம் கூறினார்.

"இந்தக் குழந்தை என்ன, பெண்ணா?" என்று கேட்டார் மகாத்மா.

"இல்லை; ஆண் குழந்தை."

"அப்படியானால் 'ராமன்' என்று பெயர் வைக்கலாம் அல்லவா?"

"மிகவும் சந்தோஷம்."

"சரி, 'ராமன்' என்றே பெயரிடுகிறேன்."

குழந்தையை எடுத்துக்கொண்டு திரும்பிய தகப்பனாரிடம், கூட்டத்தில் உள்ள அவருடைய நண்பர்கள் "மகாத்மா என்ன பெய

ரிட்டார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் சொன்ன பதில் இதுதான்:

"காந்தி ராமன்"

**திண்டுக்கல்**

திண்டுக்கல் பிராந்தியத்தில் மிகவும் தூரப் பிரதேசங்களுக்கெல்லாம் மகாத்மா பிரயாணம் செய்தார். மகாத்மாவை வரவேற்பதில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய எல்லோரும் பெருமையோடு கலந்து கொண்டார்கள். கம்பம் என்ற ஊரில் மகாத்மா ஒரு முஸ்லிம் வீட்டில் விருந்தினராகத் தங்கினார். கோம்பை என்னும் ஊரில் மகாத்மாவுக்கு முஸ்லிம்கள் பணமுடிப்பு வழங்கினர். உத்தமபாளையத்தில் இந்து ஹரிஜனங்களும், கிறிஸ்தவ ஹரிஜனங்களும் மகாத்மாவுக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். இது சம்பந்தமாகக் கம்பம் பொதுக் கூட்டத்தில் மகாத்மா கூறியவை பின் வருமாறு:

"'இந்து ஹரிஜனங்கள்' என்ற வார்த்தை இந்துக்களுக்கு அவமானத்தை உண்டாக்குகிறது. ஆனால் 'கிறிஸ்தவ ஹரிஜனங்கள்' என்ற பதப் பிரயோகமும் இருந்து வருவது ஏனோ? இந்துப் பண்டிதர்கள் சிலர் தீண்டாமையை மத அடிப்படையில் ஆதரிப்பதாக நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் கிறிஸ்தவ அறிஞர் எவரும் இவ்வண்ணம் ஆதரித்ததை நான் பார்த்ததில்லை. இப்போது தீண்டாமை என்ற விஷம் கிறிஸ்தவர்களிடையிலும் பரவி யிருக்கிறது என்று தெரிகிறது. கிறிஸ்தவர்களிடையில் உள்ள தீண்டாமையை ஒழிக்க நான் பாடுபட முன் வந்தால் அது என் வரையறையை மீறுவதாகும். அதனால் கிறிஸ்தவர்கள் தம்மிடையே இருந்து தீண்டாமையை ஒழித்து விடவேண்டும் என்பதை உணர்வார்களாக!"

திண்டுக்கல் பொதுக்கூட்டத்தில் 5000 பெண்கள் உட்பட 17,000 பேர் கூடி யிருந்தனர். மகாத்மா ஏலம் போட்ட ஒரு படத்தை ஸ்ரீமதி மூரியல் லெஸ்டர் இரண்டு ரூபாய்க்கு வாங்கிக்கொண்டார். மகாத்மா அவரைப் பார்த்து, "நீங்கள் பணக்காரர் என்று இப்போது தெரிகிறது" என்றார். மண்ணச்சநல்லூர் கூட்டத்தில் ஸ்ரீமதி லெஸ்டரும், ஸ்ரீமதி ஹாக்கும் கூட்டத்தில் நிதிவசூல் செய்தனர்.

**போடிநாயக்கனூர்**

போடிநாயக்கனூரில் அப்போது பிளேக் நோய் பரவி யிருந்ததால், அவ்வூரிலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ள போடவெடக்கா என்னும் இடத்தில் கூட்டம் நடந்தது. மத்தியானம் மூன்று மணி. தாகசாந்திக்காகக் கரும்பைக் கொண்டு வந்து தின்று கொண்டிருந்தார்கள் ஜனங்கள். மகாத்மா பேசினார்.

**சோளவந்தான்**

சோளவந்தான் கூட்டத்தில், வரவேற்புப் பத்திரங்கள் கொடுப்பதிலும், பூமாலைகள் போடுவதிலும் பணம் விரயமாகிறது என்றும், அந்தப் பணத்தை நசுக்கப்பட்டவர்களுக்குச் செலவிட வேண்டும் என்றும் கூறி, தமக்குப் போட்ட பூமாலைகளை எல்லாம் காசாக மாற்றி விட்டார் மகாத்மா.

**பவானி**

இவ்வூர் பொதுக் கூட்டத்தில் சிங்கத்தைப் போல அழகாகத் தையல் வேலை செய்யப்பட்ட துணி ஒன்றை ஏலம்போட்டார் மகாத்மா.

"புலியை ஏலத்தில் எடுங்கள்" என்றார் மகாத்மா.

"புலி அல்ல அது; சிங்கம்" என்றார் பக்கத்தில் நின்ற ஒருவர்.

"புலியும் சிங்கமும் ஒன்றுதான்; இரண்டும் ஒரே உறவு" என்றார் மகாத்மா.

"ஐந்து ரூபாய்."

"ஐந்து ரூபாய்தானா? இது ஆபத்தில்லாத புலியாச்சே!" என்றார் மகாத்மா.

அப்போது ஒரு ஹரிஜனப் பெண் மகாத்மாவுக்கு மாலை சூட்ட வந்தாள். மகாத்மா அதைக்கைநீட்டி வாங்கிக்கொள்ள முயன்றார். ஆனால் அந்தப் பெண் தான்தான் மகாத்மா கழுத்தில் சூட்ட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். மகாத்மாவோ, "நீ பிடிவாதம் பண்ணினால் நானும் பண்ணுவேன்" என்று கூறி தம் பக்கத்தில் கிடந்த மாலையை எடுத்து அந்தப் பெண்ணின் கழுத்தில் சூட்டினார்.

ஒரு ஆசாமி மகாத்மாவுக்கு சிகரெட்டுகளைப் பரிசாகக் கொடுக்க வந்தார். "சிகரெட்டுகள், விஸ்கி ஆகியவை கூடாது" என்றார் ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியார்.

ஆசாமி உட்கார்ந்து விட்டார்.

**திருச்செங்கோடு, புதுப்பாளையம்**

திருச்சி, கரூர் முதலிய ஊர்களின் வழியாகத் திருச்செங்கோடு வந்து, காந்தி ஆஸ்ரமத்தில் மகாத்மா பேசினார். புதுப்பாளையம் ஆஸ்ரமம் எவ்விதம் சேவை செய்கிறது என்பதைப் பார்க்கவே தாம் வந்ததாகவும், ஹரிஜனங்கள் முன்னுக்கு வந்துவிட்டால், தற்போது அவர்கள் செய்யும் பணியைச் செய்ய மாட்டார்கள் என்று சிலர் கருதுவதாகவும், அப்படிக் கருதுவது தவறு என்றும் மகாத்மா கூறினார்.

**சீர்காழி**

சீர்காழி, கும்பகோணம், வாணியம்பாடி ஆகிய இடங்களில் மகாத்மாவின் வருகையை எதிர்த்துக் கருப்புக் கொடி பிடித்தார்கள்.

மத விரோதமான சுலோகங்களையும் கோஷித்தார்கள். திருச்சியிலும் சநாதனிகள் மகாத்மாவுக்கு எதிர்ப்புக் காட்டினர்.

சீர்காழியில், பரங்கிப் பேட்டை தேசிய கிறிஸ்தவப் பெண்பாடசாலைத் தலைவியாகிய ஸ்ரீமதி அன்னி மேரி பீட்டர்ஸன் தம் மாணவிகளுடன் வந்து மகாத்மாவைப் பார்த்தார். ஸ்ரீமதி பீட்டர்ஸன் இந்திய முறையில் உடையணிந்திருந்தார். குழந்தைகள் மகாத்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு விளையாடின. மகாத்மா இரண்டு குழந்தைகளைப் பிடித்து, அவர்களின் தலைகளை ஒன்றை ஒன்று முட்ட வைப்பது போல பாவனை செய்து, "இப்படித்தான் சண்டை செய்வது" என்று கூறிச் சிரித்தார். குழந்தைகளைத் தழுவிக் கொண்டார். குழந்தைகள் மகாத்மாவைத் தாத்தா என்று சொல்லிக் கொண்டே மகாத்மா கொடுத்த ஆரஞ்சுப் பழங்களை வாங்கிச் சாப்பிட்டன.

மற்றொரு ஸ்திரீ மகாத்மாவை வந்து வணங்கினாள். "உங்களைச்

சந்தித்ததில் எனக்குப் பெரு மகிழ்ச்சி'' என்றாள். பக்கத்தில் நின்ற ஒரு ஐரோப்பியக் குழந்தை தன் பக்கத்தில் நின்ற மற்றொரு சிறுமியைச் சுட்டி காட்டி, "அவளிடம்நிறையநகைகள் இருக்கின்றன'' என்று காந்திஜியிடம் கூறினாள்.

"ஓ, அப்படியானால் அவள் அவற்றைக் கொடுக்க வேண்டும்'' என்றார் மகாத்மா.

**வேலூர்**

இவ்வூர் ஹரிஜனப் பாடசாலையில் ஒரு பையனைச் சுட்டிக் காட்டி, "இந்தப் பள்ளிக்கூடத்திலேயே இவன்தான் நன்கு உடைதரித்த பையன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

அவன் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவன் அல்ல என்றும் அவன் ஹரிஜனப் பையன் அல்லவென்றும் காந்திஜியிடம் கூறினார்கள்.

நன்கு உடைதரித்த அந்தப் பையன் யாதொரு உடையும் இல்லாமல்நிர்வாணமாகஇருந்தான்!

முனிசிபாலிடியினரும், வட ஆற்காடு ஜில்லா போர்டாரும் மகாத்மாவுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனர். பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

மற்றும், தஞ்சாவூர், கொரடாச்சேரி, நாகபட்டினம், பழனி, புதுச்சேரி, ஈரோடு முதலிய ஊர்களுக்கும் போனார். பழனியில் கோவில் யானைகள் காந்திஜியை மரியாதை செய்து வரவேற்றன.

**சென்னை**

சென்னையில் ஹரிஜனங்கள் வாழும் பகுதிகளைப் பார்வையிட்டார். அருந்ததிபுரத்தில் ஹரிஜனச் சிறுவர்களும் சிறுமிகளும் "வைஷ்ணவ ஜனதோ'' என்னும் பாடலைப் பாடினார்கள். தேனும் பேட்டை பாரத சபாவும் காந்திஜியை வரவேற்றது.

சிறுமிகளைப் பாடும்படி சொன்னார் காந்திஜி. பாடினார்கள். சிறிது நேரத்தில் போதும்போதும் என்று தமிழிலே சொன்னார் மகாத்மா.

மயிலாப்பூரில் ராமகிருஷ்ண மடத்தின் சேவைகளைப் பாராட்டினார். திருவட்டி அம்மன் கோவிலைப் பிரகாரம் சுற்றி வணங்கினார். மாண்டிசோரி பாடசாலைக்கு விஜயம் செய்தார். அடையாறு பிரம்மஞான சங்கத்துக்குச் சென்றார். பெயர் கூறாத ஒருவர் ஹரிஜனக் குழந்தைகளுக்குப் பக்ஷணம் வழங்குவதற்காகக் காந்திஜியிடம் இருபது ரூபாய் கொடுத்தார்.

திருவல்லிக்கேணியில் லக்ஷம் பேர்கொண்ட ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் அமைதி யின்மையினாலும், பயிற்சி பெற்ற தொண்டர் படை இல்லாததினாலும் கூட்டம் வெற்றிகரமாக நடைபெறவில்லை. இது வருந்தத்தக்க விஷயம்.

சென்னையில் உள்ள கோகலே மண்டபத்துக்கும் காந்திஜி போய்வந்தார். பார்வையாளர்களின் குறிப்புப் புத்தகத்தில், மண்டபம் ஒரு "மகத்தான உதாரணமாக'' இலங்குகிறது என்று ஸ்ரீ ஏ. வி. தக்கர் எழுதிய குறிப்பை காந்திஜிக்கு வாசித்துக் காண்பித்தனர்.

தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துவிட்டு, மைசூரை நோக்கிப் பயணமானார் மகாத்மா காந்தி.....

# நாடுகளின்-ஐசுவரியம் நெ. 4. ரோம்

மக்களின் பிரதிநிதிகள் கூடி சட்டங்கள் செய்யும் ரோமன் தலைநகரங்களும், மல்யுத்தங்கள் நடக்கும் "ரோமன் கொலேஸியம்" எனப்படும் அரங்குகளும், ரோமாபுரிக்கடவுள்களை வைத்து வழிபடும் பெரிய தேவாலயங்களும், ரோமாபுரி வீரர்கள் வெற்றி முழக்கத்துடன் பவனிவரும் அகன்ற வீதிகளும், பாலங்களும் பல வருஷ பேருழைப்பினால் நிர்மாணிக்கப்பட்டவை. நாட்டின் மேன்மைக்காக மக்களின் செல்வம் உபயோகிக்கப் பட்டதால்தான் ரோமாபுரி அவ்வளவு சீரும் சிறப்புமாக விளங்கிற்று.

இன்று இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு நீங்களும் உதவி புரியலாம். இந்தியாவை செல்வமும் மாண்பும் மிக்க மாபெரும் நாடாக ஆக்க செல்வத்திற் சிறந்த சில சீமான்களின் பணம் மட்டும் போதாது. ஏழை எளிய எல்லா மக்களின் சிறு சேமிப்புகளும் தேவை. உங்களால் முடிந்த அளவு சேமித்த பணத்தை பலவித சர்க்கார் பத்திரங்களில் சிறந்த வழியில் முதலிடுவதின் மூலம் நாட்டின் முன்னேற்ற திட்டங்களுக்குத் தேவையான மூலதனத்தைச் சேகரிக்க உதவுங்கள். <u>நாடுகளின் ஐசுவரியம் அவற்றின் மக்கள் தங்களுடைய சேமிப்புகளை சிறந்த வழியில் முதலிடுவதின் மூலம்தான் பெருகுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.</u> உங்களுடைய சேமிப்புகள் உங்களுக்கும் உதவும். இன்றைய விலைவாசிகள் உங்கள் பணத்துக்குத் தக்க மதிப்பை அளிக்காது.

ஊதாரிச் செலவு பணவீக்கத்தை அதிகரிக்கும். ஆனால் நீங்கள் சேமித்து அப்பணத்தை சிறந்த வழியில் முதலிட்டால் நல்ல வட்டி பெறுவது மட்டுமல்ல. உங்களுடைய பணத்தின் மதிப்பும் உயரும் வருங்காலத்தில் உங்கள் மூலதனமும் பத்திரமாக காப்பாற்றப்படும்.

**விவேகத்துடன் முதலிட்டு உங்கள் சேமிப்பைச் சேர்த்து வையுங்கள்.**

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யுங்கள். உரிய காலத்தில் முறையே 3%, 3 1/2%, 4 1/6% வட்டி தரக்கூடிய ஐந்து, ஏழு, பன்னிரண்டு வருஷ செலாவணியுள்ள ஸர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கும்.

மற்ற சர்க்கார் பத்திரங்கள், தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கி டிபாஸிட்கள், இன்ஷுரன்ஸ், கோவாபரேடிவ் ஸொஸைடி முதலியவைகளில் முதலிடுங்கள்.

## நாளைக்காக இன்றே சேமியுங்கள்

## உங்கள் சேமிப்பை பெருக்கும் சிறந்த முறையில் முதலிடுங்கள்

இந்திய சர்க்காரின் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.

AC 616TM

# சக்தி

## மாதப் பத்திரிகை

○

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி 'தபால்' | 0 | 8 |
| ஆறு மாதம் | 3 | 8 |
| ஒரு வருஷம் | 6 | 0 |
| 2 வருஷம் | 11 | 0 |

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

### பர்மா

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | 0 | 9 |
| ஆறு மாதம் | 4 | 0 |
| ஒரு வருஷம் | 7 | 0 |
| 2 வருஷம் | 13 | 0 |

### மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | 0 | 10 |
| ஒரு வருஷம் | 8 | 0 |
| ஆறு மாதம் | 4 | 8 |
| 2 வருஷம் | 15 | 0 |

## சக்தி காரியாலயம்
### சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்

*A good habit*

உங்களுடைய ஆரோக்கியத்திற்கு உதவியாக உள்ள நல்ல பழக்கங்களை விருத்தி செய்யுங்கள். பற்களையும் ஈறையும் நன்கு காப்பாற்ற முயற்சிப்பது நல்ல பழக்கம். இதற்கு ஓர் நல்ல பற்பசை தேடிக்கொள்வது அவசிம். **நீம் டூத் பேஸ்ட்** ஓர் உயர்ந்த பற்பசை. வேம்பின் சத்தும், மற்றும் உயர்ந்த மூலிகைகளும் கொண்டு தயாரிக்கப்பட்டது.

**Neem**
**TOOTH-PASTE**

**CALCUTTA CHEMICAL**
**CALCUTTA**

*"பொருளாதார அமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும்?" என்பதற்கு காந்திஜி சொன்ன அபிப்பிராயங்களைக் கொண்டு, இன்றைய நிலையை ஆராய்கிறார் ஆசிரியர்.*

# காந்திஜி காட்டிய வழி

**ஆர். ராமநாதன்**

ஜனவரி முப்பது இந்தியாவின் சரித்திரத்தைக் கறைப்படுத்தும் நாள். இந்தியாவில் பிறந்த மகா புருஷர் மறைந்த நாள் இது. ஜனவரி முப்பதாம் தேதி இந்தியர்கள் காந்திஜிக்கு வணக்கம் செலுத்தினர்.

ஆனால், அன்று காந்திஜியின் உபதேசங்களை ஜனங்களுக்கு ஞாபகமூட்ட முயற்சி செய்யப்பட்டதா என்பது விவாதத்திற்கு இடம் அளிக்கும் விஷயம். மதத்தைப் பற்றி காந்திஜி சொன்னவைகளை மக்களுக்கு ஞாபகமூட்ட முயற்சி செய்யப்பட்டது என்பது உண்மைதான். ஆனால், அரசியலைப் பற்றி, மக்களின் வாழ்க்கையைப் பற்றி, சமூக அமைப்பைப் பற்றி காந்திஜி சொன்னவை மக்களுக்கு ஞாபக மூட்டப்பட்டதா? இந்த விஷயங்களை மூடி மறைத்தனர், காந்திஜி நினைவு நாள் கொண்டாட ஏற்பாடு செய்தவர்கள். இது தற்செயலானது என்று நாம் கருதவில்லை.

காந்திஜி பல விஷயங்களைப் பற்றிப் பேசினார், எழுதினார். அவைகளை எல்லாம் ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. பொருளாதார அமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்று காந்திஜி கருதினார் என்பதை மாத்திரம் தான் நாம் இக்கட்டுரையில் பரிசீலனை செய்யப் போகிறோம்.

உணவும், உடையும் உயிர் வாழ இன்றியமையாதவை. வேறு எது இருந்தாலும், இல்லை என்றாலும் இந்த இரண்டும் இருந்துதான் தீர வேண்டும். இந்த இரண்டையும் எல்லோருக்கும் அளிக்க மறுக்கும் சமூகம்—அது எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும்—உயிர் வாழத் தகுதி யற்றது. இந்த உண்மையை காந்திஜி தெளிவாக உணர்ந்தார். அவர் சொன்னார்:

"என்னைப் பொறுத்த வரையில் உணவுக்கும் உடைக்கும் யாரும் கஷ்டப்படாத முறையில் பொருளாதார அமைப்பு இருக்கவேண்டும்... சாதாரண வாழ்க்கைத் தேவைகளை உற்பத்தி செய்யும் உற்பத்திச் சாதனங்கள் ஜனங்கள் நிர்வாகத்தில் இருந்தால்தான் இந்த நோக்கம் சர்வ வியாபகமாக நிறைவேறும்."

உற்பத்திச் சாதனங்கள் தனி மனிதர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் வரையில் எல்லோருக்கும் உணவும் உடையும் கிடைக்காது என்பதை இங்கே காந்திஜி சுட்டிக் காட்டு

கிறார். தனி மனிதர்கள் தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகத் தங்களிடம் இருக்கும் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்வார்களே தவிர, சமூகத்தின் நன்மைக்காக உற்பத்தி செய்யமாட்டார்கள் என்பதை இங்கே காந்திஜி எடுத்துக் காட்டுகிறார். இதனால்தான் சாதாரண வாழ்க்கைத் தேவைகளை உற்பத்தி செய்யும் உற்பத்திச் சாதனங்கள் சமூகத்தின் சொத்தாக இருக்கவேண்டும் என்று காந்திஜி வலியுறுத்திக் கூறினார். பத்து வருடங்கள் தேசிய மயமாக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசமாட்டோம் என்று முதலாளிகளுக்கு உறுதி கூறும் "காந்திஜி பக்தர்கள்" இதை மறந்ததேன்?

* * *

பெரிய யந்திரங்களை காந்திஜி வெறுக்கிறார் என்று கருதுகிறவர்களுக்கு நமது நாட்டில் பஞ்சம் இல்லை. இது தவறு என்று காந்திஜி கூறுகிறார்:

"பொதுஜன நன்மைக்காக மனித உழைப்பு செய்யமுடியாத வேலைகளைச் செய்யும் பெரிய யந்திரங்களுக்கு நிச்சயமாக சமூகத்தில் ஸ்தானம் உண்டு. ஆனால், அந்த யந்திரங்கள் சர்க்கார் சொத்தாக இருக்கவேண்டும்; அவை ஜனங்கள் நன்மைக்காக மாத்திரம் உபயோகிக்கப்படவேண்டும். பலர் நன்மையைப் பலியிட்டுவிட்டு ஒரு சிலரைப் பணக்காரர்களாக்கும் யந்திரங்களை நான் விரும்பவில்லை."

இரும்புத் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் முதலிய முக்கியமான தொழில்கள் சமூகத்தின் சொத்தாக இருக்கவேண்டும் என்பதுதான் இதன் பொருள். காந்திஜியின் சீடர்கள் இதைக் கவனிப்பார்களா?

* * *

"முதலாளித்துவத்தை நான் எதிர்க்கிறேன். மூலதனம் சேமிக்கப்படுவதை விலக்கவேண்டும் என்னும் உண்மையை மேல்நாடு நமக்குக் கற்பிக்கிறது" என்றார் காந்திஜி.

மூலதனம் ஒரு சிலர் கையில் குவிவது என்றால், உற்பத்திச் சாதனங்கள் விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலருக்குச் சொந்தமாவது என்றால், முதலாளித்துவத்தின் இரும்புப்பிடி உறுதிப்படுவது என்று பொருள். முதலாளித்துவத்தின் இரும்புப் பிடி உறுதிப்பட்டால், பொருளாதார ஆளும் வர்க்கம் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தால், ஜனங்களின் கஷ்டம் அதிகரிக்கும். முதலாளித்துவத்தின் பிடி இறுகினால், வறுமை ஜனங்களை அரித்துத் தின்னும். இதனால்தான் மூலதனச் சேமிப்பை காந்திஜி கண்டிக்கிறார். முதலாளித்துவத்துடன் கூடிக் குலாவும் காந்திஜியின் "வாரிசுகள்" காந்திஜியின் இந்த உத்தேசத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவார்களா?

* * *

காந்திஜி சிலையை வணங்குவதும், காந்திஜி நினைவு நாளில் நூல் நூற்பதும் காந்திஜிக்குச் செலுத்தும் உண்மையான வணக்கம் ஆகாது. காந்திஜியின் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதுதான் காந்திஜிக்குச் செலுத்தும் உண்மையான வணக்கம். காந்திஜி பக்தர்கள் இதைச் செய்வார்களா?

*ஆண்களைவிட பெண்களே தியாகபுத்தி உடையவர்கள் என்று கருதுபவர் காந்திஜி. இந்தக் கட்டுரையில் வீரமகள் வள்ளியம்மை பற்றிய வரலாறும், வேறு பல குறிப்புக்களும் அடங்கியிருக்கின்றன.*

# காந்தியடிகளும் பெண்களும்

○

லக்ஷ்மி அம்மாள்

**காந்தியடிகள்** கஸ்தூரிபாயுடன் முதன் முதல் நம் தமிழ் நாட்டுக்கு 34 ஆண்டுகளுக்கு முன்பு விஜயம் செய்தார். 1915 ஏப்ரல் என்று அந்த ஆண்டையும் மாதத்தையும் திட்டமாகக் குறிப்பிடலாம். ஒரு நாள் மாலைப்பொழுதில் சாதாரணக்குடியானவர்களான குஜராத்தி தம்பதிகள் வந்து சேருவது போல் காந்தியடிகளும் கஸ்தூரிபாயும் சென்னை ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் வந்து இறங்கினார்கள். ஆம், தமிழகத்தின் சென்னைக்குத்தான் வந்து சேர்ந்தார்கள். தென்னாப்பிரிக்காவில் ஸ்ரீ. நாகப்பன், நாராயணசாமி முதலான தமிழர்களும், வள்ளியம்மை முதலான தமிழ்ப் பெண்களும் சத்தியாக்கிரகப் போராட்டத்திலே காந்தியடிகளுக்குப் படைத் துணையாக நின்று பெருந் தொண்டாற்றினார்களல்லவா? அந்த வீரர்களின், வீரமங்கையின் தமிழ்த் திருநாட்டைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையோடுதான் காந்தியடிகளும் கஸ்தூரி அம்மையும் சென்னைக்கு வந்தார்கள். அந் நாளிலேயே காந்தி தம்பதிகளுக்குச் சென்னை என்றால் தமிழ் நாட்டின் தலைநகரம்தான். இந் நாளில்தான் விநோதமான பிரசாரங்கள் நடைபெறுகின்றன. காந்தியடிகளின் உத்தம சீடர்களில் ஒருவரான நம் புதிய ராஷ்டிரபதி கூட இன்று சென்னையைத் தமிழகத்திலிருந்து வெட்டிவிட வேண்டுமென்று பிரசாரம் செய்கின்றார்!

ஆனால் அந்த 1915 ஏப்ரல்-21-ல் சென்னை 'விக்டோரியா பப்ளிக் ஹாலி'ல் மகான் மணி ஐயர் என்ற டாக்டர். ஸர். சுப்பிரமணிய ஐயர் தலைமையில் காந்தியடிகள் பேசும் போது, நாகப்பன், நாராயணசாமி என்ற தமிழர்கள் பதினேழு பதினெட்டு வயதுள்ள இளைஞர்கள், தென்னாப்பிரிக்காவிலே சட்ட மறுப்புப் போராட்டத்தில் சிறந்த போர் வீரர்களாக விளங்கினார்கள் என்பதையும், வள்ளியம்மை யென்ற பதினேழு வயதுள்ள தமிழ்ப் பெண் சிறை வாசத்தின் விளைவாக உயிர்த் தியாகம் செய்தாள் என்பதையும்தான் முக்கியமாக வற்புறுத்தினார். சென்னைத் தமிழர்கள்—சென்னை மாகாணத்தின் கிராமங்களிலிருந்து போயிருந்த தமிழர்கள்— தம்மையும் தமது மனைவியாரையும் சட்ட

மறுப்புத் துறையில் உத்ஸாகப் படுத்தியதாகவும் காந்தியடிகள் கூறினர். இப்படிக் காந்தியடிகள் 1915-ல் சென்னைமா நகரில் பேசியதும் தமிழர்களுக்குச் சென்னை மீதுள்ள உரிமைக்கு ஒரு சான்ருகவே கருதத்தக்கது.

இருக்கட்டும். சத்தியாக்கிரகம் பிறந்தது தென்னுப்பிரிக்காவிலே. அந்தப் புதிய போர்முறையைக் கண்டுபிடித்துத் தந்து அதனல் சுதந்திரமும் நமக்குச் சம்பாதித்துக் கொடுத்திருக்கும் மகாத்மா காந்திக்கு வள்ளியம்மைபோன்ற தமிழ்ப் பெண்மணிகள் செய்திருக்கும் உதவி தமிழ்ப் பெண்குலத்திற்கே ஒரு பெருமையாக நிலவத்தக்கது. மேலே சொன்ன சென்னைப் பிரசங்கத்திலே வள்ளியம்மையைக் குறித்து காந்தியடிகள், 'இந்தப் பதினெழு வயது இளம்பெண் மாரிட்ஸ்பர்க் சிறைச்சாலையிலிருந்து எலும்புந் தோலுமாக ஜுரநோயுடன் வெளிப்பட்டுஒரே மாதத்தில் உயிர் துறந்தாள். இந்தத் தியாகத்தை எந்த மொழிகொண்டு புகழப் போகிறீர்கள், என்னையும் கஸ்தூரிபாயையும் இப்படிப் புகழ்ந்து பேசும் நீங்கள்?' என்று கேட்டார். யார் இந்த வள்ளியம்மை —இந்தத் தமிழ்ப் பெண்மணி?

பெண்மணி என்றதும்இந்நாளில் ஓசைப்படத் தங்களை விளம்பரப் படுத்திக் கொள்வோரின் நினைவு வரக்கூடும் வாசகர் பலருக்கும். ஆனல் இந்த வள்ளியம்மை என்ற வீரப் பெண்மணி முனுசாமி முதலியார்என்ற தமிழரின் மனைவி. 'கூலிகள்' என்று தான் இருண்ட கண்டத்து வெள்ளையர் இவர்களைக் குறிப்பிட்டார்கள். காந்தியடிகளையே 'கூலி பாரிஸ்டர்' என்று பேசிய பிரகஸ்பதிக ளல்லவா?

1913-ம் ஆண்டு மார்ச்சு மாதம் —காந்தி யடிகள் சென்னையில் வந்து பேசுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான்— தென்னுப்பிரிக்காவிலுள்ள உயர்தர நீதிமன்றம், முனுசாமி முதலியார்—வள்ளியம்மை விவாகத்தை விவாகம் என்றே ஒப்புக்கொள்ள முடியாது என்று தீர்ப்பளித்து விட்டது. ஏன்? இந்து முறைப்படி நடைபெற்ற விவாகங்களையே நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம் என்ருர்கள் நீதிபதிகள். கிறிஸ்தவ சம்பிரதாயப்படி நிகழ்ந்த விவாகங்களை ஒப்புக்கொள்வோம் என்ருர்கள். ஒரு மத சம்பிரதாயமும் இல்லாமல் பதிவு செய்து கொண்ட விவாகங்களையும் அங்கீகரித்தார்கள். மற்றபடி இந்துமத சம்பிரதாய மணங்களும் பிறவும் சட்டரீதியாக அங்கீகரிக்கப் படவில்லை என்ருர்கள் வெள்ளையர்களான நீதி நிபுணர்கள். என்ன சட்டம், என்ன நீதி !

இந்த இருளடைந்த நீதியை எதிர்த்துச் செய்த ஸாத்வீகப் போரில் கலந்து கொள்ளுமாறு கூவியழைத்தார் காந்தியடிகள். விவாகமான இந்து ஸ்திரீகளுக்கு இழைத்த இந்த அநீதியை முன்னிட்டுப் பெண்மணிகளையும் தமது சாந்தப் போரில் படை வீரர்களாகச் சேர்த்துக் கொண்டார் காந்தியடிகள். அகமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் அப்போது சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்ட பெண்களில் வள்ளியம்மையும் ஒருத்தி. இப்பெண் கஸ்தூரி அம்மை

யுடன் சிறைப்பட்டாள். மாரிட்ஸ் பர்க் சிறையிலிருந்து மீண்டு வந்த ஒரு மாதத்தில் உயிர் துறந்தாள்.

காந்தியடிகள், ஜுரத்தால் வருந்திக்கொண்டிருந்த இப் பெண்ணைப் போய்ப் பார்த்தார். 'நீ சிறை புகுந்தது குறித்து வருத்தப்படவில்லையே வள்ளியம்மா?' என்று கேட்டார் காந்தியடிகள். அதற்கு வள்ளியம்மை, 'வருத்தமா? இப்போது என்னை மறுபடியும் கைதியாக்கிக்கொண்டு போனாலும் சிறை செல்லத் தயார்' என்று பதில் சொன்னாள்.

அதுகேட்ட காந்தியடிகள், 'அப்படியா செய்தி? மறுபடியும் உன்னைச் சிறையில் போட்டு அதனால் உயிருக்கே மோசம் வந்து விட்டால் என்ன செய்வாய்?' என்று மறுபடியும் ஒரு கேள்வி போட்டார். அது குறித்த கவலையே தனக்குக் கிடையாதென்று சொல்லி விட்டாள் வள்ளியம்மை. அப்படிச் சொன்னதுடன், 'தாய் நாட்டுக்கு உயிர் கொடுக்க ஆசைப்படாதவர் யார்?' என்று எதிர்க் கேள்வி ஒன்றும் கேட்டுவிட்டாள். ஜுரமடைந்து மெலிந்து கிடந்த அந்த உருவம் அப்படித் துணிந்து பேசியது காந்தியடிகளின் உள்ளத்தை உருக்கிவிட்டது. இந்த நிகழ்ச்சிக்குப்பின் சில தினங்களில் வள்ளியம்மை தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் அதிகாரமும் சிறைப்படுத்த முடியாத உலகத்திற்குப் பறந்துவிட்டாள்!

'வள்ளியம்மை மண்டபம்' என்று இந்த உயிர்த் தியாகியின் நினைவுக் குறியாக ஒரு மண்டபம் கட்டி நிறுத்த வேண்டுமென்று இந்தியா ஆசைப்பட்டது; 'மண்டபம்தான் போதுமா இந்த மகத்தான தியாகத்திற்கு?' என்று நாம் நினைக்கிறோமல்லவா? காந்தியடிகளோ அந்த மண்டப கைங்கரியத்தையும் அவ்வளவாக விரும்பவில்லை. 'கல்லும் சுண்ணாம்பும் கொண்டு ஒரு மண்டபம் கட்டினால் என்ன, கட்டாவிட்டால் என்ன?' என்று அபிப்பிராயப்பட்டார். 'வள்ளியம்மை தன் கையாலேயே தன் தியாகத் திருக்கோயிலைக் கட்டி முடித்து விட்டாள்' என்று காந்தியடிகள் தம் சரித்திரத்திலே எழுதி வைத்திருக்கிறார்.

இது மட்டுமா? 'வள்ளியம்மையின் புகழ் நிரம்பிய உள்ளத்தை வைத்துப் போற்றும் உள்ளங்கள் பல' என்றும் எழுதியிருக்கிறார். அந்த உள்ளங்களில் காந்தி தம்பதிகளின் உள்ளங்களை விசேஷமாய்க் குறிப்பிட வேண்டும். இந்த உள்ளங்களைக் காட்டிலும் எந்த மண்டபத்தைத்தான் விசேஷமானதென்று வள்ளியம்மையின் ஆத்மா விரும்பியிருக்கக் கூடும்.

'இந்தியா உள்ளவரை தென்னிந்திய சத்தியாக்கிரக வரலாற்றிலே வள்ளியம்மையின் பெயர் நிலை பெற்றிருக்கும்' என்று காந்தியடிகளே என்றும் அழியாத தமது சரித்திரத்தில் எழுதி வைத்திருக்கிறார் என்றால், இந்த வீரத் தமிழ்ப் பெண்ணின் தியாகத்தை என்னென்பது? பாக்கியத்தைத் தான் என்னென்பது? கல்லும் மண்ணும் சேர்த்து மண்டபம் இழைப்பது போதுமா? பொன்னும் மணியும் இழைத்து மண்டபம் கட்டி நிறுத்தினால்தான் போதுமா? சொல்லை இழைத்துச்

சுந்தரமான காவிய மண்டபமல்லவா கட்டி நிறுத்த வேண்டும்? சங்கக் கவிதை வாயிலாகக் கண்முன் வரும் எந்த வீரப்பெண்ணின் தியாகத்திற்கு இந்த வள்ளியம்மையின் தியாகம் குறைவுபட்டதாகும்? சத்தியாக்கிரக வீரசிங்கமாகிய காந்தியடிகளே, வள்ளியம்மை போன்றவர்கள் தமக்கும் ஊக்க மளித்தார்கள் என்று ஒப்புக் கொள்கிறாரே! சரி, தமிழ்ப் பெண்ணுலகில் சமீப கால ஜோதி இந்த வள்ளியம்மை. இவள் பெயரும், கண்ணகி முதலானவர்களின் பெயர்களுடன் இன்னும் இலக்கியப் பிரசித்தி பெறவில்லையே என்றால், அது வள்ளியம்மையின் தியாகக் குறையா? நமது எழுத்தாளர்களின் குறைதானே.

அன்னை கஸ்தூரிபாயைப் பெண்மைக்கு ஓர் அணிகலமாகத் தமிழர்களும் போற்றுகிறார்கள். ஆனால் இந்த அன்னையைக் குறித்துத்தான் எத்தனை உருக்கமான தமிழ்ப் பாடல்களை நாம் கேட்டு விட்டோம். 1915-ல் காந்தியடிகளுடன் சென்னைக்கு வந்து சேர்ந்த கஸ்தூரிபாய் அன்று வெள்ளைப் பாவாடையும் மேல் தாவணியும் நீண்ட ஷர்ட்டுக்கை வைத்த வெள்ளைச் சொக்காயும் அணிந்திருந்தார். பொன்னோ வெள்ளியோ சிறிதும் அந்தத் தூய மேனிக்குத் துரோகம் செய்த தென்று சொல்லமுடியாது. அன்றே அந்த முகத்திலும் விழிகளிலும் மிதந்த தாயன்பைக் காட்டிலும் எந்தப் பொன் நகைதான் அந்தப் பொன் மேனியை அணிசெய்திருக்கமுடியும்? அன்னை கஸ்தூரிபாயின் அத்தகைய தாயன்பும் பதிபக்தியும் பணிவும் அடக்கமும் சகிப்புத் தன்மையும் தியாகபுத்தியும் இன்னும் தமிழில் தக்க முறையில் பாடல் பெறவில்லையே என்று நான் வருந்துவதுண்டு. மகாத்மாவை மகாத்மாவாக்கி, அடிமை இந்தியாவுக்கு வழிகாட்டும் ஒரு லட்சிய புருஷனாகவும் செய்துவிட்டது அவரது அரும்பெரும் குணாதிசயம் மட்டுமா? அந்தக் குணாதிசயத்தையும் ஓரளவு உருவாக்கியதல்லவா இந்த வாழ்க்கைத் துணைவியின் குணாதிசயம்?

எந்தக் காரணத்தை முன்னிட்டும் மாமிச உணவும் மதுபானமும் செய்யக்கூடாதென்பது மகாத்மாவின் விரதங்களில் ஒன்று. கஸ்தூரி அம்மை மிக்க நோய்வாய்ப்பட்டிருந்த ஒரு சமயம், முட்டையும் ஒயினும் கொடுத்தாலன்றி இவர் பிழைக்கமாட்டார் என்று வைத்தியர் சொன்னாராம். அந்த நிலையிலும் கஸ்தூரி அம்மை, 'நான் இறந்தாலும் சரி; அந்த இரண்டையும் உட்கொள்ளமாட்டேன்' என்று சொல்லி மறுத்துவிட்டார்.

ஒரு சமயம் கஸ்தூரி அன்னைக்கு இரத்தப்போக்கு ஏற்பட, காந்தியடிகள் அதற்கு உப்பில்லாப் பத்தியம் சரியான சிகிச்சை என்றார். கஸ்தூரிஅம்மையோ முதலில் தம்மால் அவ்விதம் இருக்க முடியாதென்று பிடிவாதம் செய்தார். அது கண்ட காந்தியடிகள், 'ஏன் முடியாது? இன்று முதல் நான் உப்புச் சேர்க்காமல் சாப்பிடுகிறேன் பார்' என்று சபதம் கூறிச் சத்தியாக்கிரகம் தொடங்கினார். அந்தப் பிடிவாதத்திற்கு முன் கஸ்தூரிபாயின் பிடிவாதம்

பணிந்து விட்டது. 'எனக்காக நீங்கள் உப்பை ஒழித்து நாக்கைக் கட்டிப் போடவேண்டாம். நான் உப்பில்லாமல் சாப்பிட்டு உடம்பைக் குணப்படுத்திக் கொள்கிறேன்' என்று ஒப்புக்கொண்டார் கஸ்தூரி அம்மை. இந்தவிதமாக மகாத்மாவின் சத்தியாக்கிரக இயக்கம் தென்னுப்பிரிக்காவில் தொடங்குவதற்கு முன்பே வீட்டில் தொடங்கிவிட்டது; வெள்ளை அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு முன்பே தரும பத்தினியை வசீகரித்துப் பணியச் செய்துவிட்டது. ஆனல் வீட்டிலே சத்தியாக்கிரக வெற்றி வெகு எளிதாகக் கிடைத்ததற்குக் கஸ்தூரிபாயின் அன்புமயமான பொன்னுள்ளம் முக்கிய காரணமாகும்.

அன்னை கஸ்தூரிபாய் வீட்டிலே சத்திய சோதனைக்குக் காரணமானது போல் மகாத்மா ஒரு முக்கியமான சுதந்திர பாடம் கற்றுக் கொண்டதற்கும் காரணமாக உதவியிருக்கிறார். காந்தியடிகளும் ஒரு காலத்தில் சாதாரண ஹிந்து புருஷனைப்போல் தம் அதிகாரத்தை மனைவி மீது செலுத்த விரும்பினர். 'என் உத்தரவு இன்றி வெளியே போகக் கூடாது' என்று உத்தரவு போட்டுப் பார்த்தார். 'ஆனல் கஸ்தூரிபாய் தன் சுதந்திரத்தை இழக்க விரும்பவில்லை. என் உத்தரவின்றியே கோவில் குளங்களுக்குப் போய் வந்தாள். இதனல் எங்களுக்கிடையே சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டதும் உண்டு. தூயநடத்தையும் மனப்பான்மையுமுள்ள இளம் பெண் சுயேச்சையாக வெளியே உலாவி வருவது தவருகாது என்பதைப் பின்னல் நானும் உணர்ந்து கொண்டேன். இவளைக் கட்டுப் படுத்த முயன்றதற்காக வருந்தினேன்' என்று காந்தியடிகளே தம் சுயசரிதையில் எழுதியுள்ளார்.

வீட்டில் கஸ்தூரி அன்னையுடன் பழகியும், வெளியே ஸரோஜினி தேவி முதலான பிரசித்தி பெற்ற வீரமங்கையருடனும், வள்ளியம்மை போல் பிரசித்தி பெருமலே மகத்தான தியாகங்கள் புரிந்த மங்கையருடனும் பழகியும் காந்தியடிகள் பெண்மையின் அபார சக்தியை உள்ளவாறு உணர்ந்து கொண்டார். பெண்களுக்கு ஆடையாபரணங்களால் அழகு ஏற்படுவதைக்காட்டிலும் பணி செய்வதால் தான் உண்மையழகு ஏற்படும் என்கிறார் காந்தியடிகள். நகைப்பித்தை நகையாடிக் கண்டித்துவிட்டு 'பெண்கள் குடும்ப அலுவல்களைக் கவனிப்பது போல் தேசப்பணியும் செய்து கொண்டிருக்க வேண்டும்' என்கிறார். செயற்கைச் சிங்காரங்களே தீண்டத்தகாதவை என்று கூறித் தீண்டாமையை உள்ளத்திலிருந்தே விலக்கிவிட வேண்டும் என்கிறார். வருங்கால இந்தியாவைக் குறித்த தம் கனவிலே பெண்களுக்குச் சுதந்திரம் மறுப்பது அஹிம்ஸா தர்மத்தையே மறுப்பதாகும் என்று குறிப்பிட்டு, ஆண்களுக்குள்ள உரிமைகள் யாவும் சட்டப்படியே பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் என்கிறார். இந்தக் கருத்துக்களுக் கெல்லாம் முக்கிய காரணம், காந்தியடிகளுக்குக் கஸ்தூரிபாய் வாழ்க்கைத்துணையாக வாய்த்ததும், வள்ளியம்மை, ஸரோஜினிதேவி, ராஜகுமாரி அம்ருத கௌரி போன்ற பெண்மணிகள்

சிஷ்யைகளாக வாய்த்ததும் என்று துணிந்து கூறலாம்.

இந்தியாவில் சுதந்திர விளக்கை ஏற்றிவைத்த மகாத்மா, பெண்க ளெல்லாம் இந்நாட்டின் குல விளக்குகளாக விளங்க வேண்டு மென்று கனவு கண்டார். அப்படி விளங்கி இல்லத்திற்கும் தேசத்திற்கும் ஒருங்கே பெண்கள் தொண்டாற்றும்போது இந்தியாவின் சுதந்திர ஜோதி ஜகன்மோகன ஜோதியாகப் பிரகாசிக்கும் என்பது திண்ணம்.

தமிழ்நாட்டிலே மதுரையில் முதன்முதல் மீனாட்சியம்மன் தன் கோயிலை ஹரிஜனங்களுக்குத் திறந்து வைத்தாள், காந்தியடிகள் ஹரிஜன யாத்திரை செய்யும் போது, மீனாட்சியம்மையின் தெய்வத் திருவருளால் சுதந்திர இந்தியாவில் தீண்டாமையை அறவே ஒழிப்பதற்குத் தமிழ்ப் பெண்கள் முன்னணியில் நிற்க வேண்டும். அப்போதுதான் தெய்விக ஜோதியாகத் திகழும் காந்தியடிகளின் பூர்ண ஆசி வள்ளியம்மை தோன்றிய தமிழ்ப் பெண் குலத்திற்குக் கிடைப்பதாகும்.

✽

## உண்மையே அழகு

உண்மையிலும், உண்மையின் மூலமாகவும் நான் அழகைக் காண்கிறேன்; அழகைத் தேடுகிறேன். எல்லா உண்மைகளும்,—உண்மையான கருத்துக்கள் மட்டுமல்ல, உண்மையான முகங்கள், உண்மையான சித்திரங்கள், அல்லது உண்மையான பாடல்கள்—இவையும் மிக அழகாக உள்ளன. ஜனங்கள் பொதுவாக உண்மையில் அழகைக் காணத் தவறி விடுகிறார்கள். சாதாரண மனிதன் உண்மையை விட்டுப் புறம்பே போய் விடுகிறான். பிறகு, உண்மையில் அழகு இருப்பதைக் காணும் சக்தியை இழந்த குருடனாகி விடுகிறான்.

—மகாத்மா காந்தி

## பெண்ணின் கற்பு

பெண்ணானவள் தியாகம், அஹிம்சை ஆகியவற்றின் சொரூபம் என்று நான் வர்ணித்திருக்கிறேன். அவள் தன் கற்பையோ, கௌரவத்தையோ பாதுகாத்துக் கொள்ளுவதற்கு ஆணை நம்பிக்கொண்டிருக்கக் கூடாது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு பெண்ணின் கற்பை ஒரு ஆடவன் காப்பாற்றினான் என்பதாக ஒரு செய்தியைக்கூட நான் கேட்டதில்லை. அவ்விதம் ஒரு ஆண் பாதுகாக்க முயலுவது முற்றிலும் நடக்காத காரியமே.

—மகாத்மாகாந்தி

## பெண் யார்?

சுயமாகத் தியாகம் பண்ணும் பண்பும், தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொரூபமாக பெண் இல்லாவிட்டால், பிறகு பெண் என்பதற்கே அர்த்தமில்லை.

—மகாத்மா காந்தி

★ இந்த யுகத்தில், அதாவது தற்காலத்தில், பிறர் கண்ணுக்குத் தான் மேதையாகத் தோன்றும்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற பைத்தியம் மேதைகளையும், முட்டாள்களையும் ஒன்று போல ஆட்டி வைக்கிறது. எல்லோரும் அப்படி நடந்தால் எப்படி இருக்கும்? அதைத்தான் இந்தக் கதையில் ஹாஸ்யரசத்துடன் அபாரமாகச் சித்திரிக்கிறார் சரோயன். கதையில் எல்லாப் பாத்திரங்களும் ஏதோ மர்ம புருஷர்களைப் போல நடந்து கொள்ளுகிறார்கள். மிகச் சிறிய கதையில் இப்படிப்பட்ட பெரிய விஷயத்தை எழுதிப்புலப் படுத்தும் இந்த எழுத்தாளர் இன்றைய அமெரிக்க சிறுகதை ஆசிரியர்களில் ஒரு பிரத்தியேகமான உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கிறார்.

# மேதாவிகள் யுகம்

○

வில்லியம் சரோயன்

அவர்கள் தனியாக இருக்க விரும்பினார்கள். இது அவனுக்குத் தெரியும். ஆனாலும் அவர்களிடம் போய்க் கலந்து கொள்ளுவது நாகரிகமற்ற காரியம் என்று அவனுக்குத் தோன்றவில்லை. ஏனென்றால் அப்படிப் போய் கலந்து கொள்ளுவதினால் அவர்களுக்குப் பிரதி உபகாரமாக சில சுகமான பலன்கள் ஏற்படும் என்பது அவன் எண்ணம். போய்க் கலந்து கொள்ளுவதினால் என்ன கெட்டுப் போய்விடும்? சாப்பிட்டு முடிந்ததும் அவர்கள் முன் போலவே இருந்து கொள்ளப் போகிறார்கள். அவ்வளவுதானே! அவர்களும் இவன் வந்து தங்களுடன் கலந்து கொள்ளுவதைப் பற்றி பரவாயில்லை என்று கூறி விட்டார்கள்.

இவனுக்குத்தான் அவர்களை நன்றாகத் தெரியாதே ஒழிய, அவர்கள் அப்படி ஒன்றும் இந்த இடத்திற்கு அந்நியர்களல்ல. அவர்கள் இரண்டு வகையான பலகாரங்களை சாப்பிட்டுவிட்டு மூன்றாவதாக மற்றொரு பலகாரத்தை சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அதனால் இவனும் அவர்கள் சாப்பிட்ட அந்த மூன்று வகைப் பலகாரங்களையும் தனக்குக் கொண்டு வரும்படி சொன்னான். இதன் மூலம் அவர்களுடன் இவனும் சமதூரத்தில் இணைந்து செல்ல முடியும் அல்லவா? பலகாரமும் வந்து சேர்ந்தது; மூவரும் சாப்பிட்டும் ஆயிற்று. இவன் என்னென்னவோ பல விஷயங்களைப் பற்றி பேசித்தீர்த்தான். இதனால் அவர்கள் இவனை முட்டாள் என்று நினைத்தார்கள். அவர்கள் இப்படி தன்னைப்பற்றி நினைக்கிறார்கள் என்று கூட இவனுக்குத் தெரியும். ஆனாலும் அது பற்றி இவன் கவலைப்படவில்லை.

அந்த இருவருள் ஒரு நபர் ஒரு எழுத்தாளர்; மற்றொருநபர் அந்த எழுத்தாளரின் பெண். அவள் சித்திரக்கலையைக் கற்றுக்கொண்டிருந்தாள். இவன் எவ்வளவு நாளுக்கு தேவையோ அவ்வளவு நாளுக்காகவே அந்த எழுத்தாளருடைய எழுத்துக்களைப்பற்றியும் அந்தப் பெண்ணின் சித்திரங்களைப்பற்றியும் முதலில் விசாரித்துக் கொண்டான். அதன்பிறகு பேச வேண்டிய விஷயம் இவனைப் பற்றித்தான்.

எல்லாம் தயாரான நிலையிலிருந்தது. சிறிது நேரத்தில் தன்னைச் சுற்றி ஒரு சிறு நாடகம் நடக்கப் போகிறதென்று அவனுக்குத்தெரியும். அதற்கு, அவனுக்குச் சில சாக்ஷிகள் வேண்டியிருந்தன.

முதலில் ஹோட்டல் காரப் பையன் தன்னைப்பற்றிப் பேசத் தொடங்கினான். தான் ஒரு காலத்தில் குதிரைச் சவாரி பழகியதாகவும் அதில் தனக்குத் தோல்வி ஏற்பட்டதாகவும் கூறினான். அப்புறம், தான் ஒரு சங்கீத ரசிகனென்றும் லோபித் தனத்தை வெறுப்பவன் என்றும் சொன்னான். மேலும், தன்னுடைய பெயர் ஆகஸ்ட் என்றும், ஹோட்டலில் தான் வேலை செய்து வரும் இருபத்து ஏழு வருஷ காலத்தில் ஒரு தடவை கூட, மாமிசத்தைக் குத்திச் சாப்பிடும் 'போர்க்' முள்ளைக் கைதவறிக் கீழே போட்டது கிடையாது என்றும் மிகவும் பெருமையோடு தெரிவித்தான். தானுக்காக அவன் இப்படி ஜம்பம் அடித்து கொள்ளும் போதே கை தவறி ஒரு கத்தியைக் கீழே போட்டு விட்டான். உடனே குனிந்து அதை எடுத்தான். அப்பொழுது, "பார்த்தீர்களா? கத்தி தான் கீழேவிழுந்தது; போர்க் முள் விழவில்லை" என்றான்.

சமையல் கூடத்தில் யாரோ அடுப்பில் கால் தடுக்கிக் கீழே விழுந்ததால் அங்கிருந்த் ஏராளமான வெள்ளிப்பாத்திரங்கள் மடமட வென்று சரிந்து கீழே விழுந்தன. ஹோட்டலில் இருந்த எல்லோரும் துள்ளி விழுந்தார்கள். ஆகஸ்ட் சமையலறைக்குப் போய் திரும்பி வந்து, "ஒன்றுமில்லை; சமையல் கூடத்தில் தீப் பிடித்து எரிகிறது. சமையற்காரன் மயக்கமாகி விழுந்து விட்டான். அவ்வளவுதான்" என்று சொன்னான்.

இந்தச் சமயத்தில்,இளம் பெண் எச்சில் படிகத்திற்குள் ஒரு பூச்சி கிடப்பதைப் பார்த்தாள்.

வெளியே இருந்து ஆணும் பெண்ணுமாக இருவர் வந்தனர். அவர்களைத்தொடர்ந்து வந்த ஒரு சிறு நாய் அந்த ஆடவனை விட்டு அப்பால் போக மறுத்தது. இவ்வளவிற்கும் அவன் அந்த நாய்க்கு ஒரு எலும்புத்துண்டு கூடப்போடவில்லை. அங்கே எலும்புத் துண்டுகளும் இல்லை.

பிறகு, குறிப்பிடத் தக்கவாறு கவர்ச்சியே இல்லாத ஒரு ஸ்திரீ அங்கு வந்தாள். அவள் எங்கிருந்து வந்தாளோ? வந்து இந்த ஆடவனின் க்ஷேமலாபங்களை விசாரித்தாள். "இருவரும் சௌக்கியம் தான்" என்று அவன் சொன்னான். அதன் பிறகு அந்த ஸ்திரீ எத்தியைப்பற்றி விசாரித்தாள். "எத்தி பழையபடியும் சுகமாக இருக்கிறாள். உங்களிடம் தன்

அன்பைத் தெரிவிக்கச் சொன்ஞள்" என்ருன் அவன்.

உடனே அந்த ஸ்திரீ, "நீங்கள் சுகமாக இருப்பதைக் கண்ணுரக் கண்டதற்காகவும் எத்தி சௌக்கிய மாக இருக்கிருள் என்பதைக்கேள் விப்பட்டதற்காகவும் நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன்" என்று கூறினுள். பிறகு அங்கே ஒரு சின்னஞ்சிறு வாலியன் வந்து அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு அவளை அழைத்தான். உடனே அவள் வெறும் வெளியில் பல முறையும் முத்தமிட்டுக் கொண்டே விடை பெற்றுப் போய் விட்டாள். அந்த பெண் யார் என்று அறிய அந்த யுவனும் யுவதியும் விரும்பினர். ஹோட்டல்காரப்பையன் அவள் பிரபல மான ஒரு ஸ்திரீ என்றும், ஐந்து தடவைகள் அவள் கல்யாணம் செய்துகொண்டிருக்கிருள் என்றும், ஆனுல் அதன் காரணம் தனக்குத் தெரியாது என்றும் கூறினுன்.

அவர்கள் தெருவை நோக்கியிருந்த ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னுல் இரண்டு மேஜைகள் கிடந்தன. அப்பொழுது சுமார் ஒன்பது அல்லது பத்து வயது உள்ள ஒரு பையன் வந்து நின்று ஜன்னல் வழியாக மொத்தம் மூன்று நிமிஷநேரம் உள்ளே எட்டிப்பார்த்தான். அவனுடைய உடை யெல்லாம் ஒரே கந்தல். (நம்மையெல்லாம் இயேசுநாதர் வெறுப்பதாக அவன் நினைத் தான். அவன் பசியோடு இருக்கிருன். ஆனுல், நாம் பேய்த்தீனி தின்பதை அவன் பார்க்க வந்திருக்கிருன். சுமார் ஒன்பது வருஷ காலத்திற்குள் கிறிஸ்மஸை ஒட்டி அவன் ஒரு கதை எழுதப் போகிருன். அநேகமாக "தீப்பெட்டி ஆபீஸ் பெண்" என்ற கதையை விடக்கொஞ்சம்நன்ருகவே எழுதப் போகிருன்.) ஹோட்டல்காரப் பையன் ஒருவன் ஜன்னல் பக்கம் போய் பையனைப் பிடித்து வெளியே தள்ளினுன். அதற்குப் பதிலாக, அந்தப் பையனைச் சாப்பிடவே அழைத்திருப்பான். அப்படி விருந்துக்கு அழைப்பவன் தன் கையில் ஒரு ஐயாயிரம் டாலர்களாவது வைத்திருக்க வேண்டாமா? அதற்கு வழியில்லாமல் அவனைச் சாப்பிட அழைத்து, தன் அசட்டுத் தனத்தால் விருந்தாளிக்கு எக்கச்சக்கமாகத் தோன்றும்படி நடந்து கொள்ள அவனுக்கு இஷ்டம் இல்லை. ஆகவே அந்தப் பையனை வெளியே தள்ளினுன்.பையனோ அப்பால் நகரமறுத்தான்.ஹோட்டல்காரப்பையனுக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. ஆனுலும், பையனைப் பொருட்படுத் தாமல் அலக்ஷியப்படுத்தவேண்டும் என்று அவன் தீர்மானித்து விட்டான். அதனுல், பையன் அங்கேயே நின்று உள்ளே பார்த்துக் கொண்டிருந்தான்.

சமையல் அறையில் பற்றிய நெருப்பு அணைக்கப்பட்டு விட்டது. சமையல்காரனும் வெளியே வந்தான்.வந்து அங்கு இருந்த கனதனவான்களுடன் கை குலுக்கினுன். அப்பொழுது ஜன்னல் ஓரத்தில் ஒரு பையன் இருக்கிருன் என்பதை அவன் அறியாமல் இருக்க முடியுமா? அப்படி அறியாமல் இருக்க அவன் என்ன செவிடா?

பையன்தான் ஒரு அரை நிமிஷ நேரமாக ஜன்னல் கதவில் தாளம் போட்டுக்கொண் டிருக்கிறனே!

பார்த்தான் சமையல்காரன்.ஓரே அடியாக அவனுக்குக் கோபம் வந்து விட்டது. "போடா வெளியே" என்று கத்தினன். பையனும் சும்மா இருக்கவில்லே. பதிலுக்குக் கத்தினன். அவன் என்ன கத்தினன் என்பது முதலில் ஒருவருக்கும் கேட்கவில்லே; ஆனல் அவன் கத்தியது இன்னது என்பதை விரைவில் காதில் வாங்கிக் கொண்டார்கள்.

"இப்போது என்ன மணி? என்ன இழவு மணி ஐயா இப்போது!" என்றுகத்தினன்பையன்.

"ஒன்பது மணி பதினெரு நிமிஷமடா" என்றுன் சமையல் காரன்.

உடனே பையன் போய்விட்டான்.

மணியா? மணி தெரிந்து அந்தப் பையன் என்ன செய்ய போகிறுன்? அதுவும் ஒரு ஹோட்டலில் கும்பலாக உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண் டிருக்கும் ஜனங்களிடம் வந்து கேட்டு அவன் அப்படி என்ன செய்யப் போகிறுனும்? ஒருவருக்கும் புரியாதபடி எழுதி எல்லோரையும் திணற அடிக்கும் எழுத்தாளனுகப் போகிறுனு? இந்த மாதிரி மணி என்ன என்று விசாரித்து அவன் செய்யப் போவதுதான் என்ன? அந்த மகா பெரிய எழுத்தாளன் யார்? இந்த விவரத்தை வந்து கேட்டு அறிந்து கொண்டானே, அவன் எப்படிப்பட்டவனுகத் தலையெடுக்கப் போகிறுன், ஐயா?

✲

## பயப்படாதீர்கள்

பயந்துகொண் டிருக்கும் கோழைகள் ஒழுக்க முள்ளவர்களாக இருக்க முடியாது. பயமின்மை என்றுல் என்ன? வெளித் தோற்றத்துக்கு பயமானவையாக உள்ளவற்றிற்குப் பயப்படாதிருத்தலே. அதாவது நோய்களுக்கோ, சரீரத்துக்கு அபாயம், அல்லது மரணம் ஏற்படும் என்பதற்கோ பயப்படக்கூடாது. தன் உடைமைகளேயும், தனக்கு மிக நெருங்கியவர்களாக உள்ளவர்களேயும், தன் பிரக்யாதியையும் இழந்து விடுவதற்காகப் பயப்படக்கூடாது. பிறருக்கு மனக் கஷ்டம் ஏற்படுமே என்று கருதியும் செய்ய வேண்டியதைச் செய்யப் பயப்படக்கூடாது.

—மகாத்மா காந்தி

## தலேகுனிய வேண்டும்

வேலே செய்து சாப்பிடத்தக்க சரீர பலம் இருந்தும்கூட வேலேயோ சாப்பாடோ கிடைக்காமல் கஷ்டப்படும் ஒரு மனிதன் அல்லது ஒரு ஸ்திரீ இருக்கும் வரையிலும், நாம் சுகமாகப் படுத்து எழுந்துகொண்டு, ராஜ சாப்பாடு சாப்பிடுவதற்காக வெட்கித் தலேகுனிய வேண்டும்

—மகாத்மா காந்தி

'கான்ஸர்' என்று சொல்லப்படும் புற்று நோய்க்கு மருந்துகளோ சிகிச்சை முறைகளோ இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் சில விதமான புற்றுக்களைக் குணப்படுத்திவிடலாம்; வராமலும் தடுத்துவிடலாம். அதற்குரிய வழிகளையும் ஆலோசனைகளையும் இங்கே எடுத்துரைக்கிறார் ஒரு வைத்திய நிபுணர்.

# புற்றுநோய் விவரம்

டாக்டர் கிருஷ்ணமூர்த்தி

### புற்றுநோயின் சரித்திரம்

புற்றுநோய் மிகமிகப் புராதனமான காலத்திலேயே இருந்திருக்கிறது. எகிப்து தேசத்தின் புராதனமான முதுமக்கள் தாழி சடலங்களையும், அந்நாட்டில் பழைய காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டுள்ள விபரங்களையும் பார்க்கும்போது, அந்தக் காலத்தில் இந்த நோய் இருந்தது என்பதற்குரிய ஆதாரங்கள் கிடைக்கின்றன. பூர்வீக கிரேக்கர்களும், இந்துக்களும் இந்த நோயைப்பற்றி அறிந்துள்ளனர்; இந்த நோய்க்குச் செய்ய வேண்டிய சிகிச்சை முறைகளையும் வகுத்துள்ளனர். மத்திய காலத்தில் இந்த நோய்க்கு என்ன சிகிச்சை செய்வது என்பது பெரிய பிரச்னையாகி விட்டது; சிகிச்சை எதுவும் பயன்படாது என்றே தோன்றியது.

### புற்றுநோய் என்றால் என்ன?

சரீரம் சின்னஞ்சிறிய அணுக்களைப்போன்ற பல வடிகங்களால் (Cells) செய்யப்பட்டுள்ளது. வெளியிடத்திலிருந்து சரீரத்துக்குள் சிற்சில புது சக்திகள் புகும்போது, இந்த வடிகங்களில் ஒன்றோ அல்லது பலவோ வளர்ச்சி பெற்று தம் எண்ணிக்கையில் பெருகத் தொடங்கிவிடுகின்றன. கட்டுக்கடங்காமல் அது பெருகுவதற்கு நோக்கம் எதுவும் கிடையாது. பெருகி, பல இடங்களிலும் விரிந்து பாவி, பக்கத்தில் உள்ள தசையின் உள்ளே பிரவேசித்து சரீரத்தின் சத்து முழுவதையும் தனக்கு ஆகாரமாக எடுத்துச் சாப்பிட்டு விடுகிறது. அப்போது தசையில் புண்கள் உண்டாகின்றன; அந்தப் புண்கள் ஆறுவதே இல்லை. முன்கூறியபடி இப்படி சரீரத்தில் மாறுதல் ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு வெளியிடத்திலிருந்து சரீரத்ினுள் பிரவேசிக்கும் புது சக்திகள் எவை? அந்த சக்திகளில் சில இன்னவென்று தெரிகின்றன; சில இன்னும் தெரியவில்லை.

புற்றுநோய் பரம்பரையாக ஒட்டிக்கொண்டு வரும் நோய் அல்ல.

### புற்றுநோய் தோன்றும் விதம்

புற்றுநோயின் மூலகாரணம் பரிபூரணமாகத் தெரியவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக இரண்டொரு காரணங்களையே கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது;

ஆகவே, பரிபூரணமாக அதன் காரணம் என்னவென்று இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப் படவில்லை.

ஆனாலும் வாயில் புற்றுநோய் புறப்படுவதற்கு புகையிலை போடுவதும், பற்கள் கூர்மையாக இருந்தால், அவற்றால் வாய்ச்சதை அடிக்கடி புண்ணாக்கப் படுவதும், மற்றும் மேகநோயின் காரணமாக வாயில் புண் ஏற்படுவதும், வாயின் ஒரு பகுதியில் மட்டும் நீடித்த காலமாக உஷ்ணம் தாக்கப்பட்டிருப்பதும் காரணங்களாகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

மேல் தோலிலும் புற்று உண்டாகும். உஷ்ணம் அதிகமாக, அதிக காலமாக, தாக்கப்பட்டிருந்தாலும் அமித ஊதாக் கிரணங்களினாலும் **(Ultra-violet Rays)** அல்லது சூரிய கிரணங்களினாலும் தோலில் புற்று ஏற்படலாம். தோல் புற்று சம்பந்தமாக ஒரு அதிசயம் என்னவென்றால், கறுப்புத்தோல் உடையவர்களுக்குத் தோல் புற்று அநேகமாக உண்டாவதில்லை; வெள்ளை அல்லது சிவப்புத் தோல்காரர்களுக்குத்தான் மற்றவர்களை விட அதிகமாகப் புற்றுநோய் வருகிறது.

மிதமிஞ்சிய குடிப் பழக்கத்தினால் வயிற்றில் புற்று புறப்படக் கூடும்.

ஆண்குறியின் மேல்தோல் முன்னும் பின்னும் இழுப்பதற்கு இய்லாதவாறு இறுக்கமாக இருந்தால் உட்பாகத்தில் அழுக்குச் சேரும். அது, அங்கே புற்று தோன்றுவதற்குக் காரணமாகிவிடக் கூடும். முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் ஏன் அதிகமாகப் புற்றுநோய் வருவதில்லை என்றால் அவர்கள் குறியின் நுனித் தோலைக் கத்திரித்து விடுகிறார்கள். உட்புறம் திறந்தே இருப்பதால் அழுக்குச் சேரும்போது கழுவிவிட ஏதுவாக இருக்கிறது.

பிரசவத்தின்போது கருப்பையின் வாசலில் புண் ஏற்பட்டுவிட்டால், அங்கேயும் புற்று தோன்றக் கூடும். இவை எல்லாம் போக வேறு பல ரசாயன வஸ்துக்களினாலோ, சரீர அணுக்களாலோ புற்றுநோய் ஏற்படுவதுண்டு.

## புற்றுநோய் எப்படி பரவுகிறது?

புற்றுநோய் ஆரம்பத்தில் சின்னஞ்சிறு புண் மாதிரியே இருக்கும்; அப்போது வலியும் இராது. பிறகு அது கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து பெரிதாகி பெரிய புண்ணாகிவிடும்; துர்நாற்றம் சகிக்க முடியாது. சாதாரண சிகிச்சையினால் அப் புண்ணை ஆற்றவும் முடியாது. இதன் பிறகு அது சரீரத்தின் பிற பகுதிகளில் பிரவேசித்து சதையையும் நரம்பையும் அரித்துக் கொண்டே போகும். வலியும் அதிகமாகும். சில புற்றுக்கள் ரத்தக் குழாய்களின் வழியாக, சரீரத்தில், தூரத்தில் உள்ள பகுதிகளுக்கும், சுவாசப்பை, குடல், எலும்பு, மூளை போன்ற எல்லா இடங்களுக்கும் போய்ப் பரவும்; அப்படிப் பரவிய இடத்திலிருந்தும், பிற பகுதிகளில் பரவத் தொடங்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் புற்றுநோய் பீடிக்கப்பட்டவன் மெலிந்து பலவீனம் அடைந்து வலியினால் கஷ்டப்படுவான். அவன் சத்தை எல்லாம் புற்று உறிஞ்சிவிடும். தகுந்த சிகிச்சை இல்லாவிட்டால், இந்த

சந்தர்ப்பத்தில் நோயாளி செத்துப் போய்விடுவான்.

**சில எச்சரிக்கைகளும், புற்று நோயின் ஆரம்பகால அறிகுறிகளும்**

பொதுவாக 40 வயதுக்கு மேற்பட்ட ஒரு நபருக்குத் தொடர்ந்தாற்போல் மூன்று மாதங்களுக்குப் பசி உணர்ச்சி இல்லாமல் இருப்பது ;

காரணம் கூற இயலாதவாறு திரும்பத் திரும்ப வயிற்றுப் போக்கு ஏற்படுவது ;

சிறிது சிறிதாக மலச்சிக்கல் அதிகமாகிக் கொண்டு போவது ;

சரீரத்தில் எங்காவது வீங்கி, வலியும் எடுக்காமல் நாளாரம்பத்தில் பெரிதாகிக் கொண்டு போவது ;

சரீரத்தில் எங்காவது புண் வெடித்து அது ஆறுமல் இருப்பது ;

காரணம் கூற இயலாதவாறு, சளியற்று வறண்ட இருமல் வருவது ; அல்லது உமிழும்போது ரத்தம் விழுவது ;

பெண்குறியில் இடைவிடாமல் ரத்தமோ, பிசுபிசுத்த நீரோ கசிந்துகொண் டிருப்பது.

மேற் கூறியவை புற்றுநோய் தோன்றப்போகிறது என்பதற்கு முன் அறிவிப்புகளாகலாம்.

**புற்றுநோய் எப்போதும் மரண பயத்தை அளிக்குமா ?**

ஆரம்ப காலத்தில் சிகிச்சை செய்துகொண்டால் பெரும்பாலானவர்களுக்கு 100க்கு 80 வீதம் இந் நோயைக் குணப்படுத்தி விடலாம். இந்நிலை கடந்து வளர்ச்சி பெற்று, பிற இடங்களுக்கும் தாவி விட்டால், குணப்படுத்துவது நடக்காத காரியமே. மிகச் சொற்பமான காலம் கடந்துவிட்டாலும் புற்று நோயினுல் மரணம் அடைவதை அநேகமாகத் தடுக்கமுடியாது.

**புற்றுநோயைத் தடுக்க முடியுமா?**

இந்தக் கேள்விக்குப் பதில் கொடுப்பது சிரமமே; ஏனென்றுல் நோயின் மூலகாரணங்களுடைய தன்மைகளை இன்னும் நாம் அறியக் கூடவில்லை. ஆனல் வாய், ஆண் குறி, தோல் முதலியவற்றில் ஏற்படும் புற்றுநோய்களின் அடிப்படைத் தன்மைகளை அறிந்திருப்பதால் அவற்றைத் தடுத்துவிட முடியும்.

**வாய்**

வாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள் ; மிகக் கூர்மையாகவும், கரடு முரடாகவும் உள்ள பற்கள் நாக்கை அடிக்கடி புண்படுத்துவதால், அவற்றின் கூர்மையை டாக்டர்கள் மூலம் மழுக்கிச் சரி செய்து கொள்ளுங்கள். மேக நோய் கண்டிருந்தால் அதற்கு உடனே சிகிச்சை செய்து கொள்ளுங்கள் ; புகையிலை போடாதீர்கள். புற்றுநோய் தோன்றிவிட்டது என்று சிறிதளவு சந்தேகம் தோன்றிவிட்டாலும் உடனே டாக்டரிடம் போகவும்.

**ஆண்குறி**

ஒவ்வொரு நாளும் நீங்கள் குளிக்கும்போது, ஆண்குறியின் மேல்தோலை சற்று பின்னுக்கு இழுத்து, குறியின் நுனிப்பகுதியில் உள்ள அழுக்கை எல்லாம் நன்றுகக் கழுவி விடுங்கள் ; பின்னுக்கு இழுக்கமுடியாதவாறு

இறுக்கமாக இருந்தால், நுனித் தோலை டாக்டர்கள் மூலம் கத்தரித்து விடுங்கள். மேக வியாதிக்குச் சிகிச்சை செய்து கொள்ளுங்கள்.

**மேல்தோல்**

அனுவசியமாக சூரிய கிரணங்கள் சரீரத்தில் பட்டுக் கொண்டிருக்க இடம் கொடுக்கக் கூடாது. தார், கீல் எண்ணெய் போன்ற வஸ்துக்களை ஒதுக்கித்தள்ளுங்கள்.

**சிகிச்சை**

ஆப்பரேஷன் மூலமாகவோ, ரேடியம் அல்லது எக்ஸ் - ரே மூலமாகவோ இந்த நோய்க்குச் சிசிக்சை செய்யப்படுகிறது. இப்போது புது மருந்துகளும் உபயோகிக்கப்படுகின்றன. நோயின் ஆரம்ப நிலையில் டாக்டர்களிடம் வராவிட்டால் சிகிச்சையினுல் எதையும் சாதிப்பது துர்லபம்.

❋

## என் அனுபவம்

கசப்பான அனுபவத்தின் மூலம் நான் ஒரு உண்மையைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். அது என்ன? எல்லாக் கோவில்களும் கடவுளின் இருப்பிடமாக விளங்கவில்லை; வேண்டுமானுல் அந்தக் கோவில்கள் பாவகரமான பிசாசின் இருப்பிடமாக இருக்கக்கூடும். இந்தப் பிரார்த்தனை ஸ்தலங்களைக் கவனித்துக் கொள்ளுகிறவன் கடவுளுக்கு நல்லவனுக இராத பக்ஷத்தில், இந்தப் பிரார்த்தனை ஸ்தலங்களுக்கு யாதொரு மதிப்பும் கிடையாது. ஆகவே, மனிதன் எப்படிப் பயன்படுத்துகிருனே அப்படிடியேதான் இந்துக் கோவில்களும், மசூதிகளும், மாதா கோவில்களும் இருக்கின்றன.

—மகாத்மா காந்தி

## எண்ணம்

எண்ணம், சொல், செயல்—இந்த மூன்றும் ஒன்றுபோலவே அமைய வேண்டும்; உங்கள் எண்ணங்களை பரிசுத்தப் படுத்துவதற்காகவே எப்போதும் பாடுபடுங்கள்; பிறகு எல்லாம் சரியாய்ப் போய்விடும். எண்ணத்தைவிட வலுவுள்ளது எதுவும் கிடையாது. செயல் சொல்லையும், சொல் எண்ணத்தையும் பின் தொடருகின்றன. மிக உயர்ந்த ஒரு எண்ணத்தின் பலனே சொல் என்பது. எண்ணம் மிக உயர்ந்ததாகவும், பரிசுத்தமானதாகவும் இருக்குமானுல், எண்ணத்தின் பலனும் மிக உயர்ந்ததாகவும், பரிசுத்தமானதாகவும் இருக்கும்.

—மகாத்மா காந்தி

## எல்லாம் ஒன்றே

முஸ்லிம்களின் அல்லாவும், கிறிஸ்தவர்களின் கடவுளும், இந்துக்களின் ஈஸ்வரனும் ஒருவரேதான். இந்து மதமும், முஸ்லிம் மதமும் ஒன்றுக்கொன்று விரோதமான கலாசாரங்கள் என்றும், சித்தாந்தங்கள் என்றும் கூறுவதை என் ஆத்மா பரிபூரணமாக எதிர்க்கிறது. இந்தியாவில் இந்துக்கள் மட்டும்தான் வாழவேண்டும் என்று கருதும் இந்துக்கள் கனவுலகத்தில்தான் வாழ்ந்துகொண் டிருக்கிருர்கள்.

—மகாத்மா காந்தி

உ வருமானத்தைக் கொண்டு
நிர்மாணிக்கப்பட்ட நகரங்கள்.

டீ-வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு-சர்க்கார் கஜானுவுக்கு வருஷமொன்றுக்கு ரூ. 13 கோடி யளிக்கிறது. உங்கள் டீ அளிக்கும் வருமானத்தைக்கொண்டு அநேக நிர்மாண திட்டங்களுக்கு பண உதவி செய்யலாம். உதாரணமாக தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தை 10 வருஷங்களில் பூர்த்தி செய்ய ரூ. 55 கோடி செலவாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதே பத்து வருஷங்களில் டீயிலிருந்து மட்டும் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் அத்திட்டத்திற்கான செலவைப் போல இரண்டத்தனைக்கு மேலாகும். ஆகவே டீ உங்களகத்தில் சுகமும் சந்தோஷமுமளிக்கும் பானம் மட்டுமல்ல, நாட்டின் ஐசுவரியத்தை விருத்திசெய்யும் ஓர் சாதனமுமாகும்.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்.

- 1945–47ம் வருஷங்களில் நமது டீ ஏற்றுமதி ரூ. 120 கோடி பெறுமானமுள்ள அயல்நாட்டு நாணயச் செலாவணி யளித்திருக்கிறது.
- இத்தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும்பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.
- உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணு வரியும் ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு ¼ அணு வரியும் சர்க்காருக்கு கிடைக்கிறது. நாட்டு கஜானுவுக்கு வருஷ மொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ
ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டால் வெளியிடப்பட்டது.




# லிப்டன்ஸ்

## என்றல்

## முதல்தரமான டீ

LTX-152 TM.

*முன்னால் எபிகூரஸ் என்ற தத்துவ ஞானியைப் பற்றி கூறப்பட்டது. இந்த இதழில் எபிகூரஸின் கொள்கையை ஆதரிப்பவர்களுடைய வாதத்தைப்பற்றிப் படியுங்கள்.*

# எபிகூரியர்கள்

O

**வி. சக்கரை செட்டியார்**

**எ**பிகூரியர்கள் கூறியதாவது: கடவுளர்கள் இருக்கலாம்; இருந் தென்ன? செத்தென்ன? மனிதர் களுடைய விவகாரங்களில் அவர் கள் தலையிடுகிறதில்லை. தெய்வ லோகத்தில் சுகஜீவிகளாக வாழ் கின்றவர்களை ஏன் நம்முடைய உலகத்திற்குத் தள்ளி அவர்களைத் துன்பப்படுத்த வேண்டும்? ஸ்டோயிக்கர்களைப் போல உழன்று உண்மையை ஏன் தேட வேண்டும்? மனிதன் தன்னை அலட்டிக்கொள்ளாமல், ஒடுக்கிக் கொள்ளாமல், எதற்கும் கவலை கொள்ளாமலிருப்பதே மேலான ஞானம். முட்டாள்கள் பூச்சிகளைப் போல் விளக்கைச் சுற்றிப் பறந்து இறுதியில் அதன் வெப்பத்தினால் அழிகிறார்கள். இது மனித இயற் கைக்குப் பொருத்தமானதாயில் லையே. மனிதன் இன்ப துன்பங்கள், உயிர், சாக்காடு—இவற்றில் பல வித சிறிய பெரிய நிகழ்ச்சிகளி டையே நிற்கிறான். இவற்றை யெல்லாம் புறக்கணித்து சும்மா யிருப்பதென்றால் மனிதனுடைய சுறுசுறுப்பான சக்திகளை அழிவு படச் செய்தல் வேண்டும். இது முடியுமெனின், மனிதனே அழிய வேண்டும். சாகும்வரையில் மனித ரெல்லாம், நாடக அரங்கத்தில் வந்து தோன்றி தங்களது பாகங் களை நடித்துத்தான் போகின்றனர். இதன் முக்கிய அந்தி நோக்க மின்ன தென்று யார் அறிவார் களென்று சந்தேகித்து எபிகூரி யர்கள் இதை விட்டனர். தாயு மானவர்கூட சில சமயத்தில் இப் படித்தானிருக்கிறது மனிதவாழ் வென்றனர். யோசிக்கும் வேளை யில் எல்லாம் உறங்குவதும் உண் பதுவுமாய் முடியுமென்றனர்.

உலகத் தோற்றம், அணுக் கூட்டத்தாலும் பிரிவினாலும் உண்டாகிறது என்றும், ஸ்டோயிக் கரைப் போலவே உலகத்திற்கு ஆரம்பமுமில்லை முடிவுமில்லை என் றும் எபிகூரியர் கூறினர். சிருஷ்டி கர்த்தா ஒருவன் தேவையில்லை; எல்லா அணுக்களும் அகஸ் மாத்தாய்ச் சேர்ந்து இந்த பல வகையான சிரமமான அழகான உலகத்தை எப்படியோ உண்டு பண்ணிவிட்டது என்று கூறினர். இந்த உலகத்திற்குள் ஸ்டோயிக் கரைப்போல ஒரு ஆத்ம சக்தியிருக் கிறது என்று எபிகூரியர்கள் நம்ப வில்லை. இது உலகாயத வாதிக ளுடைய கொள்கை. ஜடப்பொரு ளினால் உண்டாகாத ஆத்மா, கட வுள்—இவ்விரண்டையும் அவர்கள்

தள்ளிவிட்டார்கள். உலகாயத வாதம் அநேக சாஸ்திரிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் சாஸ்திரிகளுக்குள் பெரும்பாலோர் இதைத் தள்ளிவிட்டு ஜடப்பொருளும், மனமும் ஆகிய இரண்டு மூலப் பதார்த்தங்கள் இருக்கின்றன, இவை சுயாதீனமான பொருள்கள் என்றனர். எவ்விதமாக இவை ஒன்றுபடுகின்றன என்ற கேள்விகளே மேனாட்டு அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு இடம் தருவனவா யிருக்கின்றன. ஜடம் ஜடத்தை அறியாது; ஆனல் ஜடத்தை மனம் எப்படி அறிந்து கொள்கிறது என்ற கேள்விக்கு இதுகாறும் ஒரு முடிவான விடை தோன்றின வழியைக் காணோம்.

எது உண்மை, எது பொய் என்ற கேள்விக்கு எபிகூரியர் சரியான விடை கூற முடியாதவர்களானார்கள். எல்லாம் ஜட அணுக்களின் கூட்டுறவென்றால், உண்மையைக் கண்டுகொள்ள மேலான பிரமாணம் ஒன்று வேண்டுமே! எந்த ஜட அணுக்களின் தொகை உண்மையென்றும் எந்த அணுக்களின் தொகை பொய்யென்றும் சொல்வதற்கு வேறு ஒரு பிரமாணம் வேண்டற்பாலது. இப் பிரமாணம் அணுக்கள் கூட்டுறவினல் உண்டானதானல் இந்தக் கூட்டத்திற்கு ஒரு சிறந்த தன்மையிருக்கக் காணவேண்டும். இம்மாதிரியாக இதுகாறும் இதைக் கண்டதில்லை. இப்பிரமாணம் அணுக்களுக்கும் அணுக் கூட்டங்களுக்கும் புறம்பானதா யிருந்தாலொழிய உண்மையையும், இன்மையையும் பகுத்தறியும் ஆதாரம் எங்ஙனம் கிடைக்கும்?

முற்காலத்தில் அணுக்கள், உயிரில்லாப் பொருள்கள் என்பது அணுவாதிகளின் கொள்கையாம். இது இந்த நூற்றுண்டின் தொடக்கம் வரையில் இயற்கை சாஸ்திரிகளிடையே வழங்கி வந்ததை அறியக்கூடும். ஆனல் இக்கொள்கையை இப்பொழுது உயரிய சாஸ்திரிகள் அறவே விட்டு ஒழிந்தனர். அணுக்களும் பிரிக்கப்படாதவையல்ல; அவற்றையும் பிரித்து அவற்றின் மின்சாரப் பிரிவுகளை ரேடியோ ஆராய்ச்சியாளர் கண்டிருக்கிறார்கள். உயிரென்பது தான் எல்லாவகைத் தோற்றங்களுக்கும் காரணம்; உயிரில்லாததிலிருந்து உயிர் உண்டாகாது. இந்தப் பழைய உலகாயதக் கொள்கையைப் பொய்யென்று காட்டி யிருக்கிறார்கள். இவ்வுயிரிலும் மனம், புத்தி தோன்றுகின்றன. இவை தோன்றுகிறதற்குப் போதுமான காரணம் ஒன்றும் தெரியவில்லை. அறிவுள்ள மூலகர்த்தா யில்லையாயின், அறிவும் மனமும் இவ்வுலகத்தில் எங்ஙனம் தோன்றினவென்ற கேள்விக்குப் பதில் கிடைப்ப தரிதாகிவிடும். பழைய உலகாயத வாதம் தற்கால பூதபௌதிக சாஸ்திர ஆராய்ச்சியால் நிராகரிக்கப் பட்டுவிட்டது. அக்கொள்கையை மிகச் சிலரே இக் காலத்தில் ஒப்புக்கொண்டவராவார்.

✲

## விளக்கம்

பொறுமைதான் பெரிய பிரார்த்தனை.

—புத்தர்

*காந்திஜி மறைந்தபின் நம் தேசத்தின் நிலை பல துறைகளிலும் எப்படியிருக்கிறது? இதை ஆராய்ந்து, தம் அபிப்பிராயங்களைக் கொடுக்கிறார் சாகா. ஸ்வதந்திராவிலிருந்து.*

# காந்திஜிக்குப் பின்

○

சாகா

"நமது மரணத்துக்காக சுடுகாட்டுத் தோட்டி கூட மனம் வருந்தும்படி, நமது வாழ்க்கையை நாம் வளம் படுத்தவேணடும்"—மார்க் ட்வெய்ன்.

மகாத்மா காந்தி மறைந்து ஓராண்டுக் காலம் ஓடிவிட்டது. இச்சமயம் நாம் நமது தேசிய ஐந்தொகையின் வரவு செலவு விவரங்களைப்புரட்டிப் பார்ப்பது பொருத்தமானதே. மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்களின் போக்கு என்ன? சுதந்திரப் போராட்டத்தில் காந்தீய வழி வந்த தர்மவீரர்கள் என்று தம்மைப்பற்றித் தாமே சொன்ன தேசத் தலைவர்கள், அரசியல் போராட்டத்தின் வெற்றி வாகைக்குப் பின்னால், தம்மை எப்படி ஆளவந்தார்களாகவும், ஆட்சியாளர்களாகவும் மாற்றிக் கொண்டார்கள்? அந்த ஆட்சியில் அவர்கள் தமது அதிகாரத்தை எவ்வாறு பயன் படுத்தினார்கள்?

பிரதம மந்திரி நேரு ஆங்கில ஆட்சியைத் தூக்கி யெறிந்த சக்தியின் குரலை இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறார். தமது தனிப்பட்ட குணாதிசயங்கள் மூலம், அவர் மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களைச் சம்பாதித்திருக்கிறார். சர்வ தேசியச் சக்கர வட்டத்தில், நேருவைப்போல் உயர்ந்த மதிப்பைப் பெற்றார் யாரும் இல்லை. அதிகாரம் அவரை இளக்கி, புடம் போட்டு, பணி ஆட்டியிருக்கிறது. மேலும் அவருடைய ஆரம்பகால வேகம் நிறைந்த குணங்களான பொறுமை யின்மையையும் படபடப்பையும் கூட அதிகாரம் களைந்தெறிந்திருக்கிறது. பொறுப்புணர்ச்சியின் சுமைக் கனத்தின் மத்தியிலும் அவர் ஆயாசம் தீர வழி கற்றிருக்கிறார். அதிகாரம் நல்லவர்களையும் கூடக் கொடுத்து வரும்போது, பண்டித நேரு மட்டும் அதன் மோகன மாயையில் அகப்படாமல் தப்பிவிட்டார். பண்டித நேருவைப் பற்றிய இந்த விமர்சனத்தை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்க முடியாது; மேலும், அரசாங்க அலுவல்களைக் கையாள்வதிலும் அவரிடம் விரும்பத்தகாத முரண்பாடுகள் ஏற்படுவதில்லை. நேருவின் நண்பர் எவருமே வசதிபெறாமல் இல்லை என்ற புகார் அடிக்கடி பண்ணப்படுகிறது. புது டெல்லி சர்க்காரைச் சுற்றியுள்ள வட்டாரத்தில் இந்தப் பேச்சு பேசப்படினும், நேரு தேசத் தலைவர்களிடத்தில் கொண்டிருக்கும் அன்பை விட, மக்

கள் மீது கொண்டிருக்கும் அன்புரிமை இதை யெல்லாம் சிதறடித்து விடுகிறது. அவருடைய குறைகள் எல்லாம் அவரைத் தொழும் மக்கள் பொருட்படுத்தாத, சுட்ட விரும்பாத குறைகள். மகாத்மா காந்தியைப் போல் மக்களின் ஏகோபித்த ஈடுபாட்டைச் சம்பாதித்துள்ள பெருந் தலைவர் அவர் ஒருவரே. உள் வீட்டுச் சச்சரவுகள் எத்தனை யிருந்த போதிலும் சர்வஜன சமூகத்தினருக்கும் நம்பகத்துக்குரிய ஸ்தானத்தைச் சம்பாதித்தவர் அவரே.

சுயபலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக, கட்சி பலத்தை உபயோகிக்கும் கைக்கரண வித்தை நேருவிடம் கிடையாது. தேசியப் பதவியில் இரண்டாவது ஸ்தானத்தை வகித்தும், அதில் அதிருப்தி கொள்ளுவதைப் போல் காட்டிக் கொள்ளும் உதவிப் பிரதம மந்திரி சர்தார்பட்டேலுக்கே அந்த வித்தை உரிமையானதாகும். அதே மாதிரி மன நிலைமை ராஜகோபாலாச்சாரியாருக்கும் உரியதே. மகாத்மாவைப்போல் உயரியஸ்தானத்தைப் பெறும் நிலைவந்தாலும் கூட, அவருடைய திறமை வாய்ந்த மனம் திருப்தியடையாது. திட்டமிட்டுச் செயலாற்றும் சர்க்காரை உண்டு பண்ண, தணியாத் தாகம் கொள்ளும் ராஜாஜிபோன்ற மனிதர்களுக்கு அதிகாரமற்ற ஆடம்பரம் சுசப்பைத்தான் காட்டும். திருக்குறள், கீதை முதலிய நூல்களின் தத்துவ விசாரத்தோடு ஒட்டிக்கிடந்து கவர்னர் ஜெனரல் ஆத்ம சாந்தி தேடும்போது, உதவிப் பிரதம மந்திரி இன்னொருவருடைய தலைமையினால் ஏற்படக்கூடிய சங்கடங்களை சமனப் படுத்துவதற்காக, ஆட்சி பீடத்தைத் தமதாக்கிக் கொள்ள வேலை செய்து கொண்டிருக்கிறார்.

எதிரிகளுக்கு எதிராக அணி வகுப்பதில், உதாரணமாக, சமஸ்தானப் பிரசினையில், சில குறிப்பிட்ட வட்டாரங்களில் பிரமாதமான வெற்றி கண்டபோதிலும், சமுதாய நல முன்னேற்றத்தில் சர்க்கார் எதிர்பார்க்கும் அளவுக்கு முன்சென்று வெற்றி கொள்ளவில்லை. ஆதிக்க வேட்டையில் மக்களின் நலம் பிரதானமாகக் கருதப் படவில்லை. பொது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதைக் காட்டிலும் சிலரின் லாபத்தை உயர்த்துவதிலும், பிறரை அமுங்கடிப்பதிலும்தான் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. பொது நலனைப் புறக்கணித்து சுயலாபத்தைப் பெருக்குவதற்காகவே அதிகாரத்தைப் பயன் படுத்த அரசியல்வாதிகள் திட்டமிடுகின்றனர். பொது நலனுக்காக வகுக்கப்பட்ட நிர்மாணத் திட்ட வேலைகளில் ஈடுபடுவதைக் காட்டிலும், லைஸென்சுகளிலும் பெர்மிட்டுக்களிலும் கள்ளமார்க்கெட்டிலும்தான் அதிக ஈடுபாடு கொள்கிறார்கள். மாகாணப் பிரதமர்களும், மாகாணக் காங்கிரஸ் தலைவர்களும், பச்சை வகுப்புவாதப் பரிசேயர்களின் பிற்போக்குத்தனத்தில் மூழ்கிவிட்டார்கள்.

ஒருசிலரைத் தவிர, காங்கிரஸ் வாதிகள் பெரும்பாலோர் காந்திய வழியின் பெருமைகளை மறந்து விட்டார்கள். சொல்லளவில்தான் காந்திஜியின் திருநாமம் கௌரவிக்கப் படுகிறது. செய

ளவில் அவர் சுட்டிக் காட்டிய மகா உண்மைகளின்வழிக்கு முரணுகவே செயலாற்றப் படுகின்றன. காந்தி சகாப்தத்தை நசுக்கும் செயல், சுயநலப் போக்கை மடை திறந்து விடுகிறது. ஸ்தலங்களின் பெயரை மாற்றியமைப்பது போன்ற சிறு பிள்ளைத்தனமான செயல்கள்தான் நிறைவேறுகின்றன. சர்க்காரின் அதிகார வட்டாரத்துக்கு வெளியே உள்ள மாபெருஞ் ஜனக் கூட்டமும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்குரியதான காரியங்கள் வெகு குறைவாகவே செய்யப்பட்டிருக்கின்றன. கடந்தகாலத்தோடு நிகழ்காலத்தை ஒப்பு நோக்கிக் கூறி, அரசியல்வாதிகளைத் தலைமேல் தூக்கி மக்கள் புகழவேண்டும் என்றே வற்புறுத்தப் படுகிறது. மாகாண மந்திரி சபைகள் காங்கிரசுக்குள்ள நல்ல பெயரையும் தொலைத்து, சர்க்காரின் தரத்தையும் இழிவு படுத்துகின்றன. காங்கிரஸின் வசீகர சக்தியின் உச்சம்போய் விட்டது. இறங்கு காலம் காலடி எடுத்து வைத்து விட்டது. எதிர்காலம் ஏனைய கட்சியார்களுக்கே.

✲

## ஆண்களோடு பெண்களும்......

கோளநாட்டு ஒட்டப்பாலத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அங்குள்ள பெண்கள் காந்திஜிக்கு ஒரு உபசாரப்பத்திரம் அளித்தார்கள். அதில் "இந்தத் தாலுகாவிலுள்ள பெண்களாகிய நாங்கள்" என்று தம்மைக் குறிப்பிட்டிருந்தார்கள். காந்திஜி பதிலுரைக்கும்போது, "இந்தப் பத்திரத்தில் ஆண்களைப்பற்றிய குறிப்பே இல்லை. ஆகவே இந்த உள் வீட்டு விவகாரத்தைத் தீர்ப்பதற்காக நான் வரவில்லை. அதை நீங்களே தீர்த்துக்கொள்ளுங்கள் !" என்றார்.

பிறகு பத்திரத்தை ஏலம் போடும்போது, "இதற்கு முதலில் பெண்கள்தான் முன்வர வேண்டும். நீங்கள் இதை எடுக்காவிட்டால், இதை ஆண்கள் தட்டிக்கொண்டு போய்விடுவார்கள்" என்றார்.

கடைசியில் அந்தப் பத்திரத்தை ஒரு பெண்ணே வாங்கினாள்.

## நானும்தான் !

மசூலிப்பட்டணத்தில் காந்திஜி சென்றிருந்தபோது ஒரு கிழவர் தமது ஒட்டைப் பல்லைக்காட்டி, "எனக்கு வயது அதிகமாகிவிட்டதே, நான் எப்படி சேவை செய்யமுடியும்?" என்று கேட்டார்.

பதிலுக்கு காந்திஜி தமது கீழுதட்டை இழுத்து தமது பொக்கை வாயைக் காட்டி "இதற்கென்ன சொல்கிறாய்?" என்று கேட்டு விட்டார்.

## ஒளிவு மறைவு கிடையாது

வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை. நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதில் கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள்.

—ஏசுகிறிஸ்து

# புத்தக உலகம்

**உலக அரங்கு:** [ஆசிரியர்: புதுமைப் பித்தன். கிடைக்குமிடம்: ஸ்டார் பிரசுரம், 71. பெரிய தெரு, சென்னை 5. விலை ரூ 1-8-0]

இப்புத்தகத்தில் ஐந்து நாடகங்களை கதை உருவத்தில் கொடுத்திருக்கிறார் ஆசிரியர். இவற்றில் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் மூன்று; மோலியரின் நாடகம் ஒன்று; ஒன்று இப்ஸனுடைய நாடகம். விஷயங்களைக் கதைப் பாங்கு பெற அமைத்து, அழகிய கம்பீரமான வசனத்தில் எழுதுவதில் ஸ்ரீ புதுமைப் பித்தனுக்குள்ள அரிய திறமை தமிழ் நாடு அறிந்ததே. ஆங்கில மொழியில் இந்த நாடகங்களைப் படித்தவர்களும் கூட இந்த நாடகக் கதைகளைப் படிக்கும் போது ஒரு புதிய இலக்கிய அனுபவத்தைப் பெறும்படியாக இந்நூல் அமைந்துள்ளது.

**மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்**

புத்தகத்தில் எழுத்துப் பிழைகளும் வாக்கியப் பிழைகளும் நிறைய இருப்பது புத்தகத்துக்குப் பெருங்குறை. மற்றப்படி புத்தகத்தை அழகிய முறையில்தான் வெளியிட்டிருக்கிறார்கள்.

**மாக்ஸிம் கார்க்கி:** ஸ்ரீ அ. சிங்கார வேலு இந்நூலை விரிவாக எழுதியிருக்கிறார். இலக்கியத்தின் பாதையை முற்போக்குத் திசையில் திருப்பி விட்ட பெரிய கலைஞர் கார்க்கி. இந்த ருஷ்ய எழுத்தாளரின் சரிதையை எல்லோரும் படிக்கவேண்டியது அவசியம். இந்நூலை எழுதியவர் எல்லா இலக்கியக் கலைஞர்களின் பாராட்டுக்கும் உரியவர். இந்நூலுக்கு ஸ்ரீ சி. எஸ். சுப்பிரமணியம் அழகாக முகவுரை எழுதியிருக்கிறார்.

இதுவும் மேற்படி ஸ்டார் பிரசுர வெளியீடு. விலை ரூ 2-8-0.

**1. முத்தி நிச்சயப் பேருரை**

**2. சைவத் திருமுறைகள்:** [வெளியிட்டோர்: தருமபுர ஆதீனத்தார். விலை தெரியவில்லை]

முதல் புத்தகம் ஆதிகுரு ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய பண்டார சாத்திரங்களுள் ஒன்று. இந் நூலுக்கு மிக விரிவான உரையும் இருக்கிறது.

சைவத் திரு முறைகள் சைவர்களால் பெரிதும் கொண்டாடப் படுவன; சில திருமுறைகள் இலக்கியச் சிறப்பு பெற்றவையும் கூட. அவற்றின் பொதுப்படையான அம்சங்களும், உட்பொருளும் வசனமாக எழுதப்பட்ட புத்தகமே "சைவத் திருமுறைகள்."

சமய ஆராய்ச்சியாளர்களும், பக்தர்களும் பெரிதும் விரும்பும் நூல்கள் இவை.

**திருவாசகத் தேன்:** [பதிப்பு ஆசிரியர்: ராய. சொ. கிடைக்குமிடம்: பாரதி பிக்சர் பாலெஸ், காரைக்குடி. விலை ரூ. 2-8-0.]

மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் இலக்கிய ரசிகர்களும் விரும்பிப் படிக்கும் சிறந்த நூல். அதில் 300 பாக்களைப் பொறுக்கி எடுத்து அவற்றிற்குக் குறிப்புரைகளும் எழுதி இந்நூலை ஆசிரியர் வெளியிட்டிருக்கிறார். சிறந்த பயன் தரும் நல்ல முயற்சி.

**சிவ புராணம்:** [ஆசிரியர்: மாணிக்கவாசக சுவாமிகள். வெளியிட்டோர்: க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார். அன்பளிப்புநூல்.]

ஸ்ரீ ராய். சொ. வின் குறிப்புரையுடன், வெளியிட்டவருடைய மக

ளின் ஞாபகமாக வெளியிடப்பட்டுள்ள இந் நூல் நல்ல நூல்.

**கீத மஞ்சரி :** [ஆசிரியர் : துபாஷ் கே. எம். யாசீன். கிடைக்குமிடம் : ஆசிரியர், அபிராமம், ராமநாதபுரம் ஜில்லா. விலை ரூபா 1.]

பெரும்பாலும் பிற வர்ணமெட்டுக்களைத் தழுவி எழுதப்பட்ட 182 கீதங்கள் இந் நூலில் அடங்கி யுள்ளன. இவை பக்தி, காதல், தேசியம், இந்து முஸ்லிம் ஒற்றுமை போன்ற பல நல்ல விஷயங்களைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட கீதங்கள். நல்ல தமிழில் புனையப்பட்டிருக்கின்றன.

**தமிழ் இசை :** [ஆசிரியர் : ஜெகந்நாதன், கிடைக்குமிடம் : 286, சைனா பஜார் ரோட், சென்னை. விலை ரூபா 1.]

இப் புத்தகத்தில் 52 இசைப் பாடல்கள் உள்ளன. சாதாரணமாக வழங்கும் ராகங்களிலும் அபூர்வ ராகங்களிலும் சாஹித்தியங்களை இயற்றி யிருக்கிறார் ஆசிரியர். பாடல்களில் சொற்சுவையும் பொருட்சுவையும் மிகவும் குறைவு.

**கவிக் கன்னி :** [ஆசிரியர் : நல்லை அ. இளங்கோவன், கிடைக்குமிடம் : "கவிக்கன்னி" நிலையம், கடலை போஸ்டு, கோவில்பட்டி எஸ். ஐ. ஆர். விலை அணா 2.]

கவர்ச்சியற்ற முறையில் 12 பக்கங்களில் வெளிவந்துள்ள இந்த அறிமுக மலரில் பாட்டுக்களும், கட்டுரைகளும் உள்ளன. நோக்கம் நன்று எனினும், செயலும் கவர்ச்சியாக இருக்க வேண்டும்.

**இசைக்கலை மர்மம் :** [ஆசிரியர் : பிடில் ஸ்ரீநிவாஸய்யர். கிடைக்குமிடம் : சக்தி காரியாலயம், சென்னை—14. விலை ரூபா 1.]

சங்கீத சாஸ்திரத்தை மூடு மந்திரமாகப் பேணி மற்றவர்களை மிரட்டுவதும் பல 'ஞானஸ்தர்'களின் வழக்கமாகி விட்டது. ஆனால், இந்த நூலாசிரியர் தெளிந்த தமிழில் இசைக்கலை நுட்பத்தைப் பற்றி யாருக்கும் விளங்கும் வண்ணம் எழுதி நூலை வெளியிட்டிருக்கிறார். அநேக அரும்பெரும் உண்மைகளையும் இசைக்கலையை வளர்க்கும் நல்ல வழிகளையும் இந் நூலில் காணலாம்.

1. Art Gallery 2. Art gallery catalogue of Exhibits. 3. கலா மண்டபம் : [வெளியிட்டோர் : Arts Sub Committee, All India Khadi Swadeshi & Industrial Exhibition, Madras.]

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற கதர் கண் காட்சியில் கலா மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அழகிய ஓவியங்கள் சிலவற்றின் போட்டோக்களும், கலையைப் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களும் முதல் புத்தகத்தில் அடங்கியுள்ளன. மிகவும் அழகான புத்தகம்; ஆங்கிலப் புத்தகம்.

இரண்டாவது புத்தகம் கலா மண்டப ஓவியங்களின் அட்டவணை. விலை ஒரு அணா.

மூன்றாவது புத்தகம் கலாமண்டபத்தைப் பற்றி ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் தமிழில் எழுதியுள்ள விமரிசனம். விலை அணா ஒன்று.

—கு. அ.

**குழந்தை வளர :** [ஆசிரியர் : தி. சு. அவினாசிலிங்கம். கிடைக்குமிடம் : ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோயமுத்தூர். விலை ரூ. 1-4-0.]

நம்மவரில் பலருக்கு குழந்தைகளைப் பெறத் தெரிகிறதே ஒழிய, வளர்க்கத் தெரிவதில்லை. பள்ளிப் படிப்பு முறையும் குழந்தைகள் தலையில் விஷயங்களைத் திணிக்கும் முறையில் இருக்கிறதே ஒழிய, விஷயங்களைக் கிரகிக்கச் செய்யும் நிலையிலில்லை. ஆகவே குழந்தை வளர்ப்பைப் பற்றிய நூல்

கள் தமிழில் வரவேண்டியது அவசியம். இந் நூல் அம்மாதிரியான ஒரு முயற்சி. குழந்தைகளோடு தம் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்த இந் நூலாசிரியர் குழந்தை வளர்ப்பில் உள்ள அனுபவ பூர்வமான சங்கடங்களையும் அவற்றிற்குரிய நிவர்த்தியையும் எளிய முறையில் விளக்குகிறார். இந் நூலை உபாத்தியாயர்களும், பெற்றோர்களும் அவசியம் படிக்கவேண்டும்.

**தீண்டாதான்:** [ஆசிரியர்: முல்க்ராஜ் ஆனந்த். கிடைக்குமிடம்: புதுமைப் பதிப்பகம் லிமிட்டெட், காரைக்குடி. விலை ரூபாய் 3-12-0.]

வெளி நாட்டுப் பிரபலம் பெற்ற இந்திய ஆசிரியர்களில் முல்க்ராஜும் ஒருவர். இவருடைய நூல்கள் யாவும் முற்போக்குப் பாதையில் அடியெடுத்து வைப்பவை. முற்போக்கு இலக்கியம் என்பது ஜன சமுதாயத்தின் கஷ்ட நஷ்டங்களைப் பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாது, அதற்குரிய நிவர்த்தியையும் சுட்டிக் காட்டுவதே யாகும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆனால் முல்க்ராஜின் இந்த நாவல் ஒரு தீண்டாதனின் கஷ்ட நஷ்டங்களைச் சுட்டிக் காட்டுவதோடு நின்றுவிடுகிறது. நாவல் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்ற சம்பிரதாயச் சூத்திரத்தை ஒப்புக்கொண்டால், முல்க்ராஜின் 'தீண்டாதான்' ஒரு நல்ல நாவல்தான். இந்த நாவலில் ஆசிரியர் இந்தியாவிலுள்ள ஒரு 'தீண்டத்தகாதவனின்' வாழ்க்கை, அவனது ஆபாசங்கள், உணர்ச்சிச் சுழிப்புக்கள் முதலியனவற்றைச் சவிஸ்தாரமாகச் சித்தரித்திருக்கிறார். இந் நூலை ஸ்ரீ சே. கணேஷ் தமிழாக்கி யிருக்கிறார். தமிழாக்கம் பரவாயில்லை.

**அஹிம்சா தர்ம கிராமக் குடியரசு:** [ஆசிரியர்: மு. கோ. நாட்டாராயன். கிடைக்குமிடம்: நாட்டாராயன், வடுகபட்டி, அரச்சலூர் P. O. ஈரோடு வழி. விலை ரூ. 1-8-0.]

நூலாசிரியர் தாம் எந்தக் கட்சியின் வாதியும் அல்லவென்றும், தாம் ஒரு லட்சியவாதியே என்றும் குறிப்பிடுகிறார். இந் நூல் முழுதும் அவருடைய லட்சியவாதத்தின் பிரதிபலிப்பே தென்படுகிறது. மார்க்சுக்கு முன்பே தாமஸ் மூர் உட்டோப்பியன் சோஷியலிஸம் என்று ஒன்றைக் கற்பித்தார். எனினும் அது அஸ்திவாரமற்ற சொப்பன உலகம். மார்க்ஸ் தான் சோஷியலிஸத்தை விஞ்ஞான பூர்வமாக விளக்கி அதற்குரிய வழியையும் காட்டினார். இந் நூல் லட்சியவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், சோஷியலிஸ சமுதாய ஸ்தாபனத்துக்கு வழிகோலும் திட்ட வட்டமான பாதைகளையோ, செயல் முறைத் திட்டத்தையோ விளக்கவில்லை. ஆசிரியரின் ஆர்வத்தில் விளைந்த சொப்பன அவஸ்தையாகத்தான் படுகிறது. மேலும் ஆங்காரம் மிகுந்த மேடைப் பிரசங்கத் தோரணையில் எழுதி யிருப்பதால் எழுத்தில் நிதானமும் இல்லை; வாசிப்பவரின் பொறுமையையும் அளவு கடந்து சோதிக்கிறது.

—தொ. மு. சி.

88891

### சந்தோஷம் கிட்டும்

பரிசுத்தமான உள்ளத்துடன் ஒருவன் பேசினாலும், செயல் புரிந்தாலும், சந்தோஷம் நிழலைப்போல அவனைப் பின் தொடரும்.

—புத்தர்

**Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.**
**Associate Editor: G. Alagiriswami.**

# மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல— இது நல்லது !

**தவிர ஜீவசக்தியளிக்கும் விடமின்கள் நிறைந்தது**

போர்ன்-விடாவிலுள்ள நேர்த்தியான சாக்லெட் வாசனை இளையோர் முதியோர் அனைவராலும் விரும்பப்படுவது. அதிலுள்ள கால்ஷியமும் விடமின்களும் உங்கள் எலும்புகளை நன்கு வளரச்செய்து புதிய ஆரோக்யமும் ஜீவசக்தியும் ததும்பச் செய்கின்றன.

## காட்பரீஸ்
# போர்ன்-விடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

# சக்தி வெளியீடுகள்

**இனி நாம் செய்ய வேண்டுவது யாது?** — டால்ஸ்டாய்
உழைப்பவனுக்குத்தான் உணவு உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம். ரூ. 3 0 0

**அபேதவாதம்** — ராஜாஜி
பொது உடமைத் தத்துவத்தை இந்திய முறையில் ராஜாஜி விளக்கி இருக்கிறார். ரூ. 1 0 0

**அறிஞர் மார்க்ஸ்** — ஆர். ராமனுதன்
உலகத்தை உய்விக்கத்தோன்றிய மகான் மார்க்ஸின் கொள்கையும் வரலாறும் ரூ. 1 8 0

**ஏசுநாதர் போதனை** — ஜே. ஸி. குமரப்பா
ஏசுபெருமான் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனையால் மக்கள் அடையக்கூடிய பயன்களையும் விளக்குகிறது இந்நூல். மகாத்மாவின் அருமையான முன்னுரையும் இருக்கிறது. ரூ. 1 8 0

**ரத்தக் களரி** — நேதாஜி
இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அவ்வப்பொழுது பேசிய பிரசங்கங்களின் தொகுப்பு உக்ரமிக்க பேச்சுக்கள் சக்தி மோஹன் மொழி பெயர்த்தது. ரூ. 1 8 0

**சூரிய நமஸ்காரம்** — டி. வி. திருவேதி
சூரிய நமஸ்கார முறைகள், மந்திரங்கள், நியமங்கள் இவைகளால் ஏற்படும் நன்மைகள் அடங்கியிருக்கின்றன. ரூ. 1 0 0

**பாரதியார் சரித்திரம்** — செல்லம்மா பாரதி
மகாகவி பாரதியாரைப் பற்றி அவருடைய மனைவி சொல்லும் வரலாறு. ரூ. 2 0 0

## சக்தி காரியாலயம், சென்னை 14

# சக்தி வெளியீடுகள்

**செல்வம்** — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம் 1 8 0

**லெனின் பிறந்தார்** — ஆர். ராமனுதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப்புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும் 3 8 0

**உலோகங்களும் நாமும்** — மு. அருணசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன ரூ. 5 0 0

**உணவுப் பஞ்சம்** — மு. அருணசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வாராதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 0 0

**ஐந்தாவது சுதந்திரம்** — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினன்கு கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக் கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமைத் தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள்தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

## சக்தி காரியாலயம், சென்னை 14

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபன

# மதுரை மில்ஸ் கம்பெ

## லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்ப 80 வ நூல்கள் |

o

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

o

## ஏ. & எப். ஹார்வி லிமிடெ

மானேஜர்கள்